விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித
தபால்கள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
(சீ-109)
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 05 ஞாயிற்றுக்கிழமை (22.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 307

## மகா சங்கத்தினரை தவறாக வழிநடத்தப் பார்க்கிறார்கள்

### வவுனியாவில் மைத்திரி தெரிவிப்பு

(குருமன்காடு)

**ஊடகங்கள் வாயிலாக மக்களை மட்டுமல்ல; மகா சங்கத்தினரையும் பிழையாக வழிநடத்தும் போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நாட்டுக்காக தமது பொறுப்புகள் என்னவென்று விளங்கிச் செயற்படுமாறு தான் அவர்களிடம் கேட்டுக் கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி மக்கள் சேவை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டுவரும் நடமாடும் சேவையின் மூன்றாவது நடமாடும் சேவை வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல் 15☛

## தமிழர்களுக்கு எதுவும் கொடுத்துவிடக்கூடாது!

### சிங்களத் தலைவர்களில் ஒரு பகுதியினர் கண்ணும் கருத்துமாக உள்ளனர்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களுக்கு எந்த விதச் சலுகையும் அளித்து விடக்கூடாது என்பதில் சிங்களத் தலைவர்களுள் ஒரு முக்கியமான பிரிவினர் கண்ணும் கருத்துமாக இருந்து வந்துள்ளனர்.



பௌத்த சங்கத்தினரும் 15☛

## பொன்னாலை வீதி அகலிப்பு நட்டஈட்டுக்கு உறுதி பிரதிகளை உடன் கையளிக்க கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

AB21 பண்ணை பொன்னாலை வீதி அகலித்து காப்பெற் வீதியாக உலக வங்கி நிதியுதவியுடன் செய்யப்பட இருப்பதனால் காக்கைதீவு மீன் சந்தையடியில் இருந்து அராலி பாலம் வரை பாதையோரமுள்ள காணி, வயல் என்பவற்றின் உரிமையாளர்கள் தங்கள் உறுதியின் பிரதிகளை சண்டிலிப்பாய் பிரதேச செயலக உரிய கிராம அலுவலரிடமும், அராலி பாலத்திலிருந்து வட்டுக்கோட்டை பொன்னாலை சந்தி வரையில் உள்ள காணி, வயல் உள்ளவர்கள் சங்கானை பிரதேச செயலக உரிய கிராம அலுவலரிடமும் தொடர்பு கொண்டு காணி உறுதிப் பிரதிகளை கையளிக்குமாறு நில அளவைத் திணைக்களத்தினர் கேட்டுக்கொண்டுள் 15☛

## வித்தியா குடும்பத்துடன் ஜனாதிபதி நேற்று சந்திப்பு



15☛

## எதிர்க்கட்சி வரிசையில் இருந்தே அரசிற்கு உறுதுணையாக இருக்கின்றோம்

### இது அனைவருக்கும் தெரியும் என்கிறார் சுமந்திரன்

(கொழும்பு)

அரசாங்கத்தினுடைய முற்போக்கான செயற்திட்டங்கள் அனைத்திற்கும் நாங்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து உதவியாகவும், உறுதுணையாகவும் செயற்பட்டு வருவது அரசாங்கத் தலைவருக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் தெரிந்த விடயம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் சார்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது. 04☛

## அதிக வறுமையில் வடக்கு மாகாணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் வறுமை நிலை குறைவடைந்து செல்கின்றது. எனினும் வடக்கு மாகாணத்தில் வறுமை நிலை அதிகளவில் உள்ளதாக குடிதொகை புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அதிகாரபூர்வ தரவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அந்தத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களுக்கு அமைய 2012/13 15☛

## நாளை தொடக்கம் ரயில் சேவை நாவற்குழி வரை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிய ரயில் சேவைகள் யாவும் நாளை 23-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஒரு வாரத்துக்கு நாவற்குழி வரை மட்டுமே இடம்பெறவுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கும் நாவற்குழிக்கும் இடையிலான ரயில் பாதையில் உள்ள நாவற்குழி 15☛

## மகாநாயக்கருக்கு விளக்கு முன் நாடாளுமன்றில் இணங்க வேண்டும்

### – பிரதமர் ரணில்

(கண்டி)



புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பாக பொதுமக்களுடன் கலந்துரையாடுவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என 15☛

## உங்களுக்கு எங்கள் கதவு எப்போதும் திறந்தேயுள்ளது

### இந். தூதுவர் நடராஜன் தெரிவிப்பு

(பரந்தன்)

இந்திய வம்சாவளி மக்களுக்காக எங்களுடைய கதவுகள் எப்பொழுதும் திறந்தே இருக்கும் என யாழ். இந்திய துணை தூதுவர் ஆர். நடராஜன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி பன்னங்கண்டி கிராமத்தில் இடம்பெற்ற வயலும் வாழ்வும் மக்கள் கலந்துரையாடல் நிகழ்வில் இந்திய வம்சாவளி மக்கள் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டரை வருடங்களாக யாழ் இந்திய துணை 15☛

Easy Booking
யாழ்/கொழும்பு
சொகுசு பஸ்
0777184901
ஆசன பதிவுகளுக்கு:
16/1, புதிய மாநகர சபை,
கட்டடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(1090)

## அரசியல் கைதிகள் விடயத்தில் தவறிழைத்தால் பாரிய தாக்கம் ஏற்படும்

### இரா.சம்பந்தன் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசியல் கைதிகளின் விடயத்தில் தவறிழைக்கப்படும் பட்சத்தில் அது, நல்லிணக்க படிமுறைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டமானது மிகவும் கேடானதும், இலங்கை சட்டப்புத்தகங்களிலிருந்து நீக்கப்பட வேண்டிய ஒன்றென இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ள போது, அதே சட்டத்தின் 04☛



## கொக்குவில் சந்தியில் கடை மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர்கொண்ட வாள்வெட்டுக் குழுவினர் நேற்று மாலை 6.30 மணியளவில் யாழ். கொக்குவில் பகுதியில் உள்ள தையல் கடை மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது கடைக்குள் ஊழியர்கள் பணியில் ஈடுபட்டிருந்த போதும் அவர்கள் உடனடியாக ஓடித்தப்பியதில் உயிர்ச் சேதம் ஏற்பட 15☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்டியல் உடைப்பு முயற்சி; சிறுவன் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அரசடி விநாயகர் ஆலயத்தில் உள்ள உண்டியலை உடைக்க முற்பட்டதாக தெரிவித்து சிறுவன் ஒருவன் நேற்று காலை ஆலய நிர்வாகத்தினரால் பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

14 வயதுடைய சிறுவன் ஒருவனே இவ்வாறு பொலிஸாரிடன் ஒப்படைக்கப்பட்டதுடன், அவன் வைத்திருந்த பையினுள் கத்தி மற்றும் சுத்தியல் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவித்து பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில்,

மேற்படி சிறுவன் நேற்று அப்பகுதியில் நடமாடியதாகவும் பின்னர் ஆலயத்தின் உண்டியலை உடைக்க முற்பட்டபோது ஆலய நிர்வாகத்தினர் பிடித்து வைத்துள்ளனர்.

பின்னர் கோப்பாய்ப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட போது, குறித்த சிறுவன் தனது காலில் தானாகவே காயம் ஏற்படுத்தியும் உள்ளான். பொலிஸார் வந்து விசாரணைகளை மேற்கொண்ட போது, மேலும் இருவர் தன்னுடன் வந்ததாக தெரிவித்துள்ளான். அவர்கள் தொடர்பான விபரங்களை பெறுவதற்கு கோப்பாய் பொலிஸார் குறித்த சிறுவனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றுள்ளனர்.

இச் சிறுவன் இதே போன்று நேற்று முன் தினமும் அப்பகுதியில் நடமாடிய போது அப்பகுதி இளைஞர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதாக அப்பகுதி இளைஞர்கள் தெரிவித்திருந்தனர். (மு-9)

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us cnrworldwideexpress

(C-108)

## அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தானத்தின் உள்வீதி முழுவதற்கும் கொட்டகை அமைப்பதற்கான விண்ணப்பம் கோரல்

ஆலய விதிமுறைமைகளுக்கு அமைவாக இரும்பினாலும் சீற்றினாலும் கொட்டகை அமைப்பதில் அனுபவம் உள்ள ஒப்பந்த முறையில் திருப்பணி செய்பவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

01.விண்ணப்பம் எதிர்வரும் 30.11.2017 வியாழக்கிழமைக்குள் கிடைக்க வேண்டும் (செயலாளருக்கு)

02.திருப்பணி நிலைமையை தினமும் பார்வையிடலாம்.

03.மேலதிக விபரங்களுக்கு:-

| | |
|---|---|
| 0777279426 | தலைவர் |
| 0776366158 | செயலாளர் |
| 0771141600 | பொருளாளர் |
| 0776569651 | உபசெயலாளர் |

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(சி-129)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## வேலையாட்கள் தேவை

புத்தளத்தில் தென்னந்தோட்டம் ஒன்றில் வேலை செய்வதற்கு வாகன சாரதியும் கூலியாளும் தேவை.
(குடும்பத்துடன் தங்கி நிற்கும் வசதி உண்டு)

தொடர்புகளுக்கு: 077 798 2871

(1092)

## வேலையாட்கள் தேவை

டிரைவர், தோட்டவேலை, விற்பனையாளர் போன்ற வேலைகளுக்கு வேலையாட்கள் தேவை.

(யாழ்/மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
0773463332

(சி-131)

## பணிப்பெண் தேவை

சிறிய, குடும்பத்துக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு:-0779238376

(1090)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு

45 நாள்கள் நிரம்பிய தடுப் பூசி போடப்பட்ட டோமன் (DOBERMAN) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
0777730590

(சி-134)

## 31ஆம் நாள் நினைவலைகள்



திருமதி
**கேசவன் மகேஸ்வரி**

வட மாகாண சபை உறுப்பினர்
கௌரவ கேசவன் சயந்தன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி கேசவன் மகேஸ்வரியின்
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்போமாக.

வினோபா
பாலர் பகல் இல்லம்
நண்பர் குழாம்
வினோபா நகர், கச்சாய்

(சி-132)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு மிக அருகில் கந்தர்மடம், அரசடி வீதியில் வீடு வாடகைக்குண்டு. 3 அறைகள் மற்றும் இணைந்த குளியலறையுடன் புதிதாக மீள்நிர்மாணம் செய்யப்பட்டது.

0775590577

தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

(1095)

## கோழிக்குஞ்சு விற்பனை

கிளிநொச்சியில் கிறீன்வெலி புறோயிலர் இறைச்சி கோழி குஞ்சுகள் 03.11.2017 அன்று விநியோகிக்கப்படும். விலை 88/- ரூபா.

தொடர்பு:-
0779337287

(சி-133)

## வீணைகள் தேவை

பாவித்த, பழுதடைந்த வீணைகள் விலைக்கு வாங்கப்படும்.

தொடர்பு:-
0779238376

(1090)

## கனரக வாகன சாரதி தேவை

கனரக வாகன சாரதி (AD) உடன் தேவை. அனுபவம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

077 203 0309

(1094)

## அமெரிக்க நிறுவனத்தின் சவூதி அரேபிய கிளையில் வேலைவாய்ப்பு

McDonald's



**Service Crew**
**உணவு பரிமாறுநர்** — 150 பேர்

(அனுபவம் அவசியமில்லை)
சம்பளம்: SR 1150 - ரூ. 47,150 + உணவு (பணிநேரம்)
இலங்கை Mc Donalds, Pizza Hut, KFC கிளைகளைப் போன்றே வாடிக்கையாளர் சேவை அடிப்படையிலான வேலை

**Maintenance Man**
**சுத்திகரிப்பு உதவியாளர்** — 50 பேர்

(அனுபவம் அவசியமில்லை)
சம்பளம்: SR 1250 - ரூ. 51,250 + உணவு (பணிநேரம்)

(சி-135)

Terms & Conditions (விதிமுறைகளும், நிபந்தனைகளும்)

- உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதி நிறுவனத்தினால் வழங்கப்படும்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியாலப்படி வாரத்தில் 48 மணிநேர வேலை. வாரத்தில் ஒருநாள் விடுமுறை.
- மீளப் புதுப்பிக்கத்தக்க 2 வருட ஒப்பந்தம்
- ஒப்பந்த காலம் முடிந்ததும் 42 நாள் விடுமுறையுடன் நாடு திரும்பவதற்கான இலவச விமானப் பயணச்சீட்டு
- சவுதி அரேபியச் சட்டத்துக்கு அமைவாக மேலதிக வேலைநேர கொடுப்பனவு மற்றும் ஏனைய சலுகைகள்.

SLBFE Approved Charges
Only 38,500/-
A L 0742/0064/16

அடிப்படை ஹொட்டேல் மற்றும் ஆங்கிலமொழிப் பயிற்சி வழங்கப்படும்.

நவம்பர் முதல் வாரத்தில் வெளிநாட்டு முகவர்கள் மூலம் நேர்முகத்தேர்வு.

SR 01 = 41/= (நாணயமாற்றுப் பெறுமதிக்கேற்ப மாற்றமடையலாம்)


உடன் பதிவுகளுக்கு ☎ 0777 324 004

TGL SINCE 1990
Trans Gulf (Pvt) Ltd.,
90, First Floor, Chatham Street, Colombo 1
T.P.: 0114426222 www.tgl.lk

SIKARAM ACADEMY
Business · Hospitality · Media
FAST TRACK to CAREERS
175, 1ம் குறுக்குத்தெரு, (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 - 222 00 11 www.sikaram.lk

## இருபதாம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர்
**நவரத்தினசாமி குருசாமி**



திதி:-22.10.2017

அன்பின் திரு உருவே எங்கள் அப்பா
ஆண்டுகள் இருபது இருண்டிங்கு போனாலும்
நித்தம் எம் நெஞ்சுறையும் தெய்வம் நீர்
எம் வாழ்விற்கு ஒளி தந்த வள்ளலே
எத்தனை ஜென்மங்கள் மாண்டிங்கு போனாலும்
வற்றாத நீரூற்றாய் எம் சிந்தை நிறைந்திருப்பீர்
என்றும் உங்கள் ஆத்மா சாந்திக்காய்
வேண்டுகின்றோம் ஆண்டவனை.

-குடும்பத்தினர்
கும்பளாவளை, அளவெட்டி.

தோற்றம்:-29.06.1932
மறைவு:-03.11.1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து வெட்கித் தலைகுனிய வேண்டும்

## அரசின் அவல நிலையால் அமைச்சர் எஸ்.பி.விரக்தி



(கொழும்பு)

ஊழலற்ற இலங்கையை உருவாக்குவோம் என்று உறுதியளித்து இன்று ஆட்சியில் அமர்ந்திருக்கும் நல்லாட்சி அரசாங்கம், அதன் ஆட்சியில் வெளிவரும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து வெட்கித் தலைகுனிய வேண்டும் என்று, சமூக முன்னேற்ற, நலன்புரித்துறை மற்றும் கண்டி பாரம்பரியத் துறை அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், பிணைமுறி விவகாரத்துக்கும், பணப்பரிமாற்றல் மோசடிக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் இருக்கலாம் என்றும் ஊகம் தெரிவித்துள்ளார்.

இவை இரண்டும், நல்லாட்சி அரசாங்கத்தில் இது வரை வெளிவந்திருக்கும் மிகப் பெரிய ஊழல்கள் என்று கூறியுள்ள அமைச்சர், இது போன்ற குற்றச்சாட்டுக்களில் குற்றவாளிகளுக்குப் போதுமான தண்டனை வழங்கப்படுவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## நாட்டுக்காக நிகழ்ச்சி திட்டத்துடன் இணையுமாறு புத்திஜீவிகளுக்கு ஜனாதிபதி மைத்திரி அழைப்பு

(கொழும்பு)

நாட்டின் சவால்களை வெற்றிகொள்வதற்கு தமது அறிவு மற்றும் அனுபவங்களுடன் கூட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றுடன் இணையுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனைத்து கல்விமான்கள் மற்றும் புத்திஜீவிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.



நேற்று முன்தினம் பிற்பகல் பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஏட்ஜ் ஹோட்டலில் நடைபெற்ற "ஸ்ரீ ஜயவர்தனபுர பிரதீப பிரணாம" விருது விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் முன்னேற்றப் பயணத்திற்கு கல்விமான்கள் மற்றும் புத்திஜீவிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணி இன்று எவ்வளவு தூரம் நிறைவேற்றப்படுகிறது என்பது கேள்விக்கிடமாக வுள்ளது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அனைத்துப் பொறுப்புக்களும் அரசியல்வாதிகளிடம் மட்டும் விட்டுவிடப்படுவதாக சமூகத்தில் நிலவும் பிழையான கருத்து விரைவில் சரி செய்யப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

ஒரு நாட்டின் முன்னேற்றப் பயணத்தில் கல்விமான்கள் மற்றும் புத்திஜீவிகளின் குரல் அத்தியாவசியமானதாகும் என்பதுடன், அவர்கள் தாமதமின்றி தமது பொறுப்புக்களை நிறைவேற்ற முன்வர வேண்டுமென ஜனாதிபதி கல்விமான்கள் மற்றும் புத்திஜீவிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

இனப்பிரச்சினையிலும், நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டத்திலும் சிறந்ததோர் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு கல்விமான்களும் புத்தி ஜீவிகளும் பக்கசார்பற்ற வகையில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும். ஏனைய சமூக பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவர்களது அறிவு மற்றும் அனுபவம் மிகவும் முக்கியமானதாகும்.

எமது நாடு கல்விமான்களை உருவாக்குவதில் எந்த வகையிலும் பின் நிற்காத போதும், நாடு குறித்து சிந்திக்காது கல்விமான்களும் புத்திஜீவிகளும் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வது அபிவிருத்தி நடவடிக்கைகளில் பாரிய சவாலாக மாறியிருக்கிறது. அரசியல்வாதிகள் என்ற வகையில் அதற்குத் தீர்வு வழங்க முற்படுகையில் அதனை அரசியல் சார்பானது என சிலர் அடையாளப்படுத்த முயற்சித்து வருகின்றனர்.

எவ்வாறானபோதும் கல்விமான்கள் மற்றும் புத்திஜீவிகள் தாய் நாட்டுக்காக தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான தருணம் உருவாகியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழத்தில் இருந்து உருவான திறமைவாய்ந்தவர்களை பாராட்டுவதற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் 42 பேருக்கான விருதுகளை ஜனாதிபதி வழங்கி வைத்தார்.

சங்கைக்குரிய திவியாகத யஸஷ்சி நாயக்க தேரர், சங்கைக்குரிய ஓமல்பே சோபித தேரர், அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, முன்னாள் அமைச்சர் மகிந்த விஜேசேகர ஆகியோர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி சம்பத் அமரதுங்க, ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் டபிள்யு. கே. எச். வேகபிட்டிய, அதன் செயலாளர் கலாநிதி அபேரத்ன பண்டார, தேசிய அமைப்பாளர் ரஞ்சித் இத்தமல்கொட ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

## வறுமை நிலையில் வடக்கு முதலிடம்

வடக்கு மாகாணத்தில் வறுமை நிலை அதிகளவில் உள்ளதாக இலங்கையின் சனத்தொகை புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அதிகாரபூர்வ தரவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

2012/13, காலப்பகுதியில், 6.7 வீதமாக இருந்த இலங்கையின் வறுமை நிலை, கடந்த ஆண்டில், 4.1 வீதமாக குறைந்துள்ளது.

கடந்த ஆண்டில், 4,166 ரூபாவுக்கு உட்பட்ட தனிநபர் ஒருவரின் மாதாந்த செலவினம், வறுமைக் கோட்டு எல்லையாக அதிகாரபூர்வமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2012/13 இல், 3,624 ரூபாவாக இருந்தது.

2012/13இல், மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 1.3 மில்லியனாக இருந்த வறுமை நிலையில் இறந்தவர்களின் தொகை, 2016இல், 843,913 ஆக குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு புள்ளிவிபரங்களின்படி, மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில், 3.1 வீதமான (169,392) குடும்பங்கள் வறுமை நிலையில் உள்ளன.

அதிகபட்சம் வறுமை நிலை சுட்டெண்ணைக் கொண்டதாக கிளிநொச்சி மாவட்டமும், குறைந்தபட்ச வறுமை நிலை சுட்டெண்ணைக் கொண்டதாக கொழும்பு மாவட்டமும் காணப்படுகின்றன.

கண்டி மாவட்டத்திலேயே வறுமை எல்லைக்குக் கீழ் உள்ள மக்கள் அதிகளவில் உள்ளனர். மன்னார் மாவட்டத்தில், வறுமை எல்லைக்கு கீழ் உள்ள மக்கள் குறைந்தளவில் உள்ளனர்.

மாகாண அடிப்படையில், குறைந்தபட்ச வறுமை சுட்டெண்ணைக் கொண்டதாக மேல் மாகாணம் உள்ளது. இங்குள்ள மொத்த மக்கள் தொகையில், 1.7 வீதமானோர் (101,342) வறுமை நிலையில் உள்ளனர்.

வடக்கு மாகாணம் அதிகபட்ச வறுமை சுட்டெண்ணைக் கொண்டதாக உள்ளது. இங்கு, 7.7 வீதமான மக்கள் (83,834) வறுமை நிலையில் உள்ளனர்.

மாவட்ட அடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டத்தில், அதிகபட்சமாக வறுமை நிலை 12.7 வீதமாக உள்ளது.(இ-7)

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மீள யாழில் போராட்டம்

(கொழும்பு)

தமது வழக்குகளை அநுராதபுரத்தில் இருந்து மீளவும் வவுனியாவுக்கு மாற்றக் கோரி 25 நாட்களாகத் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக "உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் உயிர்களைப் பறிக்காதே!", "அவர்களின் வழக்குகளை அநுராதபுரத்தில் இருந்து வவுனியாவுக்கு மாற்று!", "அனைத்து அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பில் விடுதலை செய்!" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் யாழ்ப்பாண பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்னால் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினரால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என அக்கட்சியின் வடபிராந்திய செயலாளர் செல்வம் கதிர்காமநாதனால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## 13 கிலோ கேரள கஞ்சா கிளிநொச்சியில் மீட்பு

(கிளிநொச்சி)


கிளிநொச்சி பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு பதின் மூன்று கிலோ 730 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி தொண்டமான்நகர் பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்ட குறித்த கஞ்சா பொதி பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்கு கிடைத்த தகவலிற்கமைய கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் வெலிக்கன்னவின் விசேட மதுஒழிப்பு பிரிவினரின் விசேட தேடுதலிற்கமைய



குறித்த கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. குறித்த சந்தேகநபரையும், மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளையும் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர். (8-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளை புரட்டி எடுத்த இந்தியாவை அசைத்து பார்க்குமா நியூசிலாந்து?



இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளை பந்தாடி வெற்றிக் களிப்பில் மிதக்கும் விராட் ஹோலியின் இந்தி யாவை நியூசிலாந்து அசைத்து அதிர்ச்சி வைத்தியம் அளிக்குமா? என்று இரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்க் கிறார்கள்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 ஒரு நாள், 3 'ரி20' போட்டிகள் கொண்ட தொட ரில் பங்கேற்கிறது. முதல் போட்டி இன்று மும்பையின் வான்கடே மைதானத்தில் நடக்கிறது.

இந்திய அணியை பொறுத்தவரை, 2013இல் சொந்த மண்ணில் பாகிஸ்தானி டம் (1-2) வீழ்ந்தது. பின், இங்கு விளை யாடிய 9 ஒரு நாள் தொடரில் ஒன்றை மட் டுமே (எதிர்- தென்னாபிரிக்கா, 2-3) இழந் தது. சமீபத்தில், உலக சம்பியன் அவுஸ்தி ரேலியாவை (4-1) சாய்த்தது.

**ரோகித் அபாரம்**

அவுஸ்திரேலிய தொடரில் ஒரு சதம், இரண்டு அரை சதம் அடித்த ரோகித் அபார 'போர்மில்' இருக்கிறார். தவான் மீண்டும் அணியில் இணைந்துள்ளதால், ரகானே இடம் கேள்விக்குறிதான். மணிஷ் பாண்டே, ஜாதவ் இருந்தாலும் பொறுப்புடன் செயல்பட மறுக் கின்றனர். அணித் தலைவர் ஹோலி, கடந்த ஆண்டு இதே நியூசிலாந்துக்கு எதிராக 154 ஓட்டங்கள் (மொகாலி, 3ஆவது போட்டி) விளாசினார். இந்த வாண்வேடிக்கையை ரசிகர்கள் மீண்டும் எதிர்பார்க்கின்றனர். அவுஸ திரேலிய தொடரில், அதிக ஓட்டங்கள் (5 போட்டி, 222 ஓட்.) குவித்த மூன்றாவது இந்திய வீரராக ஹர்திக் பாண்ட்யா திகழ்ந் தார். நடுத்தர வரிசையில் பின் வரிசை என எந்த இடத்திலும் அணியை கரை சேர்ப்பதில் கைதேர் ந்தவராக உள்ளார். கடந்த தொட ரில், ஏமாற்றிய (5 போட்டி, 100 ஓட்.) தோனி இம்முறை விளாச வேண்டும்.

**அசத்தும் 'சுழல்'**

அவுஸ்திரேலிய தொடரில் இளம் சுழற் பந்துவீச்சாளர்களான குல்தீப் (4 போட்டி, 7 விக்.,), சகால் (4 போட்டி, 6 விக்.,) தேர்வை நியாயப்படுத்தினர். 'சீனியர்' அஷ்வின், ஜடேஜா இல்லாததை சற்றும் நினைவுபடுத் தாமல் அசத்துகின்றனர். அக்சர் படேல் துடுப் பாட்ட வீரர்களுக்கு அதிர்ச்சி தரலாம்.

வழக்கம்போல, எதிர ணியை 'வேகத் தில்' சீர் குலைக்க புவனேஷ்வர், பும்ரா இருக் கின்றனர். கடைசி கட்ட பந்துவீச்சில் அசத் தும் இவர்களின் செயல்பாடு மீண்டும் முத் திரை பதிக்க வேண்டும்.

**பலம் தரும் லைதம்**

நியூசிலாந்து அணிக்கு கப்டில், லைதம் என ஆரம்ப ஜோடி பலம் சேர்க்கிறது. 2 ஆவது பயிற்சி போட்டியில் சதம் அடித்த லைதம், ரெய்லர் மீண்டும் கைகொடுக்க வாய்ப் புள்ளது. இளம் அணித் தலைவரான வில் லியம்ஸன், முன்ரோ அசத்தினால் இந்தியா வுக்கு நெருக்கடி தரலாம். ஆனால், கடந்த சம்பியன்ஸ் டிராபிக்குப்பின் (ஜூன் 2017) நியூசிலாந்து அணி எந்த ஒரு நாள் தொட ரிலும் விளையாடாதது, பாதிப்பை தருமா என இன்று பார்க்கலாம். வேகப்பந்து வீச்சில் போல்ட், சௌதிக்கு அனுபவம் அதிகம் என்பது இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு சிக்கல்தான். சான்ட்னர், சோதி 'சுழலில்' நெருக்கடி தர வாய்ப்புள்ளது.

**இதுவரை...**

இரு அணிகளும் இதுவரை 12 ஒரு நாள் தொடரில் மோதி உள்ளன. இதில் இந்தியா 6, நியூசிலாந்து 4 தொடரை கைப்பற்றின. இரண்டு தொடர் சமனிலையானது. இந்திய மண்ணில் இரு அணிகளும் இதுவரை 5 தொடரில் (1988,95, 99, 2010, 16) விளை யாடி உள்ளன. இதில் அனைத்தை யும் வென்று இந்திய அணி ஆதிக்கம் செலுத்துகிறது.

இரு அணிகளும் 98 ஒரு நாள் போட்டி களில் மோதி யுள்ளன. இதில் இந்தியா 49, நியூசிலாந்து 43ல் வாகை சூடின. ஒரு போட்டி சமனிலையானது. 5 போட்டிக்கு முடிவில்லை.

இரவு 7 மணிக்கு தொடங்கும் இந்த ஆட் டம் ஸ்ரார் ஸ்போர்ட்ஸ், தூர்தர்சனில் நேர டியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

## அரசியல் கைதிகள்...

கீழ் கைது செய்யப்பட்டவர்களை தொடர்ந் தும் சிறையில் எவ்வாறு தடுத்து வைக்க முடி யும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலை வர் இரா.சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் உண்மை, நீதி, நட்டஈடு மற்றும் மீள்நிகழாமையை உறுதி செய்வதற்கான விசேட நிபுணர் பப்லோ டி க்ரீப்புடனான சந்திப்பின் போதே அவர் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக் கும், ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணருக் கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், காணி விடுவிப்பு, காணாமல் ஆககப்பட்டோர் விவகாரம் என பல விடயங் கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ள தாக அந்த அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்களில் தவறிழைக்க முடி யாது எனவும், அவ்வாறு தவறிழைக்கப் படும் பட்சத்தில் அது, நல்லிணக்க படிமுறை களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என வும் இதன்போது இரா.சம்பந்தன் வலியுறுத் தியுள்ளார்.

நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத் திற்கும் இலங்கை அரசு வழங்கிய வாக் குறுதி நிறைவேற்றப்படுவதை ஐக்கிய நாடு கள் சபை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, காணி விடுவிப்பு தொடர் பில் உணர்ச்சிக்கும் அப்பாலான இணைப் பினை மக்கள் கொண்டுள்ளதாவும் இரா. சம்பந்தன் கூறியுள்ளார்.

சில பகுதிகளில் தமது காணிகளை விடு விக்குமாறு வலியுறுத்தி 300 நாட்களுக்கு மேலாக மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடு கின்றமையையும் அவர் நினைவுப்படுத்தி யுள்ளார்.

இந்த போராட்டங்கள் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு உரிமைகளுடன் தொடர்பு பட்டவையாக கருத வேண்டும் எனவும் விசேட நிபுணர் பப்லோ டி க்ரீப்பிடம் இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

படையினரிடமோ, பொலிஸாரிடமோ தனது மகனை கையளித்த தாயொருவ ருக்கு அந்த மகனுக்கு என்ன நடந்தது என் பதை அறிந்துக் கொள்வதற்கான உரிமை உள் ளது எனவும், அதனை மறுக்க முடியாது எனவும் இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலு வலகம் ஸ்தாபிக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் குறிப்பிட்டுள்ள இரா. சம்பந்தன் அந்த அலுவலகம் வடக்கு கிழக் கில் நிறுவப்படல் வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் பப்லோ டி க்ரீப் பிடம் சுட்டிக்காட்டியுள்ளார். (மு-11)

## எதிர்க்கட்சி வரிசை...

நடமாடும் சேவை ஊடாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பல இடங்களிலேயே இந்த நாட்டு மக்களுக்கு நன்மைகளை செய்து வருகின்றது. வவுனியா மாவட்டம் ஒரு முக்கியமான மாவட்டம். தமிழ் பேசும் வடக்கு மாகாணத்தில் வாசல்படியாக அமை ந்திருக்கும் மாவட்டம். இந்த மாவட்டத்திலே தமிழ் மொழி பேசும் மக்களுடன் சிங்கள மொழி பேசும் மக்களும் வாழ்கிறார்கள். இந்த நாட் டிலே ஒரு இன ஐக்கியம் ஏற்பட வேண்டும் என்பதற்காக புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த தேசிய அரசாங்கத்தின் இந்த மாவட் டத்தில் செயற்படுவதை நாம் முக்கியமான தொன்றாக பார்க்கிறோம்.

இந்த அரசாங்கம் உருவாவதற்கு வடக்கு மாகாண மக்கள் ஆற்றிய பங்களிப்பு என்பது அனைவருக்கும் தெரிந்தது. வடமாகாணத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே மற்ற மாகா ணங்களை விட இந்த அரசாங்கம் உரு வாக வடக்கு மாகாணம் அதிகம் காரண மாக இருந்திருந்தாலும் கூட வடக்கு மாகா ணத்தின் பிரதானமான கட்சி அரசாங் கத்தில பங்காளிகளாக சேரவில்லை. ஆனால அரசாங்கத்தினுடைய அத்தகைய முற்போக் கான செயற்திட்டங்கள் அனைத்திற்கும் நாங்கள் உதவியாக, உறுதுணையாக செயற பட்டு வருவது அரசாங்கத் தலைவருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இந்த நாட்டிலே நிறைவான ஒரு அரசி யல் தீர்வு கிடைக்க வேண்டும். அது கிடைக் கிற வரைக்கும் எங்களுடைய மக்களுக்கும் அரச அதிகாரங்கள் சரியான முறையிலே பகிர்ந்தளிக்கப்படுகின்ற வரைக்கும் நாங்கள் அரச அதிகாரங்களை கையாளமாட்டோம் என்ற கொள்கை முடிவோடு எதிர்க்கட்சி வரிசை யில் இருக்கிறோம். ஆனால் அப்படியான ஒரு முடிவை எதிர்பார்த்து இந்த அரசாங்கம் ஒரு பயணத்தை செய்து வருவதை நாங்கள் வரவேற்கிறோம். அந்த வேலைத்திட்டத்தில் எங்களுடைய முழுமையான பங்களிப்பை நாங்கள் செய்து வருகிறோம். இந்த நாட் டிலே அனைத்து மக்களும் முதல் தடவை யாக ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு அரசிய லமைப்பு உருவாகின்ற நடவடிக்கையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி வரி சையில் இருந்து [illegible] மில்லாத முழு[illegible] கொண்டிருக்கின்றது.

அது சரியான முறையில் நிறைவேறி னால்தான் இத்தகைய வேலைத் திட்டங் களி னுடைய முழுப் பெறுமதி யையும் நாங் கள் அடையக் கூடியதாக இருக்கும்.

இந்த நடமாடும் சேவை மூலம் வழங் கப்படுகின்ற சேவைகள் இந்த மக்களுக்கு அத்தியாவசியமான சேவைகள். இந்த நாடு சுதந்திரம் பெற்றத்தில் இருந்து இந்த நாட் டிலே வாழுகின்ற அனைத்து மக்களும் சம பிரஜைகள் என்று வாழ்வதற்கான அத்திபார மாக போடப்பட வேண்டிய புதிய அரசியல மைப்பு உருவாக் கம்தான் இறுதியாக இந்த நாடு சுபீட்சம் அடைவதற்கும், ஒரு புதுப் பாதையில் பயணிக்க ஆரம்பிப்பதற்கும் அத்திபாரமாக இருக்கும்.

ஆகவே அந்த வேலைத் திட்டத்தையும் தற்போது ஆரம்பித்திருக்கின்ற ஜனாதிபதிக கும் பிரதம மந்திரிக்கும் வாழ்த்துக்களை கூறி அதை திறப்பட செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். (மு-250)

## மோ.சைக்கிள் மோதி சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியைக் கடக்க முற்பட்ட சிறுவன் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடை ந்த சிறுவன் கோமா நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரு கின்றான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் 4 மணி யளவில் பூநகரி ஆலங்கேணியடி வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த தேவராசா மதூசன் (வயது-4) என்ற சிறுவனே படுகாய மடைந்தவனாவான்.

படுகாயமடைந்த சிறுவன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளான்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (மு-30)

## ◀ தரம் 5 புலமைப்பரிசில் ▶
## தேசிய ரீதியில் வடக்கு 2ம் இடம்


ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வெட்டு புள்ளிகளின் அடிப்படையில் தேசிய மட்டத்தில் வடக்கு மாகாணம் இம் முறை இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இம்முறை வடக்கு மாகாணத்தில் மொத் தமாக 20 ஆயிரத்து 500 பேர் பரீட்சைக்குத் தோற்றி இருந்தனர்.

அதில் ய்ாழ் கல்வி வலயத்தில் 529 பேரும் தீவகக் கல்வி வலயத்தில் 37 பேரும் வலிகாமம் கல்வி வலயத்தில் 301 பேரும் வடமராட்சி கல்வி வலயத்தில் 269 பேரும் தென்மராட்சியில் 96 பேரும் கிளிநொச்சி கல்வி வலயத்தில் 228 பேரும் துணுக்காய் கல்வி வலயத்தில் 42 பேரும் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 219 பேரும் மடு கல்வி வலயத்தில் 32 பேரும் மன்னார் கல்வி வல யத்தில் 122 பேரும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 286 பேரும் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 64 பேரும் மொத்தமாக வடக்கில் 2 ஆயிரத்து 225 பேர் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இது தேசிய மட்டத்தில் 10.85 வீதம் ஆகும்.

தேசிய மட்டத்தில் கடந்த வருடம் வடக்கு மாகாணம் 4 ஆம் இடத்தை பெற்றிருந்தது. இம்முறை இரண்டாம் இடத்துக்கு முன் னேறியுள்ளது. (மு-9)

## 31ம் நாள் நினைவலைகள்



திருமதி
பேரம்பலம்
நாகமுத்து

நாகத்துக்குள் ஓர் முத்து
நாகத்துக்கோ அது முத்து
நகரமுடியாத அது முத்து

துயருறும் நண்பர் குழாம்
வினோபா பாலர் பகல் இல்லம்
வினோபா நகர், கச்சாய்.

(C-132)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கந்தசஷ்டி விரத கால சுவாமி உலாக் காட்சி (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# மாணவியை நிந்தித்த அதிபர் மீது ஒழுக்காற்று விசாரணை வேண்டும்


## இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

பாடசாலையில் வாந்தி எடுத்த மாணவியை கர்ப்பிணி என தெரிவித்து பாடசாலையை விட்டு வெளியேற்றியதாக கூறப்படும் அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் வட மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த அதிபர் அப்பாவி மாணவியொருவரை சமூகத்தில் கர்ப்பிணி என நிந்தனை செய்துள்ளதாகவும் கல்வி அதிகாரிகள் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அச்சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (இ-7)

# நடுக்கடலில் விபத்துக்குள்ளான இந்தியக் கப்பல் பணியாளர்களை காப்பாற்றிய இலங்கைக் கடற்படை



(கொழும்பு)

நடுக்கடலில் ஆபத்தில் சிக்கியிருந்த 7 இந்தியர் கள் இலங்கைக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

மாலைதீவுக்கு பொருட்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த இந்திய சரக்குக் கப்பலில் இருந்த 7 பேரே இவ்வாறு இலங்கைக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த இந்திய சரக்குக் கப்பல் காலியில் இருந்து சுமார் 65 கடல் மைல் தொலைவில் விபத்தில் சிக்கியிருந்ததாக கடற்படைப் பேச்சாளர் கூறினார்.

இதனையடுத்து நேற்று காலை கடற்படைக்கு சொந்தமான விரைவு தாக்குதல் படகு மூலம், அந்தக் கப்பலில் இருந்த பணியாளர்கள் 7 பேரும் காப்பாற்றப்பட்டுள்ளனர்.


காப்பாற்றப்பட்ட 7 இந்தியர்களும் காலி கடற்படை முகாமுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

காப்பாற்றப்பட்ட 7 இந்தியர்களையும் இந்திய தூதுவராலயத்தில் ஒப்படைக்க உள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.(இ-7)

# மரண அறிவித்தல்

## திரு. கந்தையா செல்லையா

(4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)



பிறப்பு:1937.10.12 இறப்பு:2017.10.20

4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா செல்லையா அவர்கள் 20.10.2017 வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் செல்லையா கந்தையாவின் மூத்த மகனும், பூமணியம்மாவின் அன்புக் கணவரும், மாணிக்கம் (அமரர்), நல்லம்மா (அமரர்), கனகம்மா (அமரர்), பரமேஸ்வரி, சதாசிவம் ஆகியோரின் சகோதரனும் இரவீந்திரராசா (அதிபர், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), குகதாஸ் (லண்டன்), கிரகலப்பிரதாபன் (உடையார்கட்டு மகா வித்தியாலயம்), திலகராணி (ஜேர்மனி), நிமலராணி (புதுக்குடியிருப்பு), அருந்தவராணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 2017.10.22 ஆம் திகதி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. தகவல்: குடும்பத்தினர்.

# இராசி பலன்

22.10.2017

ஐப்பசி 05, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

திருதியை பின்னிரவு 4.22 மணிவரை

விசாகம் பிற்பகல் 12.46மணிவரை

சுபநேரம் 9.02-10.32 மணிவரை

இராகுகாலம் 4.32-6.02 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரேவதி, அச்சுவினி<br>காலை 6.23 மணிக்கு.<br>விருச்-சந்தி | | ராகு |
| கேது | | | |
| | சனி சந் | குரு,சூரி புத. | செவ் சுக் |

**மீனம்** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மேடம்** விட்டுக்கொடுத்து செல்வதன் மூலம் அமைதி காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்ட வேண்டியநாள்.

**இடபம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்ப மகிழ்ச்சியுண்டு.

**மிதுனம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உடல் நலனில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், தன்னம்பிக்கை மேலோங்கும் நாள், போசன நன்மையுண்டு.

**கடகம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்** நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காடடுவீர்கள்.

**தனுசு** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக் குறைவுகள் இடம்பெறலாம், சுப செலவுகள் கூடும் நாள்.

**விருச்சிகம்** வேலைச் சுமை கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**துலாம்** உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள், சிந்தனை மிகுதியான நாள், பணப்புழக்கம் கூடும் நாள்.

**கன்னி** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், பிரயாண சுகமுண்டு, போசன நன்மையுண்டு, எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்திய அமைதிப்படையின் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 30ம் ஆண்டு நினைவேந்தல்







(யாழ்ப்பாணம்)

இந்திய அமைதிப்படை யாழ்.போதனா வைத்தியசாலை மீது 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21, 22 ஆம் திகதிகள் நடத்திய தாக்குதலில் வைத்தியர்கள், தாதியர்கள், நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலை பணியாளர்கள் உட்பட 68 பேர் கொல்லப்பட்டிருந்தனர். இதன் 30 ஆவது ஆண்டு நிறைவு தினம் நேற்றையதினம் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகிய இந்த நினைவு நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் எஸ்.சத்தியமூர்த்தி மற்றும் வைத்தியர்கள், தாதியர்கள், உயிரிழந் தவர்களின் உறவினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(இ-4)

படங்கள்:- உ.சாளின்





# யுத்த காலத்திலும் சேவையாற்றக்கூடிய வகையில் வைத்தியத்துறை பாதுகாக்கப்படல் வேண்டும்

## யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலையும் வைத்தியத்துறையோடு சம்பந்தப்பட்டவர்களும் சுதந்திரமாக நிறைவான சேவையை மக்களுக்கு வழங்கக்கூடிய விதத்தில் யுத்த காலத்திலும் சாதாரண காலத்திலும் வைத்தியத்துறை பாதுகாக்கப்பட வேண்டுமென யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் எஸ். சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மீது இந்திய அமைதிப்படை மேற் கொண்ட தாக்குதலில் உயிரி ழந்தவர்களின் 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிக ழ்வு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்ட யாழ்.போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி மேலும் தெரிவிக்கையில்,

வைத்திய சேவையானது 24 மணிநேரமும் சுதந் திரமாக தன்னிறைவான சேவையை மக்களுக்கு வழ ங்க வேண்டும். அத்தகைய சேவையை வழங்கிக்கொ ண்டிருந்த போது கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற இத் துயரச் சம்ப வமானது உலகையே உலு க்கியது.

வைத்திய சேவையில் உள்ளவர்கள் வைத்திய சேவையின் புனிதத் தன் மையை விளங்கிக் கொள்ள வேண்டும். அதேபோன்று வெளியில் உள்ளவர்களும் அதன் புனிதத் தன்மையை விளங்கிக் கொள்ள வேண் டும். அவ்வாறு வைத்திய சேவையை பாதுகாக்கும் வகையிலான செயற்பாடு களை கைவிட்டுவிட்டு செய ற்பட்டால் அது பல உயி ர்களை பறித்துவிடும்.

எனவே இப் புனிதமான வைத்திய சேவையை பாது காக்க வேண்டியதுடன் வைத்தியசாலையானது யுத்த காலத்திலும் சரி, சாதா ரண காலத்திலும் சரி புனி தத் தன்மையுடன் பாதுகாக் கப்பட வேண்டும். முப்பதா ண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்ற இக்கொடூரச் சம்பவம் அதனையே வெளிப்படுத்தி நிற்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)




# தெல்லிப்பழையில் இன்று டெங்கு ஒழிப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு ஒழிப்பு விசேட செயற்றிட்டம் இன்று ஞாயிற் றுக்கிழமை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சுற்று வட்டாரத்தில் காலை 7 மணி தொடக்கம் பி.ப ஒரு மணி வரை முன்னெடுக் கப்படவுள்ளது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிம னையின் ஏற்பாட்டில் முன் னெடுக்கவுள்ள இந்த செயற் றிட்டத்தில், வைத்தியசா லையை சூழவுள்ள பகுதிக ளில் டெங்கு நுளம்பு பெருகு வதற்கு ஏதுவான பகுதிகள் இனங்காணப்பட்டு சிரம தான நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது.

குறிப்பாக பற்றைக்காணி களை துப்புரவு செய்யாத உரிமையாளர்களுக்கு எதி ராக சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது.

மேலும் இன்றைய தினம் மக்கள் பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்களை தெல்லிப் பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அருகில் ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் கொண்டு வந்து ஒப்படைக்க முடியும் என சுகாதாரத் துறையினர் தெரி வித்துள்ளனர்.

இந்த விசேட செயற்றிட்டத் தில், அனைத்து தரப்பின ரும் கலந்து சிரமதானப் பணியில் ஈடுபடமுன்வர வேண்டும் என ஏற்பாட்டா ளர்கள் கேட்டுக்கொண் டுள்ளனர். (இ-9)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நயினாதீவு மாணவர்களுக்கான நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு கிராமத்திலு ள்ள பாடசாலைகளிலிருந்து 2017 ஆம் ஆண்டின் புல மைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்த மாண வர்களுக்கு ஊக்குவிப்பு நிதி அன்பளிப்பாக ஒவ்வொருவரு க்கும் 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்குவது என்று நயினா தீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர்சபை தீர்மானித்துள்ளது என செய லாளர் நா.கோபாலகிருஷ் ணன் அறிவித்துள்ளார்.(இ-7)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

உரிமைகோரப்படாத மண லின் ஏலவிற்பனை எதிர்வரும் 27 ஆம் திகதி பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற வளாக த்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். அன்றைய தினம் காலை 8.30 மணி யிலிருந்து மணலை மன்றின் பதிவாளர் முன்னிலையில் பார்வையிட முடியும்.

ஏலவிற்பனையில் பங்கு பற்றுபவர்கள் தம்முடன் தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண் டும் என்பதுடன் விற்பனை க்காக வைக்கப்பட்டுள்ள மண லின் மதிப்பிடப்பட்ட விலை கிடைக் காதவிடத்து அப்பொ ருளின் ஏல விற்பனையை மீளப் பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

விற்பனை மூலம் பெற் றுக்கொள்ளப்படும் மண லினை குறிப்பிட்ட நேரத்திற் குள் மன்றின் வளாகத்திலி ருந்து அப்புறப்படுத்தல் வேண் டும் என்பதுடன் அத ற்கான வாகன ஒழுங்குகள், மணலை ஏற்றுபவர்கள், ஏற் றுவதற் கான உபகரணங் களை தம் முடன் எடுத்து வருதல் வேண் டும்.மணலானது 1cube அல்லது அதற்கு மேற்பட்ட அளவுகளில் மட்டும் ஏல விற்பனை செய்யப்படும்.

ஏலத்தில் விற்கப்படும் மணலானது உடனடியாக பணம் செலுத்தப்பட்டு நீதிம ன்ற வளாகத்திலிருந்து அப் புறப்படுத்தல் வேண்டும். எல் லாக் கொடுப்பனவுகளும் காசா கவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக் கொள் ளப்படமாட்டாது என பதிவா ளர் அறிவித்துள்ளார். (இ





ஜே/230 தந்தை செல்வாபுரம் மூத்தபிரஜைகள் சங்கமும் கலைவாணி சனசமூக நிலையமும் ஏற்பாடு செய்த முதியோர் தின நிகழ்வு ஜே/230 கிராம சேவகர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் தொழில்நுட்பவியல் நிறுவன 2ம் பருவகால கல்வி செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவ னத்தின் முழுநேர மற்றும் பகுதிநேர மாணவர்களுக் கான 2017- 2 ஆம் பருவ கால கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் பின்வரும் திக திகளில் ஆரம்பிக்கப்படவு ள்ளன.

முழுநேர மாணவர்களு க்கு- 30.10.2017 (திங்கட் கிழமை)

பகுதிநேர மாணவர் களுக்கு-04.11.2017(சனிக்கி ழமை) என உதவிப் பதிவா ளர் யோ.ரிசாந்தன் அறிவி த்துள்ளார். (இ

## 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# தசநாயக்கவை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாதது ஏன்?

## சிறைச்சாலை அதிகாரிகளிடம் விளக்கம் கோரல்

(கொழும்பு)

2008, 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை சம்பந்தமான வழக்கில் கைது செய்யப்பட்ட, இலங்கை கடற்படையின் முன்னாள் பேச்சாளர், கொமடோர் டி.கே.பி தசநாயக்கவை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படாதது ஏன் என்று சிறைச்சாலை அதிகாரிகளிடம் நீதிமன்றம் விளக்கம் கோரியுள்ளது.



இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு, நேற்றுமுன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் முக்கிய சந்தேக நபராக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கொமடோர் தசநாயக்க நேற்று முன்தினம் வழக்கு விசாரணைகளின் போது, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

இதையடுத்து, கொமடோர் தசநாயக்கவை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமைக்கான காரணம் என்ன என்று விளக்க அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை கண்காணிப் பாளருக்கு, நீதவான் லங்கா ஜெயரத்ன, உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், கொமடோர் தசநாயக்கவை சிறைச்சாலை வைத்தியசாலை யில் அனுமதிக்காமல் இன்னமும் வெலிசறையில் உள்ள கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பது ஏன் என்றும் விளக்கமளிக்குமாறும் சிறைச் சாலை அதி காரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், முன்னாள் கடற்படைப் பேச்சாளர் தொடர்பாக சரியான தகவல்களை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கு மாறும், இலங்கை கடற்படைத் தளபதிக்கு நீதவான் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த வழக்கில் தொடர்புடைய இன்னமும் தலை மறைவாக இருக்கும் லெப். கொமாண்டர் பிரசாத் ஹெற்றியாராச்சியை கைது செய்வதற்கான பகிரங்க பிடியாணையை பிறப்பித்த நீதவான், கொமடோர் தச நாயக்க உள்ளிட்ட ஏழு சந்தேக நபர்களையும் நவம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

2008, 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அனைத்துலகப் பாடசாலை மாணவர்கள் 6 பேரும், பல்கலைக்கழக மாணவர்கள் 5 பேரும் இலங்கை கடற்படையினரால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


### விற்பனை

கிளிநொச்சி 155ம் கட்டையில் 700 இற்கும் மேற்பட்ட மர்ம்.தடிகளும் 50இற்கும் மேற்பட்ட Board களும் (அளவு4X8) அத்துடன் 4X2 அளவுடைய தீராந்திகளும் விற்பனைக்கு உண்டு. சற்றிங்குக்கு பயன்படுத்தப்பட்டது.

தொடர்புகளுக்கு
076 667 6223 (1035)

### யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

### விற்பனைக்கு

கிளிநொச்சி திருநகர் தெற்கில் 4 பரப்புக் காணியும் புதிதாக கட்டப்பட்ட வீடும் யாழ்ப்பாணம் றக்கா றோட்டில் றக்கா ஒழுங்கையில் 3 நிலப்பரப்பு காணியில் அமைந்துள்ள மேல் மாடி வீடும் தளபாடங்களும் மற்றும் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கு முன்பாக நடேஸ்வரா கல்லூரிக்கு அருகாமையில் 9 1/2 நிலப்பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. (1038)

தொடர்புகளுக்கு: 076 473 4160

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**கலை முதற்தேர்வு(வெளிவாரி)**
**முதலாம் அரையாண்டுப் பரீட்சை-2014**

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் கோரப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 01.11.2017( புதன்கிழமை) தொடக்கம் 17.11.2017( வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலை பேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

(சி-128) பதிவாளர்

### Heritage Agri Foods (Pvt) Limited
**பதவி வெற்றிடங்கள்**

கிளிநொச்சி மாவட்டம் பளை பிரதேசம் இயக்கச்சிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஹெறிரேஜ் அக்றி ஸ்தாபனத்தில் (Heritage Agri. (Pvt) Limited) பின்வரும் பதவி நிலைகளுக்கான வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொருத்தமான தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் கல்வி மற்றும் தொழில் தகைமை. அனுபவம் பற்றிய சிறுகுறிப்பு (Curriculum Vitae) ஒன்றினைக் கணினியில் சுயமாகப் பூர்த்தி செய்து கீழே காட்டப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

**பண்ணை முகாமையாளர்**
**தேவையான தகுதிகள்**

1. கல்வி. தொழில் தகைமை
   - 1.1. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய கல்லூரி ஒன்றில் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழுக்கு ஆறாவது மட்டத்திற்குச் சமனான விவசாய டிப்ளோமா சான்றிதழ்.
   **அல்லது**
   - 1.2. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய கல்லூரி ஒன்றில் தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழுக்கு ஐந்தாவது மட்டத்திற்குச் சமனான விவசாய டிப்ளோமா சான்றிதழுடன் ஒரு வருடத்திற்குக் குறையாத தொழில் அனுபவம்.
   - 1.3. விவசாயத் திணைக்களத்தில் விவசாயத் தொழில்நுட்ப சேவையிலிருந்து இளைப்பாறியவர்களில் முதல் மூன்று தகைமைகளைக் கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.
2. கணினி, ஈமெயில் பற்றிய செயல்முறை அறிவு
3. ஆங்கிலம் எழுத, வாசிக்க, பேசத் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது. சிங்களம் பேச, வாசிக்கத் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
4. இலகுரக வாகனம் மற்றும் உந்துருளிக்கான சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
5. முன் அனுபவம் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. சம்பளம் : நேர்முகத் தேர்வின் போது கலந்துரையாடித் தீர்மானிக்கப்படும்.

**உதவிப் பண்ணை முகாமையாளர்**
**தேவையான தகுதிகள்**

1. கல்வி, தொழில் தகைமை
   - a. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய கல்லூரி ஒன்றில் தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழுக்கு ஐந்தாவது மட்டத்திற்குச் சமனான விவசாய டிப்ளோமா சான்றிதழ்.
   **அல்லது**
   - b. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய கல்லூரி ஒன்றில் தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழுக்கு நான்காவது மட்டத்திற்குச் சமனான விவசாய டிப்ளோமா சான்றிதழுடன் ஒரு வருடத்திற்குக் குறையாத தொழில் அனுபவம்.
2. கணினி, ஈமெயில் பற்றிய செயல்முறை அறிவு முக்கியம்.
3. ஆங்கிலம் எழுத, வாசிக்க, பேசத் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது. சிங்களம் பேச, வாசிக்கத் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
4. இலகுரக வாகனம் மற்றும் உந்துருளிக்கான சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
5. முன் அனுபவம் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. சம்பளம் : நேர்முகத் தேர்வின் போது கலந்துரையாடித் தீர்மானிக்கப்படும். (143)

Heritage Agri Foods (PVT) Limited 3/4, Rockwood Place, Colombo 07
Tel: 077 8349847 E-mail: damayanthi@isfindustries.com or piyngs7@gmail.com

### கல்யாணமாலை
**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 39 செவ் 8 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: O/L லண்டன் PR<br>தொ.இ: B/7119 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 16 செவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில் : AAT, HNDIT, B.COM<br>தொ.இ: G/5113 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 28 செவ் 8 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: A/L சொந்த தொழில்<br>தொ.இ: B/7121 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 6 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSC/அரச தொழில்<br>தொ.இ: G/5114 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L சுவிஸ் NOT PR<br>தொ.இ: B/7122 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 29 செவ். 2 இல்.<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5125 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 168CM<br>தகைமை/தொழில்: கனடா குடியுரிமை<br>தொ.இ: B/7125 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 21 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5138 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை



(கொழும்பு)

இலங்கையில் அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின்தேர்தல்செலவுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

இந்தியா போன்ற நாடுகளில் மக்கள் தீர்ப்பினை சரியாக பெற்றுக் கொள்வதற்காக தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக ஏற்கனவே சட்டதிட்டங்கள் விதிக்கப்பட்டுள்ளதாக இது தொடர்பான அமைச்சரவை தீர்மானம் கூறுகின்றது.

"இலங்கையில் 1977ம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட தேர்தல்களில் வேட்பாளர்களின் தேர்தல் செலவுகள் தொடர்பில் அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதற்கான சட்ட ரீதியாக அவகாசங்கள்காணப்பட்டபோதும், தற்போதைய தேர்தல் முறை அவ்வாறான விதிமுறைகளை உள்வாங்கவில்லை.

அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் சட்டத்தரணிகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர், இது தொடர்பாக விதிமுறை களை உருவாக்க வேண்டிய தேவை தொடர்பாக ஆரம்ப இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தகவல் வழங்கியுள்ளது.

அதன் அடிப்படையில் தேர்தல்களின் போது அரசியல் கட்சிகள், குழுக்கள் அல்லது வேட்பாளர்களின் மூலம் மேற்கொள்ளப்படும் தேர்தல் செலவுகள் தொடர்பில் அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதற்கும், அச்செலவுகள் தொடர்பில் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு ஏதுவான முறையில் தற்போது காணப்படுகின்ற தேர்தல் சட்டங்களை திருத்தம் செய்வதற்கும் மற்றும் புதிதாக சட்டங்களை விதிப்பது தொடர்பாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது" என அமைச்சரவை தீர்மானம் தெரிவிக்கின்றது. (இ-7)

# நிஸங்க சேனாதிபதிக்கு வெளிநாடு செல்ல அனுமதி

(கொழும்பு)

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதிக்கு வெளிநாடு செல்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம்நேற்று முந்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி வரையில் அவருக்கு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் அவரது கடவுச்சீட்டை விடுவிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.



அதேநேரம் நிஸங்க சேனாதிபதி, அனைத்து வழக்கு விசாரணைகளின் போதும் நீதிமன்றத்தில் ஆஜராகுவது கட்டாயமானது என்று உத்தரவிட்டுள்ள நீதிமன்றம், அதனை மீறினால் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்படும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

335 இலட்சம் ரூபா இலஞ்சம் வழங்கியமை மற்றும் பெற்றுக் கொண்டமை சம்பந்தமாக நிஸ்ஸங்க சேனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் ஒருங்கிணைப்பு செயலாளர் ஆகியோருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மகிந்த தலைமையில் பரப்புரைப் பேரணிகள் அடுத்த மாதம் தொடங்கும்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மாகாணசபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் களை இலக்கு வைத்து, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தொடர் பேரணிகளை நடத்த முடிவு செய்துள்ளது.



எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதி அநுராதபுரவில் முதலாவது பரப்புரைப் பேரணி தொடங்கப் படவுள் ளது.

இந்தப் பேரணிகளுக்கு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ தலைமை தாங்குவார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் போட்டியிடவுள்ள கூட்டு எதிரணியில் உள்ள கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பேரணிகளில் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)




❖1707 - நான்கு பிரித்தானிய கடற்படைக் கப்பல்கள் சிலி தீவுகளில் மூழ்கியதில் ஆயிரக்கணக்கான மாலுமிகள் கொல்லப்பட்டனர்.

❖1935ம் ஆண்டு சோவியத் புரட்சி நாட்காட்டி ஒன்றின் ஆறு-நாள் வாரமொன்றின் அக்டோபர் 22 பக்கம்

❖1866 - பிரேசில், ஆர்ஜென்டீனா, உருகுவேக்கு எதிராக பராகுவே போரில் ஈடுபட்டது.

❖1875 - ஆர்ஜென்டீனாவுக்கான முதலாவது தொலைத தொடர்பு இணைப்பு ஏற்படுத்தப்பட்டது.

❖1877 - ஸ்கொட்லாந்தில் பிளான்டையர் சுரங்க விபத்து. 207 சுரங்கத் தொழிலாளர்கள் இறந்தனர்.

❖1878 - செயற்கை ஒளிக்கு கீழ் நடைப்பெற்ற முதலாவது ரக்பி போட்டி இங்கிலாந்தின் சால்போட் நகரில் நடைப்பெற்றது.

❖1924 - பன்னாட்டு டோஸ்ட்மாஸ்டர்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

❖1943 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் காசெல் நகரம் மீது பிரித்தானிய விமானப்படை குண்டு வீசு நடத்தியதில் 10,000 பேர் கொல்லப்பட்டு 150,000 பேர் வீடுகளை இழந்தனர்.

❖1944 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் ஆச்சென் நகரம் நட்பு நாடுகளிடம் வீழ்ந்தது. நட்பு நாடுகளிடம் வீழ்ந்த முதலாவது ஜெர்மன் நகாரம் இதுவாகும்.

❖1949 - சோவியத் ஒன்றியம் அதன் முதலாவது அணு குண்டை வெடிக்கச் செய்தது.

❖1953 - லாவோஸ், பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தது.

❖1956 - பாகிஸ்தான், கராச்சியில் கான்கிரீட் கூரைப் பாகம் வீழ்ந்ததில் 48 பேர் பலி.

❖1957 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்காவின் முதல் போர்ச் சாவு.

❖1960 - மாலி, பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தது.

❖1964 - சான்-போல் சார்ட்ரேக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்காப்பட்டது, எனினும் அவர் அதனைப் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார்.

❖1965 - இந்தியா-பாகிஸ்தான் இடையான இரண்டாம் காஷ்மீர் போர் முடிவுக்கு வந்தது.

❖1968 - நாசாவின் அப்பல்லோ 7 விண்கலம் பூமியை 163 தடவைகள் சுற்றிய பின்னர் அட்லாண்டிக் கடலில் பாதுகாப்பாக இறங்கியது.

❖1987 - ஈழப்போர்: யாழ்ப்பாணம் அராலித் துறையில் இந்திய அமைதிப் படையின் உலங்கு வானூர்தி தாக்கியதில் பல பயணிகள் கொல்லப்பட்டனர்.

❖2001 - PSLV C-மூன்று விண்கலத்தை இந்தியா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

❖2007 - எல்லாளன் நடவடிக்கை: இலங்கையின் அநுராதபுரம் இலங்கை வான்படைத் தளம் மீது விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் நடத்திய தாக்குதலில் கரும்புலிகள் 21 பேரும், இலங்கை படையினர் 14 பேரும் கொல்லப்பட்டு பல வானூர்திகள் அழிக்கப்பட்டன.

பிறப்புகள்

❖1811 - பிரான்சு லிசித்து, அங்கேரிய இசைக்கலைஞர் (இ. 1886)

❖1844 - சாரா பேர்ண்ஹார்ட், பிரான்சிய நடிகை (இ. 1923)

❖1881 -கிளிண்டன் ஜோசப் டேவிசன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்ஜபியலாளர் (இ. 1958)

❖1887 - ஜான் ரீட், அமெரிக்க ஊடகவியலாளர் (இ. 1920)

❖1900 - அஷ்பகுல்லா கான், இந்திய விடுதலைப் போராளி (இ. 1927)

❖1907 - எஸ். டீ. சௌலா, இந்திய-அமெரிக்கக் கணிதவியலாளர் (பி. 1995)

❖1919- எச். வேங்கடராமன், தமிழறிஞர் (இ. 1991)

❖1919 - டோரிஸ் லெசிங், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய எழுத்தாளர் (இ. 2013)

❖1922 - அ. துரையரசன், இந்திய அரசியல்வாதி (இ. 1988)

❖1938 - கா. இந்திரபாலா, இலங்கை வரலாற்றாளர்

❖1946 - தீபக் சோப்ரா, இந்திய-அமெரிக்க மருத்துவர், எழுத்தாளர்

இறப்புகள்

1864 -மிரோன் வின்சுலோ, தமிழ் ஆங்கில விரிவான அகராதியைத் தொகுத்த அமெரிக்க மதப் பரப்புனர் (பி. 1789)

1906 - பால் செசான், பிரான்சிய ஓவியர் (பி. 1839)

1925 - அ. மாதவையா, தமிழக புதின எழுத்தாளர், பத்திரிகையாசிரியர் (பி.1872)

1964 - கவாஜா நசிமுத்தீன், பாக்கித்தானின் 2வது பிரதமர் (பி. 1894)

1975 - அர்னால்ட் ஜோசப் டாயின்பீ, பிரித்தானிய நூலாசிரியர், வரலாற்றாசிரியர் (பி. 1889)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 120 | 120 | 140 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 120 | 90 | 120 | 120 | 105 | 100 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 380 | 500 | 500 | 320 | 400 |
| தக்காளி | 200 | 200 | 140 | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 40 | 60 | 60 | 50 | 80 |
| கோவா | 120 | 200 | 80 | 120 | 160 | 120 | 140 |
| கரட் | 100 | 200 | 80 | 200 | 160 | 80 | 100 |
| பூசணி | 50 | 40 | 30 | 60 | 60 | 50 | 40 |
| புடோல் | 120 | 120 | 70 | 120 | 100 | 90 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 75 | 120 | 100 | 90 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 400 | 220 | 300 | 200 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 100 | 150 | 75 | 160 | 130 | 140 | 120 |
| பாகற்காய் | 400 | 500 | 250 | 300 | 300 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 150 | 80 | 120 | 120 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 70 | 100 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 130 | 200 | 200 | 160 | 170 |
| லீக்ஸ் | 140 | 250 | 80 | 240 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 70 | 120 | 100 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 250 | 240 | 280 | 250 | 280 | 260 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 330 | 300 | 250 | 350 | 240 |
| போஞ்சி | 80 | 200 | 100 | 120 | 200 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 | 140 | 120 | 100 | 140 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 30 | 30 | 140 | 30 | 30 |
| தேசிக்காய் | 250 | 280 | 220 | 300 | 250 | 300 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 70 | 60-80 | 80 | 80 | 75 |
| இராசவள்ளி | 300 | 500 | 380 | — | — | 400 | — |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 240 | 200 | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 120 | 80 | 90 | — |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 30 | 35 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 20 | 35 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 30 | 60 | — | 100 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் நடமாடும் சேவை

## ஜனாதிபதியும் பிரதமரும் பங்கேற்பு





(குருமன்காடு)

தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஜனாதிபதி நடமாடும் சேவை நேற்றைய தினம் வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நடைபெறும் இந் நடமாடும் சேவை பொலநறுவை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களை தொடர்ந்து மூன்றாவதாக வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியர் சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு நேற்று முற்பகல் 10 மணிக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கலாசார வாத்தியங்கள் முழங் க வரவேற்கப்பட்டதுடன் கல்லூரி வளாகத்தில் ஜனாதிபதியால் மரம் ஒன்று நாட்டப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதில் 5000 பேருக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன், திவிநெகும திட்டத்தின் கீழ் ஆயிரம் பேருக்கும் சுயதொழில் உதவிகளும், இளைஞர், யுவதிகளுக்கான சுய தொழில் முயற்சிக்கான ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் காணிப்பிரச்சினை, ஆளடையாள அட்டை, பிறப்பு - இறப்பு பதிவுகள், கடவுச்சீட்டு, விவாகப் பதிவுகள் எனப்பல்வேறு சேவைகளும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர குணவர்த்தன, வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் அமைச்சர்களான சுவாமிநாதன், கயந்த கருணாதிலக, விஜயகலா மகேஸ்வரன், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், கே.கே.மஸ்தான், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சிவமோகன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், மாவட்ட அரசாங்க அதிபர்கள், வடக்கு ஆளுநர், அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-250)

## சு.கவின் யாழ்.மாவட்ட அமைப்பாளர்களாக மேலும் நால்வர் ஜனாதிபதியால் நியமனம்





(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர்களாக மேலும் நால்வரை கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

கல்விக்கு சிறந்த சேவையாற்றியமைக்காக அண்மையில் ஜனாதிபதி விருதினைப் பெற்றுக் கொண்ட கதிரவேலு செவ்வேள் தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் நவரட்ணம் யோகராஜன், பிரபல தொழில் அதிபர் இராஜதுரை இரட்னேஸ்வரன், ஜெயந்தி பரமலிங்கம் ஆகியோரே கடந்த வாரம் ஜனாதிபதியால் யாழ். மாவட்ட அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், மாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து, கந்தசாமி கருணாகரன், பாலசுப்பிரமணியம் கோபாலகிருஸ்ணன் ஆகியோர் யாழ்.மாவட்ட அமைப்பாளர்களாக இருந்துவரும் நிலையில் மேலதிகமாக இவர்களுக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (இ-60)

## ஓடையில் விழுந்து பேருந்து விபத்து! 12 மாணவர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

அம்பாறையில் பேருந்து ஒன்று நேற்றுக் காலை 7 மணியளவில் ஓடையில் விழுந்து விபத்துக்குள்ளானதில், பதினான்கு பேர் காயமடைந்ததுடன் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களுள் பன்னிரெண்டு பேர் பாடசாலை மாணவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

வேகமாக வந்த பேருந்து, உகன - அம்பாறை வீதியில் வைத்துத் திரும்பும் போதே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் சென்ட்ரல் கேம்ப் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஏழு மாணவர்கள் உட்பட ஒன்பது பேர், மேலதிக சிகிச்சைகளுக்காக அம்பாறை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறனர். (இ-7)


## சைட்டம் கல்லூரிக்கு மாணவர்களை சேர்க்க இரகசியமான முறையில் நேர்முகத்தேர்வு

(கொழும்பு)

சைட்டம் மருத்துவக் கல்லூரி நிறுவனத்தை அரசின் கீழ் கொண்டுவந்துள்ளதாக தெரிவித்து மக்களை ஏமாற்றினாலும், ஜனவரியில் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு சைட்டம் நிறுவனம் இரகசியமான முறையில் நேர்முகப் பரீட்சை நடத்தி வருவதாக அரச பல் வைத்தியர்களின் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அச்சங்கத்தின் தலைவர் விசேட பல் வைத்திய நிபுணர் ஆனந்த ரத்நாயக்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார். (இ-7)

# மரண அறிவித்தல்



பிறப்பு: 1927.09.06
இறப்பு: 2017.10.13

## அமரர் திரு. மாரிமுத்து பொன்ராஜா

(ஓய்வுபெற்ற புள்ளிவிபர உத்தியோகத்தர்)

யாழ். ஸ்ரான்லி வீதியை பிறப்பிடமாகவும், யாழ். இராமநாதன் வீதி, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து பொன்ராஜா அவர்கள் 13.10.2017 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நித்தியானந்ததேவி (தேவா) அவர்களின் அன்புக் கணவரும், ஹரிராமஜெயம்(ஜேர்மனி), மகேஸ்வரன்(அமெரிக்கா), ரவீந்திரகுமார் (பிரான்ஸ்), அருள்பிரியா (லண்டன்), கவிதாம்பிகா (லண்டன்), உசாநந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செந்தினி (ஜேர்மனி), கனிதா (அமெரிக்கா), மதிவதனா (பிரான்ஸ்), கிறிஸ்ணராஜா (லண்டன்), றோய் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தம்பியையா, பிறிட்சற் பாக்கியலட்சுமி (துரையம்மா அவுஸ்திரேலியா), துரையப்பா (அப்பு கனடா), ஜெயலட்சுமி (மணி அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேம்பாமலர் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான ஜோன் டானியல் டேவிட், பேரம்பலம் (பிரான்ஸ்), பரமானந்தம், யோகேஸ்வரி மற்றும் ராகினி (கனடா), பால்கந்தசாமி (அவுஸ்திரேலியா), சர்வானந்ததேவி ஆகியோரின் மைத்துனரும், தேவசுந்தரி (மம்மி பிரான்ஸ்), சற்குணம் (தேவி), லோகேஸ்வரி (மீனா), மாசிலாமணி, சீவரட்ணம், வில்லியம் யேசுதாசன் ஆகியோரின் சகலனும், ஜெகதீஸ்வரன், ஏனஸ், எமிலினி, கீர்த்தி, கிறிஸ்ரீனா, றிஜிகேஸன், றியானா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 23.10.2017 திங்கட்கிழமை நாளை நண்பகல் 12 மணியளவில் லண்டனில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை பிற்பகல் 4 மணியளவில் இராமநாதன் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

148, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லிணக்க முயற்சிகள் தாமதப்படுத்தப்படின்

# மீண்டும் ஓர் உள்நாட்டு யுத்தம்

# ஏற்படுவதை தடுக்க முடியாது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த 2015 ஒக்டோபரில் இலங்கையின் இணை அனுசரணையுடன் 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இலங்கையில் இரத்தக் களரியை ஏற்படுத்தக் கூடிய உள்நாட்டு யுத்தமொன்று மீண்டும் ஏற்படாத நிலையை உறுதிப்படுத்தி நிலையான சமாதானத்தை சிங்கள மற்றும் தமிழ் சமூகத்தினரிடையே ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதை அந்தத் தீர்மானம் வலியுறுத்தியிருந்தது.

மேற்படி தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் இலங்கை அரசினால் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள முக்கியமான நடவடிக்கைகள் சிலவற்றை நான் கீழே குறிப்பிட்டுள்ளேன்.

காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த காரியாலயமொன்றை தாபிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது. அது சம்பந்தமான சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. இது அரசினால் எடுக்கப்பட்டுள்ள மிகவும் முக்கியமானதோர் நடவடிக்கையாகும். ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூற்றுப்படி, சுமார் இருபதினாயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதுடன், தமது இரத்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறியும் பொருட்டு பொறிமுறையொன்றை தாபிக்குமாறு கோரி அவர்களின் உறவினர்கள் அரசுக்கெதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினார்கள்.

காணாமல் ஆக்கப்படுதலைத் தடுத்தல் மீதான சட்ட மூலம்

தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ள இன்னுமொரு முக்கியமான நடவடிக்கைதான் காணாமல் ஆக்கப்படுதலைத் தடுக்கும் சட்டமூல வரைபாகும். இலங்கையில் பிறந்த ஒவ்வொரு பிரஜையும் பலவந்தமான முறையில் ஆட்கடத்தல் செய்யப்படும் பயமின்றி சுதந்திரமாக வாழ்வதை உறுதிப்படுத்துவதே இந்தச் சட்டமூலத்தின் நோக்கமாகும். இலங்கை பலவந்தமான முறையில் காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒப்பந்தத்தில் கடந்த 2015 டிசெம்பரில் கைச்சாத்திட்டுள்ளது. இதற்கு சட்ட அந்தஸ்து வழங்கும் நோக்குடன் அது தொடர்பான வரைபு சட்டமூலம் 2017 மே 09 இல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுடன் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது. எது எப்படி இருப்பினும், இந்தச் சட்டமூலம் உள்நாட்டு யுத்தத்தை வெற்றியடைய வைத்த இராணுவத்தினரை பாதிக்குமெனக் காரணம் காட்டிய கூட்டு எதிரணியினரின் எதிர்ப்புக் காரணமாக அதன் மீதான விவாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை துரதிர்ஷ்டவசமானதாகும்.

புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குதல்

புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குதல் குறித்த செயற்கிரமத்தை மேற்கொள்ளவென நியமிக்கப்பட்ட வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் 2017 செப்டெம்பர் 21 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பிரதான அரசியல் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவை இணைந்த நல்லாட்சி அரசினால் இலங்கைத் தமிழ் சமூகத்தினரை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. பிரிக்கப்படாத இலங்கைக்குள் அனைத்து சமூகங்களும் ஒன்றுசேர்ந்து வாழக்கூடிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கான தனது ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் வெளிப்படுத்தியுள்ளார்.



தமிழ்ச்சமூகத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கைகளையும் அதன் அபிலாஷைகளையும் புறந்தள்ளிய முன்னைய ஆட்சியாளர்களைப் போலன்றி, தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் அவற்றுக்கு மதிப்பளித்து வருவதாகவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

கலப்பு நீதிமன்றங்கள்

போர்க் குற்றங்கள் தொடர்பில் மனிதாபிமான சட்டம் மற்றும் மனிதவுரிமைகள் சம்பந்தமான பாரதூரமான மீறல் சம்பவங்கள் குறித்த குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கென வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட கலப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படல் வேண்டுமென ஐ. நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 30/1 தீர்மானம் இலங்கை அரசிடம் வலியுறுத்துகின்றது.

நாட்டை பயங்கரவாதப் பிடியிலிருந்து விடுவித்ததன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தியுள்ள இராணுவத்தினரை அவமதிக்கும் செயலென கூட்டு எதிரணியினருக்கு வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்து வரும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் சிலர் கூறி வருவதனால் இத்தகைய நீதிமன்றங்களை அமைத்தல் என்பது இலங்கையில் தற்போது பாரதூரமான அரசியல் விவகாரமாக மாறியுள்ளது. ஆயினும், அத்தகையதோர் விசாரணை அமைக்கப்பட்டே தீர வேண்டுமென்பதில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசிடம் வலியுறுத்தி வருகின்றது. எது எப்படியிருந்த போதிலும், நீதிபதிகளின் சுயாதீனத்தைப் பலப்படுத்தவும் சட்டவாக்கத்தை மேல் நிலைப்படுத்தவுமான சரத்துக்களை புதிய அரசியலமைப்பில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுத்து வருகின்றது. இதன்மூலம் ஜனநாயக அரசுகளால் ஏற்றுக் கொள்ளக்கூடிய நம்பகத்தன்மை வாய்ந்த விசாரணையொன்றை நடத்தும் இயலுமை இலங்கைக்கு உண்டென்பதை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்த முடியுமென்றே அரசாங்கம் நம்புகின்றது.

தேசிய நல்லிணக்க விடயத்தில் இலங்கை அரசாங்கம் இதய சுத்தியுடன் செயற்பட்டு வருகின்றதை சர்வதேச சமூகம் பாராட்ட வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் தேசிய நல்லிணக்க முயற்சிகளைத் தடம்புரள வைக்கும் எதிர் நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் தன்னை முழுமையாக அர்ப்பணித்தே வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களிடையே உண்மையான நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமென்பதே ஐ.நாவின் விருப்பமாகும்.

அத்தகைய நல்லிணக்க முயற்சிகள் காலதாமதப்படுத்தப்படுமாயின் அல்லது ஏதேனும் அரசியல் காரணங்களுக்காக புறந்தள்ளப்படுமாயின், இரண்டு சமூகங்களுக்கிடையில் மீண்டும் ஓர் உள்நாட்டு யுத்தமொன்று ஏற்படுவதை எவராலும் தடுக்க முடியாது என்பதே யதார்த்தமாகும்.

ஆங்கிலத்தில்: கலாநிதி பிரேமரத்ன
தமிழில்:

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் 24ம் திகதி பிரதமர் தலைமையில் கூட்டம்

(கொழும்பு)



உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் நாளை மறுதினம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட கூட்டம் இடம் பெறவுள்ளது.

உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சபாநாயகர் கருஜெயசூரியவும் கையெழுத்திட்டுள்ள நிலையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் நுவரெலியா மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளைஅதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தலைமையில் நடைபெற்றிருந்தது. இந்தக் கூட்டத்தில் நுவரேலியா அம்பகமுவ உள்ளூராட்சி சபைகளை பிரித்து 6 சபைகளாக உருவாக்குவதென்றும் ஏனைய மூன்று பிரதேச சபைகளை தனா ஒன்று வீதம் அதிகரித்து 6 சபைகளாக மாற்றுவது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்த விடயம் குறித்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மீண்டும் சந்தித்து பேசுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில்தான் தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக கட்சி தலைவர்களை உள்ளடக்கிய விசேட கூட்டம் அலரிமாளிகையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பெண்களுக்கெதிரான வன்முறையற்ற சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்

(கொழும்பு)



பெண்களுக்கும் சிறுமிகளுக்கும்எதிரான வன்முறைகள் பற்றி பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கும் விசேட கூட்டம் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் இடம்பெற்றது.

கல்வியமைச்சில் அண்மையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சமூக மேம்பாட்டுக்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலேயே நாட்டின் முன்னேற்றம் தங்கியிருக்கிறது என்று பிரபல கிரிக்கெட் வீரர் சங்கக்கார தெரிவித்தார்.

ஆண், பெண் சமத்துவத்தை மேம்படுத்தி ஒழுக்க காற்று விழுமியங்கள் ஊடாக சமூகத்தில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கிரிக்கெட் வீரர் மஹேல ஜயவர்த்தன தெரிவிக்கையில், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை சமூகத்திலிருந்து துடைத்தெறிய வாய்ப்பு கிடைத்தமை குறித்து மகிழ்ச்சி அடைவதாக கூறினார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி துன்லால் மார்க் உள்ளிட்ட பிரதிநிதிகள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம சக்தி திட்டம் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைப்பு







(கொழும்பு)

"கிராம சக்தி" வேலைத் திட்டத்தை மக்கள் மயப்படுத்தும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் கொழும்பு சுகததாச அரங்கில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையான அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு 2030ஆம் ஆண்டளவில் வறுமையற்ற இலங்கையை கட்டியெழுப்பும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டை வறுமை ஒழிப்பு ஆண்டாக பெயரிட்டுள்ளதுடன், வறுமைக் கோட்டில் வாழும் மக்கள் அதிகமாக வசிக்கும் மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி இந்த வேலைத் திட்டத்தை பரந்தளவில் முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)



## ஆசிரியர் இருவரின் கடும் தாக்குதலால் மாணவர் ஒருவருக்கு தொடர் சிகிச்சை!

(கொழும்பு)

சப்ரகமுவ மாகாணம் இரத்தினபுரியில் அமைந்துள்ள தேசிய பாடசாலை ஒன்றில் மாணவர் ஒருவர் ஆசிரியர்கள் இருவரின் கடும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

இதனால் 10ஆம் வகுப்பில் கல்வி கற்கும் குறித்த மாணவன் கடந்த ஒரு மாத காலமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படுகிறது.

கடந்த மாதம் 21ஆம் திகதி குறித்த மாணவர் ஆங்கில ஆசிரியர் ஒருவரை கடுமையாகத் திட்டியுள்ளதாகத் தெரிவித்து குறித்த ஆசிரியரால் பாடசாலையின் உப அதிபரிடம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இதன் போது அவ்விருவரும் குறித்த மாணவரை தனி அறை ஒன்றுக்கு அழைத்துச் சென்று கடுமையான தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், குறித்த ஆங்கில ஆசிரியரைத் திட்டிய விடயத்தை ஒப்புக்கொள்ளுமாறு அச்சுறுத்தி கடிதம் ஒன்றையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இதன் பின்னர் வீடு சென்ற மாணவனுக்கு இரவிரவாக கடும் தலைச் சுற்றலும் வாந்தியும் ஏற்பட்டதனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்.

ஆனாலும் இதன் பின்னர் குறித்த மாணவர் மனம் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதனால் மன நோயாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிய வருகிறது. (இ-7)

## அமைச்சர் றிசாத்தை பதவியிலிருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை



கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீனை பதவியிலிருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளதாகவும் இதற்கான பொறுப்பினை அமைச்சர் றிசாத் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் சிரேஷ்ட அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கூறியுள்ளனர்.

எனவே, அமைச்சர் றிசாத்தை வர்த்தக அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென கோரியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கட்டுப்பாடின்றி அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்வடைவதற்கான காரணம் அரசியல் சூழ்ச்சித் திட்டம் என சிரேஷ்ட அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டுள்ளனர்.

அமைச்சர் றிசாத்தை பதவியிலிருந்து நீக்கி பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்தாவிட்டால் அரசாங்கம் எதிர்கால தேர்தல்களில் தோல்வியடையும் என தெரிவித்துள்ளனர்.

பொருட்களின் விலை அதிகரிப்பு குறித்து அமைச்சரவைக் கூட்டங்களில் சிரேஷ்ட அமைச்சர்கள், அமைச்சர் றிசாத்திடம் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

விலை அதிகரிப்பினை கட்டுப்படுத்தாவிட்டால் இந்த விடயத்தில் தாம் தலையீடு செய்ய நேரிடும் என ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மொத்த விற்பனை சந்தையின் முக்கிய வர்த்தகர்கள் நான்கு ஐந்து பேரே நாட்டின் பொருட்களின் விலைகளை நிர்ணயம் செய்வதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே அமைச்சர் றிசாத் பதியுதீன் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு சிரேஷ்ட அமைச்சர்கள், ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர். (இ-7)

## தாயும் மகனும் படுகொலை! சந்தேகநபர்களுக்கு மறியல்

மட்டக்களப்பு - ஏறாவூர் சவுக்கடி பிரதேசத்தில் வசித்து வந்த இளம் குடும்பப் பெண்ணும் அவரது மகனும் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என கைது செய்யப்பட்ட 3 சந்தேக நபர்களையும் எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மூவரும் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டபோதே நீதிபதி எம்.ஐ.எம்.றிஸ்வி இந்த உத்தரவை பிறப்பித்தார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் - தன்னாமுனை முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த 36 வயதுடைய பீதாம்பரம் மதுவந்தி மற்றும் அவரது மகனான 11 வயதுடைய மதுசன் ஆகியோரே கொலை செய்யப்பட்டனர்.

பிரதேசத்தில் வசித்து வந்த இளம் குடும்பப் பெண்ணும் அவரது மகனும் கடந்த புதன்கிழமை படுகொலை செய்யப்பட்டனர்.

வீட்டின் கூரை வழியாக கயிற்றைக்கட்டி உள்ளே இறங்கிய அடையாளம் தெரியாத நபர்கள் இவர்களை அடித்துக்கொலை செய்தனர்.

இதனையடுத்து கொலைச் சம்பவம் இடம்பெற்ற வீட்டின் அருகில் உள்ள பற்றையில் இருந்து கொலை செய்ய பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கோடரி ஒன்றை ஏறாவூர் பொலிஸார் மீட்டிருந்தனர்.

இந்த நிலையில் மோப்ப நாய்களின் உதவியுடன், குற்றவாளிகளை தேடும் தீவிர நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்ட நிலையில் 15 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் 12 பேர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் 3 பேர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலே ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அன்பொளி கல்வி நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாச்சிமார் கோயிலடியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் ஓய்வுநிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு. சண்முககுமார், கௌரவ விருந்தினராக சாரங்கா நகை மாளிகை உரிமையாளர் திருமதி சிவ பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

## மானியத் திட்டங்களுக்கான காசோலை கையளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வட பகுதியில் தென்னை உற்பத்தியை அதிகரிப்பதற்காக தென்னைப் பயிர்ச்செய்கை சபையினால் பல மானியத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக சமூக நலம் சார்ந்த திட்டமும் காசோலை வழங்கும் நிகழ்வும் 27.10.2017 ஆம் திகதி காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையக மண்டபத்தில் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குறுதிகள் பொய்த்துப் போயுள்ளமையால்

# மீண்டும் போராட முடிவு

## கிளி.பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம் தெரிவிப்பு



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட உதவி கூட்டுறவு ஆணையாளரின் வாக்குறுதி பொய்த்ததால் மீண்டும் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத்திடம் உள்ள கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான நலத்திட்ட நிதிகளை வழங்கக்கோரி, சங்கத்தின் பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்கள் ஆகியோர் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரின் அலுவலகத்திற்கு முன்னால் கடந்த 10.07. 2017 ஆம் திகதி அன்று மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் நடத்தப்பட்ட போது குறித்த இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், நலத்திட்ட நிதிகள் தொடர்பான பிரச்சினை ஒரு மாத காலத்தில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் அறிவித்திருந்தார். எனினும், அவர் வழங்கிய உறுதிமொழி பல மாதங்கள் கடந்தும் நிறைவேற்றப்படாத நிலையில், கடந்த 23.09.2017 ஆம் திகதி அன்று நடைபெற்ற கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகத்தினர் அது தொடர்பில் தீவிரமாக பரிசீலனை மேற்கொண்டு நேற்று முன்தினம் 20 ஆம் திகதி நடைபெற்ற இயக்குநர் சபைக் கூட்டத்தில் மீண்டும் பேரிணையத்திற்கும் கூட்டுறவுத் திணைக்களத் திற்கும் எதிராக தமது கண்டனத்தை வெளியிட்டனர்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் நலத்திட்ட நிதிகள் தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சாதகமான முடிவை வழங்காத பட்சத்தில் தொடர்ந்தும் சங்கத்தின் பணியாளர் மற்றும் அங்கத்தவர்கள் ஆகியோர் இணைந்து தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபையின் 9 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (8-312)






# தொற்றாநோய் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு





(பனிக்கன்குளம்)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தொற்றா நோய்களை கட்டுப்படுத்தல் தொடர்பான பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல் வேலைத்திட்டமானது நேற்றுக் காலை 8.30 மணிக்கு புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்ல வளாகத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அ.விஜிதரன் தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 75 இளைஞர், யுவதிகளை உள்ளடக்கிய பயிற்சித் திட்டமானது இன்றும் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சியில் பயிற்சி பெறும் இளைஞர்கள் தமது கிராமங்களில் சென்று கிராம மக்களுக்கான தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர். (8-281)

மாற்றுவலுவுள்ளோருக்கான

# தொழிற்பயிற்சி நிலைய அடிக்கல் நாட்டு விழா



(பரந்தன்)

வடக்கு மாகாணத்தில் மாற்றுவலுவுள்ளோருக்கான தொழிற்பயிற்சி நிலையம் கிளிநொச்சியில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் 20 ஆம் திகதி நடைபெற்றது.

சமூக சேவைகள் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சமூக சேவைகள் திணைக்களத்தினால் வட மாகாணத்தில் மாற்றுவலுவுள்ளோருக்காக அமைக்கப்படவுள்ள இப்பயிற்சிநிலைய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலனின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சமூக சேவைகள் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் மேலதிக செயலாளரும் சமூக சேவைகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமாகிய பிரதீப் ஜசரட்ண இப் பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

80 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இப்பயிற்சி நிலையத்தில் 2018 ஜுலை மாதம் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் இத்தொழிற் பயிற்சியில் 15 வயதிலிருந்து 38 வயது வரையுள்ள மாற்றுவலுவுள்ளோருக்கு தொழிற் பயிற்சி வழங்கப்படும் எனவும் இப்பயிற்சியின் போது அவர்களுக்கான உணவு, உடை, தங்குமிட வசதி மற்றும் ஊக்குவிப்பு தொகை என்பன வழங்கப்படும் என சமூக சேவைகள் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் பிரதீப் ஜசரட்ண தனது உரையில் தெரிவித்தார். (8-312)

# வைத்தியசாலைகளில் புதிய கட்டடங்கள் திறப்பு



(பரந்தன்)

கிளிநொச்சி அக்கராயன் மற்றும் வட்டக்கச்சி பிரதேசங்களில் வைத்தியசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதிகள் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலைக்கான உபகரணங்கள் உள்ளிட்ட 64 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதியே திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது கருத்து தெரிவித்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன் பிரதேச வைத்தியசாலைகளின் தேவைகள் தொடர்பில் அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி அமைச்சர் என்ற வகையில் என்னால் முடிந்த நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

அத்தோடு இப்பிரதேசங்களுக்கு வைத்தியர்கள் மற்றும் ஏனைய வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற முன்வரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்

இந்தநிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அரியரத்தினம், பசுபதிபிள்ளை மற்றும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் சி. மைதிலி மற்றும் உத்தியோகத்தர் கள் கலந்துகொண்டனர் (8-312)

# முதிரை மரக்குற்றிகள் மீட்பு

கிளிநொச்சி பொலிஸாரால் பெறுமதிமிக்க முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன, பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொண்ட சோதனையின் போது குறித்த மரக்குற்றிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. விசுவமடு பகுதியிலிருந்து தருமபுரம் நோக்கி எடுத்து வரப்பட்ட குறித்த பெறுமதிமிக்க மரக்குற்றிகள் இவ்வாறு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

வாகனமொன்றில் ஏற்றி வரப்பட்ட குறித்த மரக்குற்றிகள் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் தருமபுரம் நெத்தலியாறு பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபரின் விசேட மது ஒழிப்பு பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த மரக்குற்றிகள் மீட்கப்பட்டதுடன், வாகனமும் மீட்கப்பட்டது. இதன்போது இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், நேற்று நீதி மன்றில் முற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (8-312)

# நுட்பமான முறையில் கசிப்பு உற்பத்தி

## இருவர் கைது; உபகரணங்கள் பறிமுதல்

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் முசிலம்பிட்டி கிராம குடியிருப்பு பகுதியில் வீடு ஒன்றில் வீட்டுக்கிணற்றினைப் பயன்படுத்தி கசிப்பு உற்பத்தி செய்த இடத்தை சுற்றி வளைத்த பொலிஸார் 2 பரல் கசிப்புக் கோடா, காய்ச்சிய நிலையில் 15 லீற்றர் கசிப்பு, கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள் போன்றவற்றை கைப்பற்றியதுடன் சம்பவ இடத்தில் வைத்து சந்தேகத்தின் பேரில் வீட்டு உரிமையாளர் உட்பட 2 பேரைக் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். ஜீ விமலகுணரட்ணாவின் உத்தரவுக்கு அமைய முசிலம்பிட்டி கிராம குடியிருப்பு பகுதியில் வீடு ஒன்றினை திடீரென பொலிஸார் சுற்றி வளைப்பை மேற்கொண்ட போதே மிகவும் நுட்பமான முறையில் வீட்டில் உள்ள கிணற்றைப் பயன்படுத்தி கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டது தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் இது தொடர்பில் மேலும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-15)



சுவிட்சர்லாந்தில் பொலிஸாரினால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட இலங்கை இளைஞனின் இறுதிக் கிரியைகள் நேற்று உணர்வுபூர்வமாக நடைபெற்றது. இலங்கையிலிருந்து சென்ற உறவினர்களின் கதறல்களுடன் அந்தப் பகுதி பெரும் சோகமயமானது. கிளிநொச்சியைச் சேர்ந்த 38 வயதான சுப்பிரமணியன் கரன் என்ற இளைஞன், சுவிஸ் பொலிஸாரினால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரின் இறுதிக்கிரியை நிகழ்வில் பங்கேற்பதற்காக கரனின் மனைவி, பிள்ளைகள் மற்றும் சகோதரன் சுவிஸ் நாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இதற்கான உதவிகளை சுவிஸ் அரசாங்கம் மேற்கொண்டிருந்தது. இந்நிலையில் கரனின் உறவினர்கள் கத்திக் கதறியழ, அவரது இறுதிச் சடங்கு இன்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது. (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமே சென்று பாலும் கறந்து
கமுகம் பூப்போல அரிசியும் தீட்டி
கடுகவே வைத்து காய்ச்சிய பாற்கஞ்சியை
காலாலே தட்டி ஊற்றினான் ஆண்டே - சின்னத்தம்பி புலவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எங்களுக்கான உரிமையை முதலில் அறிந்து கொள்வோம்

மண் மீட்புக்காக முப்பது ஆண்டு காலப் போராட்டம். அதன் பின்பான தமிழ் அரசியல் தலைமையின் திருகுதாளங்கள் இவற்றையெல்லாம் நினைக்கும்போது தமிழனாகப் பிறந்தது நாம் செய்த பாவமோ என்று எண்ணத் தோன்றும். அந்தளவுக்கு ஈழத் தமிழர் நாம் படும் துன்பம் துயரம் சொல்லுந்தரமன்று.

2009ஆம் ஆண்டில் முற்றுப்பெற்ற வன்னி யுத்தம், அதில் நடந்த போர்க்குற்றங்கள், இதற்கான சான்றாதாரங்கள் என்பன எங்கள் இனத்தின் மீது சர்வதேசத்தின் பார்வையைத் திசை திருப்பின.

எனினும் எங்களுக்குக் கிடைத்த அருமந்த சந்தர்ப்பத்தை நாங்களே காலால் எட்டி உதைத்து விட்டோம்.

வன்னிப் போரில் நடந்த தமிழின அழிப்புத் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தமிழ் அரசியல் தலைமை விடாப்பிடியாக நின்றிருந்தால், இன்று நிலைமை வேறாக இருந்திருக்கும்.

என்ன செய்வது வாய்த்தது வாய்ப்பில்லை என்றால் கிடைத்த வாய்ப்புக்களை இழப்பது தலைவிதியாகிவிடும் என்பதே நம் நிலைமையாக இருக்கையில், அதுபற்றிப் பேசுவதில் பலன் இல்லை.

ஆக, தொடர்ந்து நாம் செய்ய வேண்டியது என்ன? என்பது பற்றி ஆராய்ந்து தமிழினத்தின் இருப்பை இந்த மண்ணில் நிலைநிறுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுப்பது கட்டாயமானதாகும். எனினும் அதுவும் நடப்பதாக இல்லை.

மாறாக எதுவும் தெரியாதவர்களாக நாம் எம்மைக் காட்டிக் கொள்வது மட்டுமே நடந்தேறுகிறது.

வடக்கு மாகாண சபையில் அமைச்சர்களாக இருந்த இருவர் தமது அமைச்சுப் பதவி தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். அமைச்சர் பதவியை நீக்கும் அதிகாரம் ஆளுநருக்கே உண்டென்பது அவர்கள் முன்வைத்த முக்கிய விடயம்.

அமைச்சர் பதவி உள்ளிட்ட பல விடயங்களில் மாகாண சபைக்கான உரிமை முதலமைச்சருக்கு வேண்டும் எனக் கேட்கும் தமிழர்கள் நாம், நீதிமன்றில் ஏறி அமைச்சர் பதவியை நீக்குகின்ற அதிகாரம் ஆளுநருக்கே உண்டு எனக் கூறியபோது அடிப்படையிலேயே அந்த வழக்கு ஏற்புடையதன்று என நீதிமன்றம் தள்ளுபடி செய்கிறது.

என்ன செய்வது தங்களை ஆளுமைமிக்க சட்டவாதிகள் எனக் காட்டிக் கொள்வோரும் இந்த விடயத்தில் நீதிமன்றம் செல்லலாம், வெற்றி பெறலாம் என உடன்பட்டனர் என்றால் எங்களின் நிலைமை எப்படியாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு இந்த உதாரணத்தைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை எனலாம்.

ஆக, எங்களுக்கான உரிமை என்ன? எங்களுக்குத் தரப்பட்ட உரிமை என்ன? என்பதில் நாம் தெளிவில்லாதபோது எல்லாம் தோல்வியாகிப் போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

மாகாண அமைச்சர்களை நீக்குகின்ற அதிகாரம் ஆளுநருக்கே உண்டு எனக்கூறி நீதிமன்றம் ஏறுவோர் இடைக்கால வரைபில் தமிழர்களுக்கு சமஷ்டி உள்ளிட்ட எல்லா அதிகாரமும் இருப்பதாகக் கூறுகின்றனர் என்றால்,

சரியான விடையின் கீழ் கோடிடுவதில் படுபிழை நடக்கிறது என்பது மட்டும் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

# நீதி வழங்கும் செயற்பாடுகளை அரசியல்மயப்படுத்தக்கூடாது

## ஐ.நா.நிபுணர் எச்சரிக்கை

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதற்கான செயற்பாடுகள், அரசியல் மயப்படுத்தப்பட்டால், நிலைமாறு கால நீதி செயற்பாடுகள் தோற்கடிக்கப்பட்டு விடும் என்று உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீளநிகழாமையை உத்தரவாதப்படுத்துவது தொடர்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் எச்சரித்துள்ளார்.

இலங்கைக்கு இரண்டு வாரகாலப் பயணமாக வந்துள்ள ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப், நேற்று முன்தினம் அனைத்துலக கற்கைகளுக்கான லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் சிறப்புரை ஆற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

"நீண்டகாலம் மோதல் நடைபெற்ற நாட்டில் நிலைமாறுகால நீதியை எவ்வாறு முன்னெடுப்பது, எவ்வாறு மீண்டும் இயல்பு நிலையைக் கொண்டுவருவது என்பது தொடர்பாக ஆராய்வதற்கான ஒரு பொறுப்பையே நான் வகிக்கின்றேன்.

மோதலின் பின்னரான ஒருநாட்டின் நிலைமாறு கால நீதி செயற்பாடுகள் மிகவும் முக்கியமானவை. அதில் அங்கம் பெறுகின்ற உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீளநிகழாமை ஆகிய நான்கு கரரணிகள் போருக்குப் பின்னரான ஒரு நாட்டின் சமூகத்திற்கு முக்கியமானதாக காணப்படுகின்றன.

இந்த நான்கு விடயங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புபடுவதாகவும் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமைந்திருக்கின்றன.

நிலைமாறுகால நீதி செயற்பாடுகளுக்கு என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வடிவம் கிடையாது. அந்தந்த நாடுகள் தமது சூழலுக்கு ஏற்ப போருக்குப் பின்னரான சமூகத்தின் நிலைமாறுகால நீதி செயற்பாடுகளை வடிவமைத்துக்கொள்ள முடியும். இதன் உள்ளார்ந்தத்தைப் புரிந்துகொள்ளவேண்டியது மிக முக்கியம்.

பிரச்சினைகளுக்கான தீர்வை நோக்கி பயணிக்க வேண்டுமே தவிர தீர்வை உருவாக்கிவிட்டு அதனை நாடி செல்லக்கூடாது. மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளனவா என்பது குறித்து ஆராயவேண்டும் என்பதுடன் மீறல்கள் தொடர்ந்து இடம்பெறாததை உறுதிப்படுத்தவேண்டியதும் அவசியம்.

உண்மையைக் கண்டறியும் செயற்பாட்டில் உலகில் எந்தவொரு நாடும் முற்று முழுதான வெற்றியைப் பெறவிலலை. ஆனால் ஒரு குறிப்பிட்டளவில் உண்மைகளை கண்டுபிடிக்க முடியுமான நிலை ஏற்பட்டது. இங்கு பாதிக்கப்பட்டோர் தொடர்பில் ஆராயப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் கவலையுடன் இருக்கின்றனர. எனவே முதலில் இங்கு நிலைமாறு கால நீதியை முன்னெடுப்பதற்கு ஒரு எதிர்பார்ப்பு இருக்க வேண்டும். இதற்காக நாங்கள் முன்னோக்கிப் பயணிக்க வேண்டியது அவசியம்.

நிலைமாறுகால நீதிசெயற்பாடுகளை பொறுத்தவரையில் அந்த செயற்பாடு நீதியானதாக இடம்பெற வேண்டும். அதிலிருக்கின்ற பண்புகளில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

இங்கு நிலைமாறு கால நீதி செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பல்வேறு வரையறைகளும் காணப்படுகின்றன. ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவதில் ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதில் சமூக நம்பிக்கை என்பது மிகவும் முக்கியத்துவமானது. மாறாக தனிமையுடன் இந்த விடயத்தை சாதிக்க முடியாது.

இங்கு நிறுவன ரீதியான பங்களிப்புக்கள் மிகவும் முக்கியமானவையாக காணப்படுகின்றன. தவறான நோக்கில் மீறல்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது குறித்து ஆராய்வதும் இங்கு மிக முக்கியமானதாகும்.

இந்த நிலைமாறுகால நீதி செயற்பாடுகளில் எவ்வாறு நாங்கள் பிரவேசிக்கின்றோம் என்பதும் இங்கு முக்கியமானதாக இருக்கின்றது. ஆனால் இந்த செயற்பாடுகளை ஒரு முறைமையுடன் செய்ய வேண்டியிருக்கின்றது.

பல்வேறு தரப்புக்களின் அனுபவங்களை எடுத்துப் பார்க்கும் போது முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் கருத்தியலில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

நீதி செயற்பாடுகளின் பல்வேறுவிடயங்களை அமுலபடுத்துவதும் இங்கு மிக அவசியமானதாகும்.

முரண்பாடுகளை நீக்கி விட்டு செயற்படுவதே இங்கு மிக உகந்ததாகவுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும். சட்டத்தை மதித்து இந்த செயற்பாடுகளை அமுல்படுத்தப்பட வேணடும். இவை மோசமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தாதவாறு அமைய வேணடியது அவசியம்.

குறிப்பாக நிலைமாறு கால நீதி செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புமிக்க தன்மையும் மிகவும் அவசியமானது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

சாதகமான முடிவுகளை நோக்கியே நாம் பயணிக்க வேண்டும். குறிப்பாக சமூக மட்டத்தில் நம்பிக்கையை கட்டியெழுப்புவது மிகவும் அவசியமாகும். நிலை மாறு கால நீதி செயற்பாடு என்பது ஒரு மாயவித்தை அல்ல.

சமூகத்தில் காணப்படுகின்ற நம்பிக்கையை மேலும் பலப்படுத்துவதற்கான ஆற்றல் இதற்கு இருக்கின்றது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இது வெற்றியை நோக்கியதான நடைமுறையாகும். சட்டத்தின் ஆட்சிப்படுத்தல், சமூகங்களுக்கிடையிலான நம்பிக்கையைப் பலப்படுத்தல் என்பன இங்கு மிக முக்கியமானவையாகும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான கோணம் அவசியமான தாகும்.

இவை எல்லாவற்றுக்கும் முககியமானதாக நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டும். சமூகங்களுக்கிடையிலான நம்பிக்கையே நிலைமாறுகால நீதி செயற்பாடுகளில் மிக முக்கிய விடயமாக காணப்படுகின்றது.

ஆனால் நிலைமாறு கால நீதி செயற்பாடுகள் அரசியல் மயப்படுத்தப்படக் கூடாது.

அவ்வாறு அரசியல் மயப்படுத்தப்பட்டால் அந்த செயற்பாடு தோற்கடிக்கப்பட்டு விடும்.

இது நீதிப் பொறிமுறை. அரசியல் திட்டம் அல்ல என்பதனை எப்போதும் உணர்ந்து கொள்ள வேண்டும். இங்கு நம்பிக்கை என்பது மிகவும் முக்கியமானது என்பதுடன் நிலைமாறுகால நீதியை முன்னெடுப்பதற்கான எதிர்பார்ப்பு அவசியமானதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**முகூர்த்தம் என்றால் என்ன?**

முகூர்த்தம் என்பது எந்தச் சுப காரியங்கள் செய்ய இருந்தாலும் அதற்குரிய கால அளவை குறிப்பதே முகூர்த்தம் ஆகும்.

(தொடரும்)

121



## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

பத்மாவதியின் சிற்றப்பன் தொண்டைமான் மணமக்கள் மகிழ்ந்திருக்க மலை மீது ஒரு வீடு கட்டினான். ஆனந்த நிலையம் என அதற்கோர் அழகான பெயரை ஆண்டவன் ஸ்ரீநிவாசனே சூட்டினான்.

அந்த இல்லத்தில் வகுளாதேவி, பத்மாவதி ஆகியோருடன் குடியேறினான் ஸ்ரீநிவாசன்.

திருமணவாழ்வு திகட்டாத தெள்ளதுமாக இருந்தது. அதை மணமக்கள் அனுபவித்து ஆனந்தித்திருந்தபோது,

அங்கே கலக நாரதர் கொல்லாபுரம் சென்றார். தியானத்தில் இருந்த திருமகளை எழுப்பினார். "அம்மா! நீயோ திருமாலைப் பிரிந்து தியானத்தில் மூழ்கி உன்னையே உருக்கிக் கொண்டிருக்கிறாய். (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் சாளம்பைக்குளம் பிரதேசம் மன்னார் பிரதேசத்தில் திருக்கேதீஸ்வரம் பிரதேசம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

# உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

மார்பக புற்று நோய் அபாயத்தை குறைக்கும் காரணிகள்:
கொழுப்புணவு வகைகளை குறைவாக உள்ளெடுத்தல்
அதிகளவு மரக்கறி, பழவகைகளை உள்ளெடுத்தல்
உடற்பயிற்சியில் கிரமமாக ஈடுபடுதல்
உடல் நிறை அதிகரிக்காது பேணி வருதல்
மதுபானம் , புகைத்தல் பழக்கமற்றிருத்தல்
தன்முனைப்பற்ற புகைத்தலிலிருந்து விலகியிருத்தல்

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.

யாழ்ப்பாணம் மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்கம் மத்திய சனசமூக நிலைய வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்டம்

## அரையிறுதியில் பலாலி விண்மீன்







திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழாவினை முன்னிட்டு வடமாகாண ரீதியாக மின்னொளியில் நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் காலிறுதிப் போட்டி 19.10.2017 அன்று ஆரம்பமானது.

இதில் றேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர் கொண்ட பலாலி விண்மீன் முதல்பாதியாட்டத்தில் விண்மீன் வீரர் டினோயனால் கோல் ஒன்று போடப்பட 1:0 என முன்னிலை வகித்தது.

பிற்பாதியாட்டத்தில் றேஞ்சஸ் வீரர்களின் வேகமான பந்துப் பரிமாற்றத்தின் மூலம் கோல் ஒன்று போடப்பட 1:1 என ஆட்டம் சமநிலையடைந்தது ஆட்ட வேகம் அதிகரிக்க விண்மீன் அணித் தலைவர் டேமியனால் இரண்டாவது கோல் போடப்பட தொடர்து மூன்றாவது,நான்காவது கோல்கள் காண்டீபனால் அதிரடியாக போடப்பட 04:00 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன். (க)

## மைலோ கிண்ண உதைபந்தாட்டம்

# அடுத்த சுற்றுக்கு முன்னேறியது சமரபாகு நியூட்டன் வி.கழகம்




20.10.2017 அன்று நடைபெற்ற மைலோ கிண்ண உதை பந்தாட்ட போட்டியில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டு கழகத்துடன் மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் ஆட்ட நேர முடிவில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமானது 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (க)

## அன்ரனிஸ் வெற்றி

மணற்காடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் 20.10.2017 அன்று முதலாவது போட்டியாக யங்கமன்ஸ்சை எதிர்த்து சென் அன்ரனிஸ் மோத காத்திருந்த போட்டி யங்கமன்ஸ் அணிவராத காரணத்தால் சென் அன்ரனிஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (க)

## பிரிவு I ற்கான உதைபந்தாட்டம்

# சென்மேரிஸ் - கொழும்பு சிவில் இன்று பலப்பரீட்சை





உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் பிரிவு I ற்கான உதைபந்தாட்ட தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் நாவாந்துறை சென மேரிஸ் அணியை எதிர்த்து கொழும்பு சிவில் செக்கிரட்டி அணி மோதவுள்ளது. (க)

# சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்

## கலட்டி ஐக்கியம் வெற்றி

மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் 20.10.2017 அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் கலட்டி ஐக்கியம் அணியை எதிர்த்து வல்வை அணி மோதியது.

ஆட்டத்தில் கலட்டி ஐக்கியம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)









தீபத்திருநாளை முன்னிட்டு கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் மரதன் ஓட்ட நிகழ்வு.



## மனோகரா வெற்றி

மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் 20.10.2017 அன்று மூன்றாவது போட்டியாக மனோகரா அணியை எதிர்த்து டைமன்ஸ் அணி மோத காத்திருந்த போட்டி டைமன்ஸ் வராத காரணத்தால் மனோகரா அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் சந்தியில்...

வில்லை

இதனையடுத்து கடையின் கண்ணாடிகளை அடித்து நொருக்கிய கும்பல் கடையின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை தாறுமாறாக வெட்டிவிட்டு அக்குழு தப்பிச் சென்றது.

இக் கடைக்கு அருகில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தின் மீதும் 2 வாரங்களுக்கு முன் வாள்வெட்டுத் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

## நாளை தொடக்கம்...

பாலத்தின் புனரமைப்பு பணிகள் நடைபெறவுள்ளமையினாலேயே அனைத்து ரயில் சேவைகளும் நாவற்குழி ரயில் நிலையத்துடன் மட்டுப்படுத்தப்படவுள்ளது.

இந்த புனரமைப்பு பணிகள் நாளை 23ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை ஐந்து நாட்கள் இடம்பெறவுள்ளது.

இப்புனரமைப்பு பணிகள் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் பயணிகள் விசேட பேருந்துகள் மூலம் நாவற்குழி ரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து புகையிரதம் ஊடாக அவர்களது பயணத்தை தொடர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனினும் யாழ்.ரயில் நிலையத்தில் தரித்து நிற்கும் ரயில் மூலம் காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணம் ரயில் நிலையம் வரையான ரயில் சேவைகள் வழமையான கால அட்டவணைக்கு ஏற்ப நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-11)

## தமிழர்களுக்கு...

அரசியல் யாப்பை மாற்றக்கூடாதென மகா நாயக்க தேரர்கள் கோரியிருப்பதாக செய்தி வந்தது. தற்போது பிரதமர் அவர்கள் மகா நாயக்க தேரர் ஒருவர் வெளிநாட்டில் இருக்கும் போது இவ்வாறான தவறான செய்தியைப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளதாகக் கூறியுள்ளார். இது பற்றி உங்கள் கருத்து என்ன என முதலமைச்சர் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று தமிழர்கள் படும் அவஸ்தைக்குப் போதிய உரித்துக்கள் அவர்களுக்கு சட்டப்படி வழங்கப்படவில்லை என்பதை விட தமிழர்களுக்கு எதுவும் வழங்கப்படாது என்ற சிங்களவர்களுள் ஒரு சாராரிடம் வெறியாக அமிழ்ந்திருக்கும் எண்ணமே காரணம். அந்த வெறிதான் பண்டா-செல்வநாயகம் உடன்பாட்டை கிழித்தெறியச் செய்தது. டட்லி-செல்வநாயகம் உடன்பாட்டை கைவிடச் செய்தது. தமிழ் மக்களின் விடிவுக்கென ஒருவரால் நடவடிக்கை எடுக்கும் போது அதற்கு எதிர்ப்புக்காட்டி வந்தமைக்கு இந்த வெறியே காரணம். அதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு விதிவிலக்காக இருந்தார் என்று கூறமுடியாது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா 2000ஆம் ஆண்டில் அரசியல் யாப்புத் திருத்தம் பற்றிப் பேசிய போது அந்தத் திருத்த ஏற்பாடுகளின் பிரதிகளை அவரின் கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தினுள்ளேயே எரித்தனர். அந்த வெறியை அப்போது ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தமது கட்சிக்கு சார்பாகப் பாவித்தார் என்றும் கூறலாம்.

ஆக மொத்தத்தில் தமிழர்களுக்கு எந்த விதச் சலுகையும் அளித்து விடக்கூடாது என்பதில் சிங்களத் தலைவர்களுள் ஒரு முக்கியமான பிரிவினர் கண்ணும் கருத்துமாக இருந்து வந்துள்ளனர். பௌத்த சங்கத்தினர் அதற்கு விதிவிலக்கல்ல. இவ்வாறான தமிழர் மீதான வெறுப்பின் அடியை அல்லது ஆரம்பத்தை நாம் அடையாளம் காண வேண்டுமானால் 1919ஆம் ஆண்டுக்குச் செல்ல வேண்டும். இலங்கையர்களுக்குக் கூடிய அரசியல் சட்ட சலுகைகளையும் உரிமைகளையும் தாம் தர இருப்பதாகவும் எல்லாப் பிரிவினரும் அதாவது முக்கியமாகத் தமிழ், சிங்கள மக்கட் தலைவர்கள் ஒன்று சேர்ந்து எவ்வாறான அரசியல்சட்டரீதியான திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்கின்றார்களோ அவற்றை அவர்கள் தருவதாக ஆங்கிலேயர்கள் அறிவித்தனர். முக்கியமாக மக்கள் பிரதிநிதிகளை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதில் இரு சாராரும் ஒருமித்த கருத்தை முன்வைத்தால் தாம் அதை ஏற்றுக்கொள்வதாக ஆங்கிலேயர்கள் கூறினர்.

வடமாகாணத் தமிழ் மக்களின் சங்கத் தலைவராக அப்போது சபாபதி அவர்கள் இருந்தார். சிங்கள மக்கட் தலைவர்கள் பிரதேச வாரியாக நாட்டைப் பிரித்து ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒருவரைத் தேர்தல் மூலம் நியமிக்க வேண்டும் என்று கோரிய போது சபாபதி அவர்கள் அது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்காது என்றும் இனரீதியாக அந்தந்த இனங்களைப் பாதுகாக்கும் வண்ணம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். அதுவரையில் ஆங்கிலேயர் செய்து வந்ததும் அதைத்தான். அதாவது இனங்கள் எல்லாவற்றையும் சமமாகக் கருதி அந்தந்த இனங்களுக்காக பிரதிநிதிகளை ஆங்கிலேயர் நியமித்து ஆட்சியை நடத்தி வந்தனர். இதை எப்படியாவது பிரதேசவாரித் தேர்தல் முறைக்கு மாற்ற சிங்களத் தலைவர்கள் கங்கணம் கட்டியிருந்தார்கள். அதாவது அவர்களின் பின்னணியில் நாட்டின் முழுமையான அதிகாரக் கையேற்பு என்ற குறிக்கோள் கரவாக உள்ளிருந்தது. தமிழ் மக்களின் எதிர்ப்பு இருந்ததை அறிந்து அவர்கள் சேர் பொன்னம்பலம் அருணாசலத்தை அண்டினார்கள். ஆங்கிலேயரின் சட்டவாக்க மன்றத்தில் முன்னர் கடமையாற்றியவர் என்ற முறையிலும் பல முக்கியமான அரச பதவிகளை வகித்தவர் என்ற முறையிலும் அவருக்கு சகல மக்களிடையேயுஞ் செல்வாக்கு இருந்தது. அத்துடன் அவர் சிங்கள மக்கட் தலைவர்களை முழுமையாக நம்பியிருந்தார். அவரைப் பொறுத்தவரையில் தமிழர்களும் சிங்களவர்களும் இந்த நாட்டின் இரு கண்கள் என்றும் இந்து மதமும் பௌத்தமும் ஒரே பாரம்பரியத்தில் உதித்ததாலும் இந்து மத ஆதிக்கம் பௌத்தத்தில் நடைமுறையில் காணப்பட்டதாலும் இலங்கையானது மத இணக்கத்திலும், இன இணக்கத்திலும் மேம்பட்டு நல்லிணக்கத்திற்கும் ஒத்துழைப்புக்கும் ஒரு எடுத்துக்காட்டாக வருங்காலத்தில் அமையும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையைக் கொண்டிருந்தார்.

அவரை அண்டி சபாபதியின் மனதை மாற்றி பிரதேச வாரியான தேர்தலுக்கு அவரை உடன்பட வைக்க வேண்டும் என்று சிங்களத் தலைவர்கள் கோரினார்கள்.

சிங்கள மக்கட் தலைவர்கள் மத்தியில் கரவான எண்ணமொன்று இருந்து வந்ததை சேர் அருணாசலம் அவர்கள் அறிந்திருக்கவில்லை. உண்மையில் தமையனார் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சிங்கள மக்கட் தலைவர்கள் கபட உள்ளம் கொண்டவர்கள், அவர்களை நம்பாதே என்று தம்பியை எச்சரித்தும் இன்றைய எமது தமிழ் மக்கட் தலைவர்கள் போல் அன்றும் சிங்கள அரசியல் தலைவர்களை எம்மவர்கள் நம்பிக் கெட்டனர். ஆறு கடந்ததும் நீயாரோ நான் யாரோ என்பதே அச் சிங்களத் தலைவர்களின் வரலாறு என பிரதேச வாரியான தேர்தல் முறையைத் தமிழர்களும் சிங்களவர்களும் ஒத்துக் கொண்ட உடனே அதன் அடிப்படையில் தேர்தல்களை நடத்தினார்கள் ஆங்கிலேயர்கள். சிங்களவர்கள் பெரும்பான்மையாக பிரதேச ரீதியாக நியமிக்கப்பட்டார்கள். அரசியல் அதிகாரம், நிர்வாக அதிகாரம் போன்றவை சிங்கள மக்கட் தலைவர்கள் வசம் சிக்குண்டன. தமிழர்களுக்கென கொழும்பில் ஒரு ஆசனம் என்றவர்கள் தேர்தலின் போது அதற்கு இடமளிக்கவில்லை. சேர் அருணாசலம் அவர்கள் ஏமாற்றப்பட்டார். சிங்கள ஆதிக்கம் அப்பொழுதிருந்தே ஆரம்பமாகியது. அதிகாரத்தைத் தம்வசம் எடுத்துக் கொண்ட சிங்கள மக்கட் தலைவர்கள் அதனைச் சிறிதும் தளர்த்த முன்வந்தாரில்லை. மாறாக அரச அவை (State Council) தாபிக்கப்பட்ட போது சிங்களவர் மட்டும் அமைச்சரவையை (Pan Sinhala Cabinet) நியமித்தார்கள். அதற்கு அடி எடுத்துக் கொடுத்தவர் எமது மதிப்பிற்குரிய அப்போதைய கணிதப் பேராசான் திரு.சி.சுந்தரலிங்கம் அவர்கள்.

ஆகவே இன்று அரசியல் அமைப்பில் மாற்றம் வேண்டாமென்று மகா நாயக்க தேரர்களோ வேறெந்த சிங்களத் தலைவர்களோ கோருகின்றார்கள் என்றால் அதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. அன்று 1919ம் ஆண்டில் இருந்து தாம் பெற்றுக் கொண்ட அரசியல் அதிகாரத்தை எவ்வகையிலேனும் விட்டுக்கொடுக்கக் கூடாது என்பதே அவர்களின் குறிக்கோளும் அபிலாஷையும். அதிகாரம் பகிரப்பட்டால் இதுவரை சிங்கள மக்கட் தலைவர்கள் முழு நாட்டையும் ஆண்டு வந்த முறைமை இல்லாதொழிக்கப்படும். மீண்டும் தமிழ் மக்கள் தங்கள் தங்கள் இடங்களில் தலை நிமிர்ந்து வாழத் தலைப்பட்டுவிடுவார்கள் என்ற பயமே அவர்களின் இந்தக் கோரிக்கைக்குக் காரணம்.

சிங்கள தலைவர்களின் சிந்தனையும் எதிர்பார்ப்புமே அரசியல் யாப்பில் மாற்றம் வேண்டாமென்பது இதன் அடிப்படை நோக்கம், தமிழர்களுக்கு ஆட்சி அதிகாரம் கொடுக்கும் போது அதனை நிர்ணயிக்கும் பொறுப்பைத் தாம் தம் வசம் வைத்துக் கொண்டே கொடுக்க வேண்டும் என்ற எண்ணமே. தேரர்களோ வேறெவராயினும் அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டுவர வேண்டாம் என்றால் அதற்குரிய காரணம் நான் மேலே குறிப்பிட்ட காரணங்களே என முதலமைச்சர் தெரிவித்துள்ளார். (மு-11)

## மகாநாய...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் விகாரை ஒன்றில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இணக்கத்தை ஏற்படுத்திக்கொண்ட பின்னர் மாநாயக்க தேரர்களுக்கு சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து விளக்கப்படும்.

எனினும் அரசியலமைப்புச் சட்டமோ அல்லது வரைவோ இதுவரை உருவாக்கப் படவில்லை எனவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## பொன்னாலை வீதி...

ளனர்.

1950ஆம் ஆண்டின் காணி சுவீகரிப்பு சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் அளவைகள் ஒரு கிழமைக்குள் மேற்கொள்ளப்படும்.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்காதவர்கள் பின்னர் நட்டஈடு பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்க நேரிடும் எனத் தெரிவிக்கப்படுவதால் குறித்த காணி உரிமையாளர்கள் உடனடியாக தமது காணி உறுதிகளின் பிரதிகளை உரிய இடங்களில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் பொ.சிவானந்தன் அறிவித்துள்ளார். (மு-11)

## வித்தியா குடும்பத்து...

படுகொலை செய்யப்பட்டு அண்மையில் ட்ரயல் அட்பார் நீதிமன்றம் ஊடாக தீர்ப்பு வழங்கப்பட்ட புங்குடுதீவு மாணவி வித்தியாவின் குடும்பத்தினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்தார்.

நடமாடும் சேவைக்காக வவுனியா வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று வவுனியா, சிங்கள பிரதேச செயலக வீதியில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீட்டிற்கு சென்றே சந்தித்து இருந்தார்.

வித்தியாவின் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட வீட்டிற்கு சென்ற ஜனாதிபதி அங்குவசிக்கும் வித்தியாவின் குடும்பத்தினரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அண்மையில் வித்தியா கொலை தொடர்பான விசாரணைகள் யாழ் மேல் நீதிமன்றில் ட்ரயல் அட்பார் முறையில் விசாரணைகள் நடைபெற்று 7 பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருந்தது. ஜனாதிபதியால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக விரைவாக வழக்கு விசாரணைகளை முடிவுறுத்தி தீர்ப்பு வழங்கியமைக்காக ஜனாதிபதிக்கு வித்தியாவின் குடும்பத்தினர் இதன் போது நன்றி தெரிவித்தனர்.

இதன்போது காணி அமைச்சர் கயந்த கருணாதிலக்க, வன்னிபாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் ஆகியோரும் இச் சந்திப்பின் போது உடன் இருந்தனர். (மு-250)

## அதிக வறுமையில்...

ஆண்டு காலப்பகுதியில், 6.7 வீதமாக இருந்த இலங்கையின் வறுமை நிலை, கடந்த ஆண்டில், 4.1 வீதமாக குறைந்துள்ளது.

கடந்த ஆண்டில், 4,166 ரூபாவுக்கு உட்பட்ட தனிநபர் ஒருவரின் மாதாந்த செலவினம், வறுமைக் கோட்டு எல்லையாக அதிகாரபூர்வமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2012/13 இல், 3,624 ரூபாவாக இருந்தது.

அதிகபட்சம் வறுமை நிலை சுட்டெண்ணைக் கொண்டதாக கிளிநொச்சி மாவட்டமும், குறைந்தபட்ச வறுமை நிலை சுட்டெண்ணைக் கொண்டதாக கொழும்பு மாவட்டமும் காணப்படுகின்றன.

கண்டி மாவட்டத்திலேயே வறுமை எல்லைக்குக் கீழ் உள்ள மக்கள் அதிகளவில் உள்ளனர். மன்னார் மாவட்டத்தில், வறுமை எல்லைக்கு கீழ் உள்ள மக்கள் குறைந்தளவில் உள்ளனர்.

மாகாண அடிப்படையில், குறைந்தபட்ச வறுமை சுட்டெண்ணைக் கொண்டதாக மேல் மாகாணமே உள்ளது. இங்குள்ள மொத்த மக்கள் தொகையில், 1.7 வீதமானோர் (ஒரு இலட்சத்து ஆயிரத்து 342) வறுமை நிலையில் உள்ளனர்.

வடக்கு மாகாணம் அதிகபட்ச வறுமை சுட்டெண்ணைக் கொண்டதாக உள்ளது. இங்கு, 7.7 வீதமான மக்கள் ( 83 ஆயிரத்து 834) வறுமை நிலையில் உள்ளனர்.

மாவட்ட அடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டத்தில், அதிகபட்சமாக வறுமை நிலை 12.7 வீதமாக உள்ளது. (மு-11)

## தவறி வீழ்ந்து படை வீரர் பலி

உழவு இயந்திரத்தில் இருந்து வீழ்ந்த 59 ஆவது படைப்பிரிவினை சேர்ந்த படை வீரர் ஒருவர் நேற்று மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். (மு-250)

## உங்களுக்கு எங்கள்...

தூதுவராக இருக்கின்றேன். ஆனால் இதுவரை இங்கு வந்து உங்களை சந்திக்காமை கவலையளிக்கிறது. இருந்தும் இன்று சந்தித்திருக்கிறேன். மகிழ்ச்சியளிக்கிறது.

உங்களுடைய எந்தப் பிரச்சினைகள் என்றாலும் எங்களிடம் கூறுங்கள் எங்களால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராக இருக்கின்றோம். மேலும் இங்குள்ள பிள்ளைகளின் கல்விக்கு நாங்கள் உதவத் தயாராகவுள்ளோம். குறிப்பாக உயர்தரம், பல்கலைக்கழக கல்வியை வறுமை காரணமாக தொடர முடியாதிருந்தால் அவர்கள் தொடர்பில் எங்களுக்கு விபரம் தாருங்கள் நாங்கள உதவுகின்றோம் எனத் தெரிவித்தார்.

இதனைவிட இந்தியாவில் சென்று மேலும் உயர் கல்வியை தொடர வேண்டும் என்றால் அதற்கான ஏற்பாடுகளை நாம் செய்கின்றோம் நீங்கள் ஒரு சதம் கூட செலவு செய்யத் தேவையில்லை அடிப்படைத் தகுதிகள் இருந்தால் அதற்காக நீங்கள் எங்களிடம் விண்ணப்பிக்கலாம்.

மேலும் இந்திய வம்சாவளி மக்கள் இந்தியாவின் வாழ்நாள் விசாவுக்கும் விண்ணப்பிக்க முடியும் அந்த வாழ்நாள் விசா இருந்தால் இந்தியாவிலும் வசிக்க முடியும். அதற்கு உங்களுடைய உறவு முறை முன்னோர்கள் இந்தியாவில் இருந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணம் தேவை எனவும் குறிப்பிட்டார். (மு-319,8,312)

## மகா சங்கத்தினரை...

லூரியில் நேற்று நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 50 வருட காலமாக நாட்டின் ஏனைய மாகாணங்களில் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்துள் ளன. ஆனால் அவற்றில் எவையும் வடக்கு- கிழக்கு மாகாணங்களை சென்றடைய வில்லை.

அனைத்து மாவட்டங்களுக்கும், மாகாணங்களுக்கும் அபிவிருத்தி சமமான முறையில் பகிரப்படவில்லை. எனவே தான் மேல் மாகாணத்தினை போன்று வட மாகாணத்தினையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என நாம் செயற்பட்டு வருகின்றோம்.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களை போன்று, அரசியல் அமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்துவதிலும் இந்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது. அதன்படி புதிய அரசியலமைப்பு ஊடாக அதிகாரத்தினை பகிர்ந்தளிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், இதனை தவறாக புரிந்து கொண்டுள்ள சிலர் யுத்தத்தினால் பிரிக்க முடியாத நாட்டை தற்போது நாம் பிரிக்க போகின்றோம் என விமர்சிக்கின்றனர். அதனை நான் முற்றாக நிராகரிக்கிறேன். அதிகார பரவலாக்கலை எதிர்ப்பவர்கள் வடக்கு- கிழக்கு பகுதிகளுக்கு வரவேண்டும். சில அச்சு ஊடகங்கள் மக்களை தவறாக வழிநடத்துகின்றன. உண்மைக்கு மாறான கருத்துக்களை தமது பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கிறார்கள். வழங்கப்பட்டுள்ள ஊடக சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தி அரசியல் நிகழ்ச்சி நிரலில் இயங்கிறார்கள்

மகாசங்கத்தினரையும் தவறாக வழிநடத்தப் பார்கிறார்கள். புதிய அரசியலமைப்பு தொடர்பில் அறிக்கை தான் வந்துள்ளது. இது தான் முடிவல்ல. இதில் திருத்தத்தை மேற்கொள்ள முடியும். தேவையில்லாதவற்றை நீக்க முடியும். ஒற்றையாட்சி என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த காலத்தைப் போல் பௌத்த சமயத்திற்கும் உரிய அத்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த ஜனாதிபதி நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில் நடத்த திட்டமிட்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார். (மு-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

(C-055)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

EXPRESS Courier Services (C-036)

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

**ஒரு எண்ணெய் ! ஆரோக்கியமான பல நன்மைகள்!!!**

- முடி உதிர்வு, பொடுகுத் தொல்லையா?
- கருமையான நீண்ட கூந்தல் வேண்டுமா?
- முகத்தில் கரும்புள்ளி, கருவளையமா?
- முகப்பருவா?
- தோல் சுருக்கமா?
- உதடு, குதிக்கால் வெடிப்பா?
- உடற்பருமன், Cholesterol Blood Sugar இதய நோய் பிரச்சினையா?

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம் Royal

இன்றே பாவியுங்கள்!!!

"றோயல் ஓர்கானிக் வேர்ஜின் தேங்காய் எண்ணெய்"

- 100% Natural
- Cold Pressed
- No Refining
- No Bleaching

Re- Packed By : Royal Industry R Colombo - 13

சந்தைப்படுத்துவோர் : சிவா நறுமணப் பூங்கா R இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி - 021 222 2567

**அமெரிக்க லொத்தர் விசா**

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

0768226243

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

இங்கே வேலை தேடிக்கொண்டிருந்த சாதாரண இளைஞர்களில் நானும் ஒருவன் V2 Travels ல் பதிந்தேன் இப்பொழுது நிரந்தர விசாவுடன் அமெரிக்கா வந்து இறங்கியவுடனேயே பெரிய நிறுவனத்தில் வேலை செய்கிறேன். எனது வாழ்க்கையில் திடீர் அதிஸ்டத்தினை ஏற்படுத்திய V2 Travels நிறுவனத்தினருக்கு எனது நன்றிகள்.



மு.பானுதரன் - நெல்லியடி
அமெரிக்க விசா வெற்றியாளர்

(C-055)

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, பழைய ஆஸ்பத்திரிக்கு எதிரே | 10,பேருந்து நிலையம் | முடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |

**Business English / Spoken English**

For those working / migrating. Evening, weekend classes, Mondays to Thursdays 4.45 to 6.15pm & Saturdays Nov / Dec Fees: Rs:4000/=

நேரடித்தேர்வுக்கு Oct 24-25.2017 திகதிகளில் மாலை 05மணிக்கு சமுகமளிக்கவும்.

விபரங்களுக்கு: இயக்குநர் : NTI, 0776505580

Northern Technical institute (NTI)
YMCA Building, 107,2/1, Kandy Rd., Jaffna.
(1062)

**அமெரிக்க லொத்தர் விசா**

இலவசமாக அமெரிக்காவில் குடியேற அதிஸ்ட வாய்ப்பாக அமையும் லொத்தர் விசா(Green Card)

- 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும்
- திருமணமானவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள்
- இவ்வருடம் 55000 பேருக்கான வாய்ப்பு

யாழ்ப்பாணம் / வேலனை / கிளிநொச்சி

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

**Certificate in Computer Network Engineering**

+



இலவச PC HARDWARE பயிற்சி நெறி

(C-036)

Next Batch : 11-Nov-2017

Duration: 2 Months

iCS EDUCATION

77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

021-7306000, 076-7013060

**நல்லூர் அருகே காணி/ வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நல்லூர் கோவிலுக்கு 3 நிமிட வாகன தூரத்தில் 8 பரப்பில் அமைந்துள்ள இரு வீடுகளும் கராச்சும் கொண்ட விசாலமான காணி ஒன்று விற்பனைக்கு உண்டு. இதை 4 அல்லது 6 வீடுகளாக்கக்கூடிய Project க்கும் அல்லது வியாபார ஸ்தலமாகவும் or WARE HOUSE ஆகவும் பயனைட்டுத்தலாம் உறுதி உண்டு. 235, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரில் வந்து பார்வையிடலாம்.

தொடர்பு: 0771719896

**வலம்புரி**


விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603
021 567 1532


# மரண அறிவித்தல்

# வேலுப்பிள்ளை சச்சிதானந்தம்

**(ஸ்ரீ முத்துமாரி ரேடர்ஸ் பணியாளர்- யாழ்ப்பாணம்)**



காரைநகர் களபூமி பொன்னாவளையை பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி மற்றும் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சச்சிதானந்தம் 20.10.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், நவரத்தினம்-கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசினிதேவியின் அன்புக் கணவரும் சிவதருஜினி கஜேந்திரன் (மி.பா.சே. நிலையம் யாழ்நகர் (CEB), கிருஸ்ணரூபன், (பிராந்திய முகாமையாளர்-Samsung) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்தரூபன் (காந்தன் களஞ்சியம்), வைதேகி ஆகியோரின் மாமனாரும், மதுரி, ரம்மியாவின் பாசமிகு பேரனும், கயிலைநாதன் (லண்டன்), சாம்பசிவம் (ஓய்வுநிலை பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மாவட்ட செயலகம் யாழ்), நகுலேஸ்வரன், அருந்ததி தேவி, கேதீஸ்வரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரனும், குலசேகரம், தயாளினி, கலாநிதி, இரவீந்திரன், தயாநிதி, சிவகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2017), ஞாயிறு காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.504, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**0770291017, 0768229634**

**தகவல் : மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(சி-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 139

வள்ளுவர் ஆண்டு 2048 | 22.10.2017 | தொலைபேசி : 021 222 3378



# தீபாவளி கொண்டாட்டம்

நாவாந்துறை
கிளை நூலகம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவிக்க அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின்ர இடைக்கால வரைபை மகா சங்கம் நிராகரித்துப் போட்டுதாம்.இனி சம்பந்தர் ஐயா என்ன செய்யப் போறார்.

**கங்காணி:** இடைக்கால வரைபை மகா சங்கம் நிராகரித்தாலும் ஒவ்வொரு வருடமும் தீபாவளி வரும்தானே. 2018 தீபாவளி இல்லையெண்டால் 2019 தீபாவளி எண்டு சொல்லி எங்கட சனத்தை ஏமாற்றினால் சரிதானே!

**மூப்பர்:** அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை மகாசங்கம் நிராகரிக்கவில்லை. ஊடகங்கள் தான் ஊதிப்பெருப்பிக்கினம் எண்டு பிரதமர் ரணில் சொல்லுறாரல்லோ.

**வாத்தியார்:** பொய் சொல்லப் போறேன்... பொய் சொல்லப் போறேன் நீ ரொம்ப அழகியடி என்றொரு சினிமாப் பாட்டு இருக்குதல்லோ. அந்தப் பாட்டை மனதுக் குள்ள படித்துக் கொண்டு அரசியலமைப்பை மகா சங்கம் நிராகரிக்கவில்லை எண்டு பிரதமர் சொல்லியிருப்பார் போல.

**பண்டிதர்:** எல்லாவற்றுக்கும் எங்கட அரசியல் தலைமைதான் காரணம். தமிழ் அரசியல் கைதிகள் மூன்று பேர் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கினம். சம்பந்தர் ஐயா அலரி மாளிகையில் நடந்த தீபாவளித் கொண்டாட்டத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நூறுவீதம் எங்கட ஆதரவு இருக்கும் எண்டு கூறியிருக்கிறார் எண்டால் அவரின்ர நிலைப்பாடு எப்படி என்பது தெரிகிறது தானே.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா தமிழ் அரசியல் தலைமையை நீங்கள் குறை சொல்லாதீங்க. எங்கட மக்கள் சரியா இருந்தால் எல்லாம் சரியா வரும்.

**சாத்திரியார்:** வாத்தியார் என்ன சொல்லுறியள். எனக்கெண்டால் ஒண்டும் விளங்கல்ல.

**வாத்தியார்:** சாத்திரியார் எங்கட தமிழ் அரசியல் கைதிகள் மூன்று பேர் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கினம். அவர்களின்ர உடல் நிலை பாதிப்படைகிறது. இதற்காக வடக்கில தமிழ் மக்கள் ஹர்த்தால் அனுஷ்டிக்கினம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில குதிக்கத் தயாராகினம்.

ஆனால் சம்பந்தர் ஐயா அலரி மாளிகையில தீபாவளிக் கொண்டாட்டம் கொண்டாடிப் போட்டு எங்கட ஆதரவு உங்களுக்குத்தான் எண்டு சொல்லுறார். இது பற்றித் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் சிந்திப்பினமோ? அல்லது ஊடகங்கள் ஏதும் எழுதுவினமோ?

(வாத்தியார் வைத்திலிங்கம் சற்றுக் கோபத்தோடு இப்படிச்சொல்ல ஆலடியில் சில நிமிடம் மௌனம் நிலவியது. ஆலடியில் நிலவிய மௌனத்தைக் கங்காணி கார்த்திகேயன் கலைத்தார்.)

**கங்காணி:** வாத்தியார் சொல்லுறது முழுக்க முழுக்கச் சரி... எங்கட தமிழ் அரசியல் கைதிகள் மூன்றுபேர் தொடர் உண்ணாவிரதப் பேராட்டம் நடத்திக் கொண்டிருக்க சம்பந்தர் ஐயா அலரி மாளிகையில தீபாவளி கொண்டாடினது மன்னிக்க முடியாத குற்றம்.

**பண்டிதர்:** இது பாருங்கோ. உங்களுக்குத் தெரியாது. தமிழ் அரசியல் கைதிகளின்ர விடுதலையில தமிழரசுக் கட்சியின்ர தலைமைக்கு உடன்பாடில்லை. இருந்தால் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கிற போது, நான் ஜனாதிபதியாக வெற்றி பெற்றால் தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்வேன் என்று மைத்திரி ஐயாவிட்ட ஒரு சத்தியக் கடதாசி வாங்கியிருப்பினமல்லோ.

**சாத்திரியார்:** பண்டிதர் ஐயா சரியாச் சொன்னீங்கள். இப்பவும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தால் அவர்கள் தங்களுக்கு எதிராகத் தேர்தலில இறங்குவினமோ எண்ட பயம் தமிழரசுக் கட்சியின்ர தலைமையிட்ட இருக்குது. அதால தான் தமிழ்க் கைதிகளின்ர விடுதலையில அவர்கள் அக்கறை எடுக்கினமில்லை.

**விதானையார்:** அது சரி, வடக்கில முதலமைச்சர் வேட்பாளரை தமிழரசுக் கட்சி தேடித் திரியுதாம்.

**கங்காணி:** ஒமோம். ஓய்வு பெற்ற பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் ஐயாவையும் கேட்டதாகக் கேள்வி.

**வாத்தியார்:** கடவுளே! விக்னேஸ்வரன் ஐயரவை கூட்டிக்கொண்டு வந்து போட்டு அவருக்குச் செய்த நிட்டூரம் எல்லாருக்கும் தெரியும்தானே! இதுக்குப் பிறகும் தமிழரசுக் கட்சி யாரைக் கேட்டாலும் ஒருத்தரும் முதலமைச்சர் வேட்பாளருக்குப் போக மாட்டினம்.

**பண்டிதர்:** அதுமட்டுமல்ல வடக்கின்ர அடுத்த முதலமைச்சராகவும் நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயாதான் இருக்க வேணும். அப்பதான் தமிழ்மக்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

**சாத்திரியார்:** சம்பந்தர் ஐயா இருக்கும் வரைக்கும் தமிழ் மக்களின் அரசியல் தலைமையில் மாற்றம் தேவையில்லை எண்டு விக்னேஸ்வரன் ஐயா சொன்னவர் அல்லோ. அப்ப...

**மூப்பர்:** தமிழ் அரசியல் தலைமையில் மாற்றம் தேவையில்லை என்பது வேறு கருத்து. ஆனால் முதலமைச்சர் என்ற நிலையில் நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயா அடுத்த முறையும் இருந்தால்தான் எங்கட தமிழ் மக்களின்ர பிரச்சினையை சரியான முறையில கையாள முடியும்.

**விதானையார்:** அடுத்த முறை முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் ஐயா போட்டியிட சம்மதிப்பாரோ?

**வாத்தியார்:** சம்மதிப்பாரோ அல்ல. சம்மதிக்கவேணும்.இது அவரின்ர தனிப்பட்ட பிரச்சினை இல்லை. தமிழ் மக்களின் பிரச்சினை.

அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்த போது ஒட்டுமொத்தத் தமிழ்மக்களும் திரண்டு எழுப்பின கோசம் என்ன என்பது அவருக்குத் தெரியும்தானே!

**பண்டிதர்:** உண்மை தான். எங்கள் தலைவர் விக்னேஸ்வரன் ஐயா தான். உங்களை வெளியேறவிடமாட்டோம் என்று தானே எங்கட இளைஞர்கள் கோசம் எழுப்பினவியள்.

**மூப்பர்:** விக்னேஸ்வரன் ஐயாவை அடுத்த முறையும் தமிழரசுக் கட்சி (கூட்டமைப்பு) நியமித்தால்?

**விதானையார்:** ஒரு பிரச்சினையும் இருக்காது. அந்தக் கட்சியும் தப்பிக் கொள்ளும்.

**மூப்பர்:** நியமிக்கா விட்டால்?

**விதானையார்:** பொது மக்கள், பொது அமைப்புக்கள் என எல்லாரும் சேர்ந்து போய் ஐயா நீங்கள்தான் அடுத்த முறையும் முதலமைச்சராக வரவேணும் எண்டு விக்னேஸ்வரன் ஐயாட்ட கேட்கவேணும்.

இப்படி விதான்னையார் கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம் அலரிமாளிகையில கொண்டாட்டம்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்களே முன்னர்போல் மீண்டும் சேற்றில் விழுவதோ!

அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்பதனூடாக தமிழ்மக்களை ஏமாற்றுகின்ற தந்திரோபாயமே இப்போது அமுலில் இருக்கிறது.

ஆட்சியாளர்கள் மட்டுமன்றி தமிழ் அரசியல் தலைமையும் சேர்ந்து இந்தத் தந்திரோபாயத்தைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்கின்றனர்.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் அரங்கேறும் என்பதைச் சான்றுப்படுத்துவதற்காக இடைக்கால வரைபு வெளியிடப்பட்டது. இடைக்கால வரைபில் தமிழ்மக்களுக்கு எதுவுமில்லை என்பதை தமிழ்ப் புத்திஜீவிகள் உறுதிபடத் தெரிவித்துவிட்டனர்.

எனினும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் நடைமுறைக்கு வரும் என்பது போலவும் அது நடைமுறைக்கு வந்ததும்; போராடிய, இழந்த அத்தனைக்குமான பெறுமானம் அதில் உண்டு என்பது போலவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கூறி வருகிறது.

அதிலும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் மற்றும் தமிழரசுக் கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கம் ஆகியோர் இடைக்கால வரைபு தமிழ்மக்களுக்காகத் தேவலோகத்தில் இருந்து தருவிக்கப்பட்ட கற்பகதரு என்பது போலவும் நாம் கேட்கின்ற உரிமை, அதிகாரம் என அனைத்தும் தரும் என்பதாகவும் கூறி வருகின்றனர்.

இதனிடையே அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை பௌத்த மகாநாயக்கர்கள் எதிர்த்துள்ளனர். இதெல்லாம் தேவையற்றது என்பது போல மகாசங்கத்தின் பிரித்தோதல் அமைந்துள்ளது.

பரவாயில்லை, தமிழ் அரசியல் தலைமை எதிர்பார்க்காவிட்டாலும் தமிழ் மக்கள் எதிர்பார்த்ததுதான் இது. எனவே அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கான எதிர்ப்பு பற்றி நாம் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஏலவே தெரிந்த ஒன்று இப்போது அமுலாகிறது என்பதோடு அந்த விடயத்தை ஒத்தி வைக்கலாம்.




## உள்ளூராட்சித் தேர்தல் வருகிறது பராக்...பராக்...



மாறாக எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படலாம் என்ற ஊகங்கள் நிதர்சனமாகக் கூடியதாக உள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் மக்கள் அதிலும் குறிப்பாக தமிழ்மக்கள் விழிப்படையாமல் இருப்பதற்காக 2018 ஜனவரியில் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறும் சாத்தியம் இல்லை என்பதான தகவல்கள் பரவலாக ஏவப்பட்டுள்ளன.

எது எவ்வாறாயினும் 2018 முற்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் நடந்தாக வேண்டும். தேர்தலை ஒத்திவைக்கும் ஒவ்வொரு கணப்பொழுதும் அர சாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தென்பகுதியில் மேலெழும் என்பது உண்மையானது.

அதேவேளை உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஆட்சேர்ப்புச் செய்வற்கான முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்கக்கூடிய இலங்கைத் தமிழரசுக்கட்சி இறங்கியுள்ளது.

ஆக, தேர்தல் வரப்போவது உறுதியாயிற்று. தேர்தலில் வெற்றிபெறுவதற்காக என்னென்ன தந்திரோபாயங்களை முன்வைக்க முடியுமோ எப்படியெல்லாம் தமிழ்மக்களை ஏமாற்ற முடியுமோ அதுவெல்லாம் நடைபெறத் தொடங்கிவிட்டது.

உள்ளூராட்சித் தேர்தலில் குறித்த அரசியல் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் களை கட்டி விட்டன.

யாழ்.மாவட்ட செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் யாழ்.மாவட்ட செயலக விளம்பரங்களை வலம்புரிப் பத்திரிகைக்குத் தராது நிறுத்தி வைத்துள்ளார். தொடர்ந்து தேர்தல் திணைக்கள விளம்பரங்களும் வலம்புரியில் வெளிவராமல் செய்து வலம்புரி வாசகர்கள் தகவல் அறியாமல் இருப்பதற்கான திட்டங்களும் தயாராகி விட்டன என்ற தகவல்கள் உள்ளூராட்சித் தேர்தல் 2018 ஜனவரியில் நடைபெறப் போகிறது என்பதற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளன.

எத்தனையோ எதிர்ப்புக்கள், எத்தனையோ போராட்டங்களைச் சந்தித்து தமிழ்மக்களின் குரலாக ஒலிக்கும் வலம்புரியை எவரும் நசுக்க நினைத்தாலும் அதற்கு தமிழ் மக்களும் இறைவனும் நிச்சயம் இடம் கொடுக்கமாட்டார்கள் என்பதை மட்டும் தர்மத்தின் பெயரால் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

அதேசமயம் எச்சந்தர்ப்பத்திலும் வலம்புரி தர்மத்தை, நீதியை நிலைநாட்டுவதில் இருந்து பின்வாங்கியதும் கிடையாது.

ஒருமுறை, இப்போது யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக இருக்கும் நா.வேதநாயகன் அவர்கள் முல்லைத்தீவு அரசாங்க அதிபராக இருந்தபோது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதை எதிர்த்தும் அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் ஆசிரியர் தலையங்கம் எழுதிய ஒரே நாளிதழ் வலம்புரி என்பதை இலங்கையிலுள்ள அத்தனை நாளிதழ்களுடனும் ஒப்பிட்டுக் கூறமுடியும்.

ஆக, தர்மம், நீதி, நியாயம் எங்கு நிலைக்க வேண்டுமோ அங்கு குரல் கொடுப்பதே பத்திரிகை தர்மம். அதனை கீதோபதேசம் செய்த கண்ண பரமாத்மாவின் கரத்தில் இருக்கும் வலம்புரி என்ற சங்கின் பெயர் கொண்டு வெளிவரும் வலம்புரி நாளிதழும் செய்தாக வேண்டும் என்பதே நம் இலட்சியம்.

அறம் நீங்கி, அரசியல் வால்பிடித்து மக்களுக்கு கேடு செய்து வாழுதலை விடவும் பிச்சை புகுதல் மேல் என்ற உயர்ந்த சிந்தனையை இவ்விடத்தில் பதிவாக்கிக் கொள்கிறோம்.

மேலும் உள்ளூராட்சித் தேர்தல் வருகின்ற போது அதனை தமிழ்மக்கள் எங்ஙனம் எதிர்கொள்ளப் போகின்றனர் என்பதே நாம் முன்வைக்கும் கேள்வியாகும்.

கடந்த முறை எங்கள் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி ஒட்டுமொத்தத்தில் தோல்வி என்பதை அறிந்திருந்தும் மாற்றுவழியின்றி இருத்தல் எங்கள் வாழ்வைச் சிதைத்துவிடும் என்பதால் தமிழ்மக்கள், பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி உள்ளூராட்சித் தேர்தல் பற்றிச் சிந்தித்து நல்லதொரு முடிவை எடுத்தாக வேண்டும்.


விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

## முரட்டு ஆடு



அது ஒரு மலையடிவாரம் அதன் அருகே அழகிய ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அங்கே ஆறு ஓடிக் கொண்டிருந்ததால் மலையடிவாரத்தில் பச்சைப் பசேல் என்று புல் வளர்ந்திருந்தது.

மலையடிவாரத்தின் மேலே ஆங்காங்கே காணப்படும் சமபரப்புப் பகுதியில் சின்னஞ்சிறு வீடுகள் இருந்தன. அங்கு வாழும் மக்கள் தங்களது பிழைப்புக்காக ஆடு, மாடு இன்னும் பிற கால்நடைகளை வளர்த்து வந்தனர். அதிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் வளர்க்கும் ஆடுகள் மலையடிவாரத்தில் வளர்ந்துள்ள புல்லைத் தின்ன அங்கே மேய வரும். மாடுகளால் சரிவில் நிற்க முடியாததால் அவைகள் அங்கு வருவதில்லை.

அங்கே ஒரு முரட்டு ஆடு இருந்தது. உடல் பருத்து, கொம்புகள் இரண்டும் வளர்ந்து முறுக்கிக் கொண்டுநின்றன. அதைப் பார்த்து மற்ற ஆடுகள் பயந்து ஒதுங்கிப் போய் விடும். அதனால் அந்த முரட்டு ஆட்டுக்கு திமிர் வந்து விட்டது. அது மேய்ந்து கொண்டிருக்கும் இடத்தின் அருகே வேறு ஆடுகள் வந்து விட்டால் அவைகளை முட்டி தூர விரட்டி விடும்.

ஒரு நாள் !

ஆற்றின் கரையோரம் மேய்ந்து கொண்டிருந்த ஆடு ஒன்று ஆற்றினோரம் வந்த முதலையைப் பார்த்து விட்டு பயந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி வந்தது. பயந்து ஓடி வந்த அந்த ஆடு முரட்டு ஆடு மேய்ந்து கொண்டிருந்த இடத்தின் அருகே வந்து விட்டது.

அதைப் பார்த்த முரட்டு ஆடு ஓடி வந்த ஆட்டைப் பார்த்து, "நான் மேய்ந்து கொண்டிருக்கும் இடத்திற்கு நீ எப்படி வரலாம்" என்று கோபமாகக் கேட்டது.

அதற்கு அந்த ஆடு, "அங்கே முதலையைப் பார்த்தேன். அதனால் வேகமாக ஓடி வந்து விட்டேன்" என்று அமைதியாகச் சொன்னது.

(தொடரும்)

## எல்லாள மன்னன்



அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு கி.மு. 205 இல் இருந்து கி.மு. 161 வரை இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னன் எல்லாளன்.

இலங்கை வரலாற்று ஆவணமான மகாவம்சம் இந்தத் தகவலை பதிவு செய்துள்ளது.

இவர் ஆட்சிக்காலம் நீதியானதாகவும் சிறப்பானதாகவும் அமைந்ததாகவும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

எல்லாளன் பகைவர்க்கும் நண்பர்க்கும் சமநீதி வழங்கியதாக கூறும் மகாவம்சம், அவனது நீதிநெறி தவறாத ஆட்சியை மனுநீதிச் சோழனின் கதைகளோடு இணைத்து விபரித்துள்ளது.

நீதி வேண்டுவோர் எந்த நேரமும் கோட்டைவாசலில் தொங்கும் கயிற்றினை இழுத்து இந்த மணியை ஒலியெழுப்பின் மன்னன் உடன் வந்து விசாரித்துத் துயர் தீர்ப்பான்.

உதாரணமாக,

ஒருநாள் ஒரு தேரில் திசவாவியை நோக்கி எல்லாளனின் மகன் பயணப்பட்டபோது, வழியில் பசுவுடன் படுத்திருந்த கன்றின் கழுத்தின் மேல் தேர்ச்சில் ஏறியதால் கன்று அவ்விடத்தில் இறந்து விட்டது. தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை இழுத்து அடித்து, எல்லாளனிடம் நீதி கேட்டது. எல்லாளன் தனது மகனின் தலையைத் தேர்க்காலிலிட்டு அதேவிதமாக மரண மேற்படுத்தி நீதி வழங்கினான்.

பாம்பொன்றுக்கு இரையான குஞ்சையிழந்த தாய்ப்பறவை ஆராய்ச்சி மணியை அடித்தது.

ஒரு வயோதிப மாது வெயிலில் அரிசியைக் காயப்போட்டிருந்த போது, பருவம் தப்பிப் பொழிந்த மழையால் அரிசி முழுவதும் பழுதடைந்து போனது. அவள் எல்லாளனிடம் முறையிட்ட போது, அவன் வருணனிடம் வாரத்திற்கொரு தடவை இரவில் மட்டும் மழை பொழிய வேண்டுதல் விடுத்ததாக மகாவம்சம் வர்ணிக்கிறது.

காக்க வண்ண தீசனினதும் விகாரமகாதேவியினதும் மூத்தமகன் காமினி அபயன் ஆவான். கருவிலிருந்தே இனவெறியூட்டப்பட்டு வளர்த்த துட்டகாமினி தன் தந்தையின் மறைவிற்குப்பின் பெரும்படையுடன் எல்லாளனின் மீது படையெடுத்தான்.

இப்படையெடுப்பை பற்றிய போதிய ஆதாரங்கள் மகாவம்சத்தில் காணப்படுகின்றது. இறுதி யுத்தமானது விஜிதபுரவில் நடைபெற்றதாக கூறப்படுகின்றது.

எவ்வளவு முயன்றும் துட்டகைமுனுவால் எல்லாளனை வெற்றிகொள்ள முடியவில்லை. அவனது படையிலே இறப்புக்கள் அதிகமாக காணப்பட்டதாக சான்றுகள் கூறுகின்றன.

அதனால் எல்லாளனை தனிச்சமருக்கு அழைத்தான். துட்டகைமுனு சதியினாலே எல்லாளனைக் கொன்றதாக சில வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

## பொது அறிவு

1. உலகில் நூறு வருடங்களுக்கு மேல் உயிர் வாழும் உயிரினம் எது?
   **ஆமை**
2. நட்சத்திரத்தின் ஆயுட்காலம் எத்தனை ஆண்டுகள்?
   **10 மில்லியன் ஆண்டுகள்**
3. உப்பை அதிகமாக விரும்பி சாப்பிடும் விலங்கினம் எது?
   **முள்ளம் பன்றி**
4. உலகிலேயே அதிக தபால் நிலையம் உள்ள நாடு எது?
   **இந்தியா**
5. உலகில் தாய்மொழி இல்லாத நாடு எது?
   **சுவிட்சர்லாந்து**
6. உலகில் காகங்கள் இல்லாத நாடு எது?
   **நியூசிலாந்து**
7. ரூபாய் நோட்டுகள் எதனால் உருவாக்கப் படுகிறது?
   **பருத்தி இழைகள்**
8. உலகிலேயே சிறிய முட்டையிடும் பறவையின் பெயர் என்ன?
   **ரீங்காரப்பறவை**
9. கண்கள் இருந்தும் பார்வையில்லாத பிராணி?
   **வெளவால்**
10. தன் வாழ்நாளில் நீரே அருந்தாத மிருகம்?
   **கங்காரு**

இருப்பு முடிவுறுத்துவதற்காக
30 % கழிவு நிபந்தனைக்குட்பட்டது
சீமேந்திலான நிலத்திற்கு பதிக்கும் கற்கள்




தொடர்புகளுக்கு :
சுந்தரலிங்கம் : 077 262 8796
கனகநாயகம் : 077 373 3513
SUNTECH Engineers,
பகுதி E, கைத்தொழில் பேட்டை,
தோப்பு, அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## இலங்கை அணி பற்றி?

## உங்களுக்குத் தமிழ்த் தலைமையில் அவ்வளவு கோபம் எதற்கு?

## இந்துக் கல்லூரியில் நடந்த தமிழ் விழாவைப் புறக்கணித்த சம்பந்தர்...

**சயன் — யாழ்ப்பாணம்**

**இந்துக் கல்லூரியில் நடந்த தமிழ் விழாவைப் புறக்கணித்த சம்பந்தர் ஐயா கொழும்பில் நடந்த தீபாவளிக் கொண்டாட்டத்தைப் புறக்கணிக்காதது ஏன்?**

தமிழுக்கான விழா, தமிழருக்கான விழா, தமிழ் மாணவர்கள் தேசியத்தில் பெற்ற விருதுகளுக்கான விழா, தமிழர் தாயகத்தில் நடக்கும் விழா, நாட்டின் ஜனாதிபதி பங்கு கொள்ளும் விழா, ஜனாதிபதியின் கைகளால் பரிசுகள் வாங்க காத்திருக்கும் மாணவர்களின் விழா. இப்படி எமக்காக எம்மாலே எடுக்கப்பட்ட விழாவுக்கு எம் தலைமை எதிர்ப்பு- புறக்கணிப்பு.

பேரினத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு கோலாகலமாகக் கொண்டாடிய தீபாவளி விழாவில் பங்கேற்பு- ஆதரித்து ஆரவாரப் பேச்சு. அப்பா முருகா நீ தமிழ்க்கடவுள் தானே. இதையெல்லாம் நீ பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாயா?

ஜனாதிபதிக்கு வடக்கில் எதிர்ப்பு. தெற்கில் ஆதரிப்பு. அப்பா சாமி போதுமடா. இனியும் இதைச் சகிக்க தமிழராகிய எமக்கு திராணி இல்லையடா முருகா!

**தர்மா — மானிப்பாய்**

**உங்களுக்கு ஒரு நல்ல பெண்ணாக நான் பார்க்கவா வியாசரே?**

அடே தர்மா நீ பக்கத்து இலைக்குப் பாயாசம் கேட்பது எனக்குப் புரிகிறது. ஆனால் புரிய வேண்டிய உன் பெற்றோருக்கு புரியவில்லையே.

**சச்சிதானந்தம் — பொலிகண்டி**

**உங்களுக்குத் தமிழ்த் தலைமையில் அவ்வளவு கோபம் எதற்கு?**

தமிழர்க்கு ஏதும் செய்யாமல் தாம்தான் தமிழரின் தலைமை என்று கொக்கரித்தால் கோபம் வராமல் என்ன செய்யும்.

**செல்வா — பண்டத்தரிப்பு**

**வரம்புமீறல் என்பது எதுவோ?**

பஸ்ஸில் பயணிக்கும் போது நீங்கள் அக்கா தங்கையுடன் பிறக்கவில்லையா என்ற குரலை எப்போதாவது கேட்டதுண்டா. வரம்பு மீறப்படும் சந்தர்ப்பத்திற்கு இதைவிட வேறு உதாரணம் சொல்ல முடியாது.

**கௌசிதாஸ் — குப்பிளான்**

**கந்தசஷ்டி விரதம் பற்றிக் கூறுங்கள்?**

சூரனை வதம் செய்யப் புறப்பட்ட முருகனுக்கு வெற்றி வேண்டி அவள் தாயவள் உமையினால் அனுஷ்டிக்கப்பட்டது. இப்போது பலர் அதன் அர்த்தம் தெரியாது அனுஷ்டிக்கின்றனர். அவ்வளவுதான்.

**சுலக்ஷனா — யாழ்ப்பாணம்**

**காதலித்துவிட்டு கைவிடும் ஆண்களைப் பற்றி?**

போன் பாவிக்கின்றோம். திடீரென சிம் பழுதுபட்டு விட்டது. அதற்காக போனைத் தூக்கி எறிகிறோமா. வேறு சிம்காட் மாற்றுகின்றோம் தானே. கைவிடப்பட்டதற்காக கட்டி அழுவதை விட அதிலிருந்து மீண்டெழுவதுதான் வாழ்க்கை.

**வேணு — மல்லாகம்**

**தத்துவம் ஒன்று சொல்லுங்களேன்?**

பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார் கூட அணை கட்டாததால் அடி வாங்கத்தான் செய்தார். That is the Life.




**மனோ — இணுவில்**

**தீபாவளி எப்படிப் போச்சு?**

காலை ஆறு மணி வரைக்கும் அமைதியாகத் தான் இருந்தது. 6.10 am Happy Deepawali dada, viyaa...darling... இப்படி ஒரு குறுஞ்செய்தி. அதை என் அன்பு மனைவி பார்த்து விட்டாள். அதன் பின் தீபாவளி சும்மா டீபாவளி...

**சுதன் — குப்பிளான்**

**மைத்திரி ஐயா சொன்ன பேய்க்கதை பற்றி?**

தெரிந்த பேயை விட தெரியாத பிசாசு மோசமானது என்றார் அப்போதைய ஜனாதிபதி மகிந்த. என்னைப் பலமிழக்கச் செய்து பேய்களிடம் ஆட்சியைக் கொடுக்கப் போகிறீர்களா? என்றார் மைத்திரி. மொத்தத்தில் பேயை தமிழர்கள் அதிகம் நம்புகிறார்கள் என்பது அவர்களுக்கு விளங்கிவிட்டது.

**சாங்கர் — கொம்மாந்தறை**

**இலங்கை அணி பற்றி?**

நம்ம டீம் மீண்டுவிட்டது என்று ஒரு பெருமூச்சு விட்டு முடிக்க முன், அப்பாடா இதயம் வெடிக்கும் போல இருக்கே. இந்த ஒருநாள் தொடர் தேவைதானா என எண்ணத் தோன்றுகின்றது.

**தமிழ் — இணுவில்**

**உங்களுக்குப் பிடித்த உணவு எது?**

நான் சாப்பிடுவதற்காக வாழவில்லை. வாழ்வதற்காகச் சாப்பிடுகிறேன். ஆதலால் உணவே மருந்து என்பதை நூறுவீதம் கடைப்பிடிக்கிறேன்.

**அனு — கரணவாய்**

**உலகத்தில் சிறந்த மொழி எது?**

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு. நான் தமிழ் காக்கை. என் தமிழ்க்குஞ்சு எனக்குப் பொன் குஞ்சே.

**தவம் — உரும்பிராய்**

**காதலும் கடந்து போகும் என்பது உண்மையா?**

காதலியுடன் அவள் அண்ணனும் நடந்து போவான் என்பதுதான் உண்மை.

**திலக்ஷன் — புதுக்குடியிருப்பு**

**கெட்ட கனவுகள் ஏன் வருகிறது?**

ஆழ்மனதில் பதிந்து கிடக்கும் சிந்தனைகளே கனவாக வெளிப்படுகின்றன.

**கருணானந்தன் — றெட்பானா**

**நீங்கள் ஒரு சிறைச்சாலை அதிகாரி ஆனால்?**

சிறைச்சாலை அதிகாரியானால் அரசியல் கைதிகளை விடுதலை செய்யமுடியாது. ஜனாதிபதியானால் மட்டுமே அவர்களை விடுதலை செய்யமுடியும்.

**குரு — மானிப்பாய்**

**உங்கள் மனம் படபடத்த சந்தர்ப்பம் உண்டா?**

தமிழ் தின நிகழ்வு ஆரம்பமாகின்றது. ஹலோ.. ஹலோ... மைக் செற்றிங் வன் ரூ த்ரி... நிகழ்வில் அடுத்ததாக **தமிழ்த் தாய் வாழ்த்து** எனும் போது நெஞ்சம் படபடக்கும்.

**அச்சு — யாழ்ப்பாணம்**

**தியாகங்கள் வீண் போனதுண்டா?**

வீரம்மிகு சிங்கங்கள் வாழும் காட்டில்தான் குழிபறிக்கும் குள்ளநரிகளும் வாழ்கின்றன. இந்த நரிகளால் குழி பறிக்க முடியுமே தவிர தியாகங்களை கொச்சைப்படுத்த முடியாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்



## தேடுகின்றேன்


கண்ணிருந்தும் குருடியாய்
தேனான என் வாழ்வைத்
தெருவோரம் தொலைத்துவிட்டு
தேடுகின்றேன்
அன்பிற்கும் அரவணைப்பிற்கும்
அதிபதியாய் விளங்கிய என் தந்தையை
அந்நியனிடம் தொலைத்துவிட்டு
தேடுகின்றேன்
காதல் வயப்பட்டு அன்பாக கரம்பிடித்த
என் கண்ணான கணவனை
கயவனிடம் தொலைத்துவிட்டு
தேடுகின்றேன்
இன்னும் தேடுகின்றேன்
தன்னகத்தே தனிமையாய் வாழும்
என் அன்பான குழந்தைக்கு
ஒளிமயமான ஓர் எதிர்காலத்தை...

**பி.புஸ்பமாலா**
**மறவன்புலோ**

## தன்னலம் பேணி ஜீதொழில் செய்யோம்

சுயநல வேலை சுவாசித்து நிதம்
சுற்றித் திரியும் நிலை
சுதந்திர உலகினிலே
சுட்டெரிக்கப்படவேண்டும்
தன்னலம் காத்து பிறர்நலம் பேண
தயவுடன் அனைவரும் இன்றே
தரணியில் உயர்வதற்கு
தளராது முயலல் வேண்டும்
பொய்மையைத் துறந்து என்றும்
பொதுநலம் பேணி
மெய்மையை நிலைநாட்ட
மரிக்கவேண்டும்
ஒற்றுமையை வளர்த்து நீ-
ஒன்றிணைந்து செல்ல
தன்னலச் சுவரை இன்றே
தகர்த்தெறிய வேண்டும்
உரிமைகளை வென்று
உளமார மகிழ சிந்தையிலே
உன்நலம் துறந்து- நீ
உரத்துக் குரல் கொடுக்க வேண்டும்
விஞ்ஞான உலகினிலே
விந்தை பல புரிந்து
தந்தை தாயை மறக்கும்
தன்னலம் ஒழிய வேண்டும்
தன்னல வேட்கையோடு
தரணியில் உலாவி
பிறர் நலம் கெடுக்கும்
பேதமை அகல வேண்டும்

**பீ.மேரி சிந்துஜா**
**மிருசுவில்**



## கடந்த இரவு

பௌர்ணமி இரவு!
பால் போல் நிலவு
இருளைக் கொன்று தின்றது!
தனிமை ஒட்டிக்கொண்டது
தலையணையை கட்டிக் கொண்டேன்!
சிந்தனைகள் சிதறியது!
என்மனம் பதறியது!
தூரத்தில் நாய்களின் ஊளையிடல்
நெஞ்சை உலுக்கிப் போட்டது!
தூக்கம் தொலைந்தே போனது...
எங்கே போய் தேடுவேன்?
தவிப்பு தலையை அழுத்தியது...
கற்பனை எங்கெங்கோ எல்லாம்
தாவியது குரங்கைப் போல...
கண்ட கனவில்
பாதி நினைவில்லை!
மீதி பயமுறுத்தியது!
எங்கே பலித்துவிடுமோ?
மனம் கதறி அழுகிறது
ஆறுதல் சொல்ல யார் இருக்கிறார்?
மனதைச் சமாதானப்படுத்தும்
முயற்சியில் நான்...
கைப்பேசி ஒலித்தது!
கண்விழித்துப் பார்த்தேன்
பொழுது புலர்ந்திருந்தது!
மீண்டும் எவ்வாறு தூங்கினேன்
என்பது மட்டும் புலப்படவில்லை!
அந்த இரவைக் கடந்ததில்
அப்படியொரு ஆனந்தம்...
ஏனென்பது புரியாத புதிரே...

**த.மோகனருபன்**
**சுழிபுரம்**

## சீமைச் சீமான்களுக்கு

மன்றம் சென்ற சீமான்களே!
நீண்டு நெடுங்காடாய் கிடக்கும்
உங்கள் மனங்களைத்
தட்டிக் கேளுங்கள்–தமிழர்க்காய்
இன்றுவரை என்ன செய்தோம் என்று?

அன்புக்கினிய என் உறவுகளே
என்று மூச்சு முட்டக் கத்தினீரே
இளையோரை உசுப்பேற்ற
பக்கம் பக்கமாய் படித்தீரே–எங்கே
உங்கள் வீரப்பேச்சு

உங்களுக்காய் உங்களுக்காய் என்று
எங்களுக்கு என்ன செய்தீர்
புள்ளடிக்கு மட்டும்தான் அந்தப்புளுகா?
நல்லது செய்ய யார்வரினும்–நடுவில் புகுந்து
தொல்லை கொடுக்கிறீர் தொகுதியென்று

புள்ளடி போட்ட எங்களுக்கு
என்ன செய்தீர் என்று பார்த்த போதுதான்
எம் நெற்றியில் நாமம் போட்டதை
உணர்ந்து கொண்டோம்– எல்லாம்
உணர்ந்து கொண்டோம்

அடுத்தமுறை இல்லை உமக்கென்று
சத்தியம் செய்தோம்
மீண்டும் வருகிறீர்
தமிழ்த்தேசியம் பேசியபடி– என்ன செய்ய
சுறணை கெட்ட தமிழராச்சே நாம்

இன்னொரு பிறவி உண்டெனில்
சிங்கள இனத்தில் பிறக்க வேண்டி
சிந்தனை செய்கிறார் தமிழர்
உம்மை நம்பி வந்தனை செய்கிறார்–இனி
வந்திடாதீர் வீட்டுப் பக்கம்-

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்- 373




## தமிழன் என்கிற திமிரு எனக்கும் உண்டு

கனி உண்ண வந்த பறவைகள் நாம்
வெறும் மரங்கொத்தி கொத்தியாகவா
மரித்துப் போவது மானிடா
ஓராயிரம் ஆசைகளை வெளிக்கொணர
ஓர் இலட்சம் மொழிகள்
இவ்வையகத்தில் பிறந்தபோதும்
தாரகை நடுவே தண்மதியைப் போல்
வீற்றிருக்கும் எம்முடன் பிறந்த
தமிழ்மொழியின் உச்சரிப்பையும்
உபசரிப்பையும் தனித்துவமாக
எடுத்துக்காட்டி தடம் பதித்து
பெருமையுடன் வாழ்ந்திடு
தமிழா மீண்டும்

**கிண்ணியா**
**நாபீர்**

## எழுக தமிழ்

பாரினை ஆண்ட பழைய தமிழ்
நீதியைத் தேடி எழுந்த தமிழ்–இன்று
விண்ணினைத் துளைத்து
விடியலைக்காணும்
வீரத்தின் சான்று எங்கள் தமிழ்!
காலத்தால் அழியாத
காவியம் படைத்திட்ட
ஞாலத்தில் அழியாத
மொழயது எங்கள் தமிழ்
பூதலம் உள்ளவரை
புகழ் பூத்து நிற்கின்ற தொன்மை
வாய்ந்ததோர் செம்மொழி
எங்கள் தமிழ்

**கி.சரண்யா**
**தாவடி, யாழ்ப்பாணம்**

## வாழ்க தமிழ்

தலைமை (கள்) தவறியதால்
தமிழர் தலைவிதியும்
தலைகீழாகி விட்டது...
வேஷமிட்டே " தமிழ்" என்று
கோஷமிட்டார்கள்...
பொய்களை சுவையாகக் கூறி
நம்ப வைத்தார்கள்
தமிழ் தலைவர்கள்
கைவிரித்தாலும்
தமிழ்த்தாய் என்றும்
எம் சிரசுக்கு மேல்தான்!
மரணத்தின் வாசலில் நின்றும்
உரக்க குரல் கொடுப்போம்
"வாழ்க தமிழ்" என்று...

**த.மோகனருபன்**
**சுழிபுரம் கிழக்கு**

## தமிழ்

பிறப்பு அன்னையால்
சிறப்பு கல்வியால்
பெருமை நான் ஒரு
தமிழன் என்பதால்

**வி.கஜானன்**
**வடலியடைப்பு**

## மூச்சு தமிழ்

கல்தோன்றி மண் தோன்றாக்
காலத்தில்
முன் தோன்றிய மூச்சு தமிழ்
முதிர்ந்து வீழ்ந்து விட்டதா
அல்லது வீழ்த்தப்படுகிறதா
வீழும் தமிழை விரல் கொண்டு
தூக்கி நிறுத்து
துணைக்கரம் கொடு தமிழா!

**ரி.விஜிதா**
**மயிலிட்டி**

## தமிழன் தலைவிதி

தமிழ் என்ற மொழியதனை
தரம் என்று மனம்குளிரச்
செந்தமிழ்ழ தூவிடினும்
ஒரு மனதாய் உன் தமிழன்
சேரும் வரை வந்தேறு
குடி என்றும் வசைபாடி
தரம் குறைத்து தமிழன்
தலைவிதியை தடுக்கையிலும்
தலைமேல் காவித்தான்
பாதகையால் தமிழை
காண்பாய் தமிழா

**நெடுந்தீவு சிறி**

## வீறுகொண்டெழுக தமிழே

கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்தின் முன்தோன்றி
புகழ்பூத்த மூத்த தமிழே
முத்தமிழாய் செந்தமிழாய் தீந்தமிழாய்
மூவேந்தர் காலத்தின் நற்றமிழாய்
இயலாகி இசையாகி நாடகமாய்
இவ்வுலகில் எழில் கொஞ்சும்
கன்னித் தமிழாய்
நூலாண்ட புலவரின் பிள்ளைத் தமிழாய்
இன்று எடுப்பார் கைப்பிள்ளையான
எங்கள் தமிழே
வீறுகொண்டெழுந்திடுவாய் வீரத்தமிழே
விண்ணதிர ஒலிக்கட்டும் உந்தன் புகழே
எங்கள் தமிழே இன்பத் தமிழே எழுக தமிழே .

**சி.கஜா ,முரசுமோட்டை**

## தாயினும் மேலாக (ன) தலைவன் காத்த தமிழ்

உயிர் தமிழ்...!
கல், மண் தோன்றாக்
காலத்தின் முன்
தோன்றியதெம் மூத்த தமிழ்...!
இயல்,இசை,நாடகங்
கொண்டதெம் முத்தமிழ்...!
உலகமே உற்றுப் பார்க்கும்
செம்மொழியெம் செந்தமிழ்...!
தாயினும் மேலானதெம் தேன் தமிழ்...!
தலைக்குமேல் வைத்து
நீ கொண்டாடு– எம்
தலைவன் காத்த தமிழ்– இது
துணிந்து பண்பாடு

**சுபா. சுபன்**
**சுழிபுரம் மேற்கு**

# மௌனத்தின் தேடல் -374



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 25.10.2017ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே.
முன்னுரிமை வழங்கப்படும்.


-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு மெய்ப்பட வேண்டும்

கற்பக விநாயகர் கோயில் மணி அடித்து ஓய்ந்தது. பின்னேர பூசைக்கான ஆயத்த மணி அது. மத்தியான சாப்பாட்டை முடித்து குட்டித் தூக்கத்தில் இருந்த கமலா திடுக்குற்று எழுந்தாள்.

" அதுக்குள்ள நாலு மணி ஆயிற்று. நேரம் போற போக்கு" என்று தனக்குத் தானே சொல்லியபடி கூந்தலை அள்ளி முடிந்தவளாய் வெளியில் வந்து பார்த்தாள். மழைக்கான அறிகுறி வானத்தில் தென்பட்டது. திரட்சியான கறுத்த மேகக் கூட்டங்கள் ஓரணியாகச் சேர்ந்து கொண்டிருந்தன. மெல்லிய குளிர்க்காற்று உடலை வருடிச் சென்றது. ஒருகணம் உடலைச் சிலிர்த்துக் கொண்ட கமலா "மழை வரப்



சிறுகதை

போகுது" என்று சொல்லியவாறு வீதிக்கு இறங்கினாள். ஓட்டமும் நடையுமாய் அருகில் இருந்த தோட்ட வெளிக்குச் சென்றாள்.

பூமிப்பந்தின் மேல் பச்சைக் கம்பளம் விரித்தது போல் எங்கும் பசுமையாய் இருந்தது. ஆங்காங்கே சில மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அங்கே அவளைப் பார்த்ததும் "அம்பா" என்று கத்தியது அந்தச் செங்காரி. பதிலுக்கு "ம்பா" என்று கத்தியது அதன் கன்றுக் குட்டி.

" என்ன மேய்ஞ்சது காணாதோ" என்று கேட்டபடி இரண்டையும் அவிழ்த்து வீட்டிற்கு கொண்டு வந்தாள் கமலா.

ஆம், கமலாவின் குடும்பம் பெண் தலைமைத்துவக் குடும்பம். இவளது கணவனும் வன்னி யுத்தத்தில் காணாமல் போனவன்தான். நிர்க்கதியாய் நின்ற இவள் குடும்பத்திற்கு வெளிநாட்டு உறவுகள் சிலர் நல்ல இன மாடும் கன்றும் பெற்றுக் கொடுத்திருந்தனர். அதுதான் இவள் வாழ்வாதாரம்.

மாட்டையும் கன்றையும் அதன் சிறிய கொட்டகையில் கட்டியவள் தவிட்டினைக் கரைத்து வைத்தாள். பின்னர் பாலைக் கறந்து பால் வாளியில் ஊற்றி வெளி வராந்தாவில் வைத்தாள். சிறிது நேரத்தில் ஐயா ஒருவர் வந்து அப்பாலை தனது பெரிய பால் வாளியில் ஊற்றி எடுத்துச் சென்றார். அவர் வீடுகளுக்குப் போய் பால் வியாபாரம் செய்பவர்.

"பிள்ள முடிஞ்ச இந்த மாத பால் கணக்கைப் பார்த்து வை. நாளைக்கு கணக்கு முடிப்பன்" என்று கூறிச் சென்றார்.

மனக்கணக்குப் போட்டவாறு குசினிக்குள் தேநீர் போடச் சென்றாள் கமலா. காலை ஐந்து லீற்றர், மாலை மூன்று லீற்றர். முப்பது நாளுக்கும் இருநூற்று நாற்பது லீற்றர். லீற்றர் எண்பதுப்படி இம்மாதம் பத்தொன்பதாயிரத்து இருநூறு ரூபா. இதுதான் இவள் மாத வருமானம்.

தேநீரைக் குடித்தவாறு வெளிவாசல் தூணோடு அமர்ந்திருந்தாள். பிள்ளையார் கோயில் பூசைக்கான மணி ஒலித்துக் கொண்டிருந்தது. "பிள்ளையாரப்பா" என்று மனதிற்குள் வேண்டிக் கொண்டாள்.

கமலாவின் கணவன் கண்ணன். மிகவும் கெட்டிக்காரன். உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெற்றவன். தமிழீழ வைப்பகத்தில் மேலாளராகப் பணி புரிந்தவன். கடைசிவரை வைப்பகத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதில் அரும்பாடு பட்டவன்.

இறுதி யுத்தத்தில் வைப்பகத்தின் சொத்துக்கள் களவாடப்பட்டபோது இவனும் இவள் கண் முன்னே களவாடப்பட்டான். இன்றுவரை கண்ணில் படவில்லை. இவளும் அனைத்து இடங்களுக்கும் சென்று பார்த்து வந்தாள். இருந்த சொற்ப நகைகளையும் தொலைத்ததுதான் மிச்சம். பயன் ஏதுமில்லை.

"அம்மா..." என்று கூப்பிடுவது கேட்டு பழைய நினைவுகளில் இருந்து விடுபட்டவள் அரனும் அகிலும் ஓடி வருவதைக் கண்டாள். அரன் தரம் எட்டில் கல்வி கற்பவன். அகில் தரம் ஐந்து புலமைப் பரிசில் சோதனை எழுதிவிட்டு பெறுபேற்றுக்காக காத்திருப்பவன்.

அயல் வீட்டுச் சிறுவர்களுடன் விளையாடி விட்டு வரும் அவர்கள் வேர்த்துக் களைத்திருந்தனர்.

"தேத்தண்ணி போட்டு வைச்சிருக்கன். போய் குடியுங்கோ" என்றாள் தாய்.

" அம்மா ஸ்கொலர்சிப் றிசல்ட் இரவுக்கு வருதாம்" என்றான் மூத்தவன்.

"அப்படியா" என்று புதகளிப்புடன் எழுந்த தாய் "பிள்ளையாரப்பா என்ர பிள்ளை ஸ்கொலர்சிப் பாஸ் பண்ணிடனும்" என்று வேண்டிக் கொண்டாள். பின் அகிலை அணைத்தவாறு "நீ நல்லாச் செய்தாய் தானே" என்றாள்.

" எத்தனை முறைதான் கேட்பீங்க?" என்று சலித்தவாறு தேநீர் குடிக்க ஓடினான் அகில்.

இரவு எட்டு மணி இருக்கும். பக்கத்து வீட்டு பாக்கியம் மாமி, "என்னடி கமலா, கேள்விப்பட்டனியே? இண்டைக்கு ஸ்கொலர்சிப் றிசல்ட் வருதாம். உன்ர மகன் பாஸ் பண்ணுவானே" என்று கேட்டவாறு முற்றத்தில் போட்டிருந்த கதிரையில் வந்து அமர்ந்தாள்.

என்ன புதினம் என்றாலும் பாக்கியம் மாமிக்கு தெரிந்துவிடும். புதினம் அறிவதில் அலாதிப் பிரியம்.

"ஓம் ஓம் வாங்கோ மாமி" என்று வரவேற்றாள் கமலா.

"என்னடா நீ பாஸ் பண்ணுவியா?" என்று அகிலைப் பார்த்துக் கேட்டா பாக்கியம் மாமி. புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்த அகில் "ஏன் பாட்டி பாஸ் பண்ணாட்டித்தான் என்னவாம்? என்று கோபத்துடன் கேட்டான்.

பாக்கியம் மாமியின் கேள்வி அவனுக்குப் பிடிக்கவேயில்லை. எத்தனை பேருக்குத்தான் பதில் சொல்வது.

"என்னடி உன்ர மகன் உப்படிக் கதைக்கிறான்" எனக் குறைப்பட்டாள் பாக்கியம் மாமி.

"தம்பி" என்று அதட்டினாள் கமலா.

"பின்ன என்னம்மா, இந்த உலகத்தில உள்ள பெரியவர்கள் எல்லாம் ஸ்கொலர்சிப் பாஸ் பண்ணியே வந்தவர்கள்" என்று தன் புத்திக்கு எட்டியவாறு கேட்டான் அகில்.

அவன் கேட்ட கேள்வி கமலாவிற்கு மட்டுமல்ல பாக்கியம் மாமிக்கும் ஒரு பெரிய கேள்விக்குறியை ஏற்படுத்தியது.

"உனக்கு இந்த ஊர்ப்பள்ளிக்கூடம்தான் சரி" என்று சாபமிட்டதுபோல் விருட்டென்று எழுந்து சென்றாள் பாக்கியம்மாமி.

ஆம், உண்மைதான். இந்த ஸ்கொலர்சிப் சோதனை எத்தனை பேருக்குச் சோதனையாய் அமைகின்றது. இது ஒரு சமூக நோய் போல் எல்லோரையும் பிடித்து வருகின்றது.உயர்ந்த, தாழ்ந்த சமூகம் என்று இல்லாமல் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற இனபேதம் இல்லாமல் அனைவரையும் பீடித்து வரும் ஒரு நோயாக உருவெடுத்து வருகின்றது. பிள்ளைகள் மட்டுமன்றி பெற்றோரையும் உடல், உளத் தாக்கத்திற்கு உள்ளாக்குகின்றது. உதவிப் பணத்தொகை, விவசாய, வறிய குடும்பங்களுக்கு கிடைப்பது சிறிய அனுகூலமாக இருந்தபோதிலும் சித்தியடையும் பெரும்பாலான மாணவர்கள் அரச உத்தியோகத்தர் பிள்ளைகளே. இதனால் விவசாய, வறிய குடும்ப மாணவர்கள் அல்லவா பாதிக்கப்படுகின்றனர்.

"அம்மா பசிக்குது" என்று பிள்ளைகள் கத்தியதைக் கேட்டு தன் யோசனையில் இருந்து விடுபட்டு எழுந்தாள் கமலா.

இரவுச் சாப்பாட்டை முடித்து மூவரும் பத்து மணியளவில் படுக்கைக்குத் தயாரானார்கள்.

"தம்பி போனை தலைமாட்டில வைத்திரு. இரவு றிசல்ட் வந்தால் யாராவது அடிப்பார்கள்" எனப் பெரியவனுக்குச் சொன்னாள் தாய்.

விடிந்து வெகுநேரமாகியிருக்கும். உடல் அசதியால் நல்ல தூக்கம். கமலா பிந்தி எழும்பியிருந்தாள். போன் அடித்துக் கொண்டிருந்தது. மறுமுனையில் "உங்க மகன் 147 புள்ளி எடுத்திருக்கிறான். 8 புள்ளிகளால் சித்தியடையத் தவறிவிட்டான்" அவன்ர வகுப்பு ரீச்சர் அது. அவள் நெஞ்சைப் பாராங்கல் கொண்டு அமுத்துவது போல் இருந்தது. மெல்ல தூணைப் பிடித்தவாறு அமர்ந்தாள். "என்ன செய்வேன். என் மகனை உயர்தரப் பாடசாலையில் எப்படிச் சேர்ப்பேன். ஸ்கொலர்சிப் உதவிப் பணம் அவன் படிப்பிற்கு உதவும் என்று எண்ணியிருந்தேனே! எண்ண ஓட்டங்கள் அவள் மனதை அலைக்கழித்தன.

ரீச்சர் இவன் வகுப்பில் கெட்டிக்காரன் என்று சொன்னாவே, அப்போ ஏன் இப்படி? கண்களால் வழிந்த நீரைச் சட்டென்று துடைத்துக்கொண்டாள். யாரோ தொடுவது போன்ற உணர்வில் திரும்பிப் பார்த்தாள். பக்கத்தில் அகில் நின்று கொண்டிருந்தான். இவள் முகத்தை உற்றுப் பார்த்தான். அவன் கண்களில் பல கேள்விகள் தொக்கி நின்றன. "ஆமய்யா! உனக்கு நல்ல மார்க்ஸ். 147" ரீச்சர் சொன்னவா. எனக்கு இது போதுமய்யா. அகில் விருட்டென்று வெளியில் ஓடினான். இவளும் பின்னே " அகில்" என்று கத்திக் கொண்டு ஓடினாள். அகில் அந்தத் தோட்ட வெளியை நோக்கி ஓடினான். இவளும் பின்னே ஓடிக் கொண்டிருந்தாள். கண்கள் இருண்டன. மூச்சு முட்டியது. கால்கள் பின்னின. பின்னே பாக்கியம் மாமியும் வேறும் யாரோ கத்துவது கேட்டது.

"அகில் வேண்டாம் ஓடாத நில்" என்று வீறிட்டுக் கத்தியவள் படுக்கையில் இருந்து பதறி எழுந்தாள்.

உடம்பு முழுவதும் நனைந்திருந்தது.

"சீ... என்ன கனவு இது" இந்த ஸ்கொலர்சிப் சோதனை எத்தனை பேரை அல்லற்படுத்துகின்றது. சுவாமிப்படத் தட்டில் இருந்த திருநீற்றை அள்ளிப் பூசினாள்.

"கடவுளே! ஸ்கொலர்சிப் எடுத்த எல்லாப் பிள்ளைகளுக்கும் மனவலிமையைக்கொடு" என்று வேண்டிக்கொண்டாள்.

என்ன முடிவு என்றாலும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று மனதில் உறுதி பிறக்க போனை ஓப் செய்துவிட்டு அகிலை அணைத்த வண்ணம் படுத்தாள். அவன் அப்போது ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

விடிந்தது. போனில் அதிகளவு மிஸ்ட் கோல்கள். மசேச்சுகள் வேற. அகில் பாடசாலை மட்டத்தில் முதலாம் மாணவனாக புலமைப்பரிசிலில் சித்தியடைந்து விட்டான். மகனின் உச்சந்தலையில் தாய் முத்தமிட்டாள். மகனோ அமைதியாக இருந்தான். துள்ளிக் குதிக்கவில்லை. சந்தோசத்தை வெளிப்படுத்தவில்லை.

" என் நண்பர்கள் பலர் சித்தியடையத் தவறிவிட்டார்கள். எத்தனை மாணவர்கள் இப்போது கவலையோடு இருப்பார்கள்" தன் மனக்குறையைத் தாயிடம் வெளிப்படுத்தினான்.

சிறிது நேரத்தில் பாடசாலை அதிபர் அகிலை கைத்தொலைபேசியில் அழைத்தார். சிறிது நேர உரையாடலின் பின் " சேர் என் போட்டோவை பேப்பரில் போட வேண்டாம்.பிளீஸ். சித்தியடையாத என் நண்பர்கள், என்னைப் போன்ற மாணவர்கள் கவலையில் இருப்பார்கள். அவர்கள் துன்பத்தில் நானும் பங்குகொள்கின்றேன் என்று அகில் மிக உறுதிபடக் கூறினான். சிறுவயது என்றாலும் பொறுப்பான அவன் பேச்சைப் பார்த்து வியந்து நின்றாள் அந்தத் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. சிறீரங்கன்
உரும்பிராய்




# நான் சாகடிக்கப்படலாம் தோற்கடிக்கப்படமாட்டேன்

## -சே குவேரா-

**பிரபல மார்க்ஸிஸ்ட் புரட்சியாளரான சே குவேரா கொலை செய்யப்பட்டு 50ஆவது ஆண் டுகள் கடந்து விட்டன. ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திரத்திற்காக போராடிய இந்த வீரன் பற்றிய ஒரு குறிப்பு.**

இவர் புரட்சிகளில் ஈடுபட்டதற்காக பொலிவியாவில் 1967ஆம் ஆண்டு ஒக்டோபர் 8ஆம் திகதி அரச படையினரால் கைது செய்யப்பட்டார். அடுத்த நாளே அவரை பொலிவிய படையினர் கொலை செய்தனர்.

அவரது உடல் முதலில் பொலிவியாவின் வேலேகிரான்ட் அருகே கனடாதே அர்ரோயாவில் புதைக்கப்பட்டது.

பின்னர் 1997ஆம் ஆண்டு அவரது உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டு கியூபாவின் ஹவானா புரட்சி சதுக்கத்தில் விழா நடத்தப்பட்டு பின்னர் சாண்ட்டா கிளாராவில் புதைக்கப்பட்டுள்ளது.

சே குவேரா சுய தியாகத்துக்கும், உறுதிப்பாட்டுக்கும் ஒரு முன் மாதிரியாக இருந்தார் என்று அவரது ஆதரவாளர்களும் அவர் கொடூரமானவர் கள் என்று அவரது விமர்சகர்களும் கருதுகின்றனர்.

முதலும், கடைசியுமாக மனித அடக்குமுறைக்கு எதிராக, நாடு கடந்து, எல்லை கடந்து, போராடும் மக்களிடம் சென்று போராடி உயிர்விட்டு வரலாற்றில் நிலைத்துவிட்ட ஒரே பெயரே "சே குவேரா."

பதவியினை துச்சமாக நினைப்பவன் போராளி. தனக்கு பதவிகளில் விருப்பமில்லை. உலகெல்லாம் போராடும் மக்களுக்கு உதவுவதே தன்பணி எனக் கூறினார்.

கியூபா அரசின் சார்பாக உலகெல்லாம் சுற்றினார். உலகென்றால் அன்று சுதந்திரம் பெற்றிருந்த நாடுகளின் மக்களைக் காணச் சென்றார். இந்தியாவுக்கும் சென்றார். இலங்கைக்கு வந்து தேயிலை தோட்ட தமிழர்களை சந்தித்தார்.

இப்படியாக உலகெல்லாம் கொண்டாடப்பட்ட சே குவேரா குறித்து, அமெரிக்காவிற்கு எரிச்சலூட்டியது.

அதற்காக, எங்கு உரிமை போராட்டம் நடக்கின்றதோ அங்கு நிற்பதுதான் சே குவேராவின் பெரும் பலவீனம் அல்லது பெரும் பலம். அப்படி சண்டையோடு சண்டையாக போட்டு தள்ள திட்டமிட்டது அமெரிக்கா. இதற்காக சி.ஐ.ஏ.களத்தில் இறங்கியது.

சி.ஐ.ஏ. கண்ணி வைத்த இடம் பொலிவியா, அங்கு சண்டையினை தீவிரப்படுத்தினார்கள், வழக்கம்போல வந்து நின்றார் சே குவேரா.

சண்டை உச்சத்தை அடைந்தது. 1969 ஆம் ஆண்டு, ஒக்டோபர் 8ஆம் திகதி மாலைப்பொழுதில் ஒரு ஆற்றைக் கடந்த போது அங்கு ஆடுமேய்த்து கொண்டிருந்த பெண்மணியினை பார்த்தார்.

அந்தப் பெண்ணிடம் பரிதாபப்பட்டு பணம் கொடுத்து நலம் விசாரித்து சென்றார். அப்பெண்மணி சி.ஐ.ஏ உளவாளி என்பது அவருக்குத் தெரிந்திருக்க வில்லை.

அமெரிக்கப் படைகள் சுற்றி வளைத்தன. அக்கிராமத்தின் ஒரு பாடசாலையில் சிறைவைக்கப்பட்டார். அப்போது, அவர் சொன்ன சொல் வரலாற்றில் நின்றது.

"இது என்ன இடம், பாடசாலையா? இவ்வளவு அசுத்தமா?, நல்ல பாடசாலைகள் நாட்டின் பெரும் தேவையல்லவா!" இதுதான் சே குவேரா.

அவரை அமெரிக்கா அங்கேயே சுட்டுக் கொல்லத் தீர்மானித்தது. அப்போது நெஞ்சை நிமிர்த்தி இரு கைகளையும் விரித்து நின்றார்.

எல்லை கடந்து வந்து தனது நாட்டிற்காய் போராடிய ஒப்பற்ற தலைவன் சே . வின் மரணம் கியூப மக்களை மட்டுமல்ல, உலக மக்களையே சோகக் கடலில் ஆழ்த்தியது.

அவரை சுட்டவீரன் சொன்னான், "முகத்தில் தாடியோடு, கலைந்த முடியோடு கை விரித்து நின்ற சே வின் காட்சி அப்படியே இயேசு பிரானை கண்முன் நிறுத்திற்று" எனச் சொல்லி பின்னர் அழுதான்.

இலங்கையில் அவர் தன் கையினால் நட்டுவைத்த மரம் இன்றும் உண்டு. அது பெரிதாக வளர்ந்திருக்கின்றது. ஒன்றுமட்டும் உண்மை, சே குவேராவின் காலத்தில் ஈழப் போராட்டம் தீவிரமடைந்திருந்தால், நிச்சயம் எம்மோடு இணைந்து கொள்ள சே குவேரா ஓடிவந்து முதல் ஆளாக நின்றிருப்பார்.

# தன்னைத்தானே சுட்ட விமானம்

"தன் வினை தன்னைச் சுடும்" என்கிற விதி எல்லா விடயங்களுக்கும் பொருந்தும். அறிவியலை மையப்படுத்தி நடக்கிற அனைத்துக்கும் ஓர் எதிர்வினை இருந்து கொண்டே இருக்கும். சரியான திட்டமிடல் இல்லாமல் செயற்படுத்துகிற அறிவியல் திட்டங்கள் எல்லாமே தன்னுடைய தலையில் மண்ணைப் போட்டு கொள்கிற யானையின் செயலுக்கு ஒப்பானவைதான். துப்பாக்கியில் இருந்து ஒரு தோட்டாவை செலுத்த வேண்டுமானால் கூட அறிவியலை புரிந்துகொண்டு செயற்படுத்தியாக வேண்டும். இது, அறிவியலில் தன்னைத் தானே சுட்டுக் கொண்ட ஒரு விமானத்தின் கதை.

சுப்பர்சொனிக் விமானம் ஒலியின் வேகத்தை விட வேகமாகப் பறக்கக் கூடிய ஒரு விமானம்.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் சுப்பர்சொனிக் விமானங்கள் உருவாக்கப்பட்டு, ஆராய்ச்சி மற்றும் இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. க்ரூமன் F-11 டைகர் ஒரு சுப்பர்சொனிக் விமானம். ஒற்றை இருக்கை கரியர் கொண்ட இந்த விமானம் யுனைடெட் ஸ்டேட்ஸ் கடற்படைக்குச் சொந்தமானது. 1954 ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் திகதி பயன்பாட்டுக்கு வந்தது. ஒலியை விட அதிக வேகத்தில் பயணிக்கக் கூடிய இந்த விமானத்தின் வேகம் மணிக்கு 1170.

1956 ஆம் ஆண்டு செப்டெம்பர் 21 ஆம் திகதி F-11 டைகர் விமானம் நியூயோர்க் [illegible] லாங் தீவில் [illegible] கிறது. இதன் விமானி தாமஸ் W அட்ரிட்ஜ். விமானம் 20,000 அடி உயரத்தில் பறக்கும் பொழுது விமான பீரங்கியில் (Colt Mk 12)இருந்து முதல் முறையாக 20 MM தோட்டாவைக் கடல் பகுதி நோக்கிச் சுடுகிறார். முதல் தோட்டா வெளியேறிய பிறகு விமானத்தின் கழுத்து பகுதிக்குக் கீழ் 20 டிகிரி கோணத்தில் பயணிக்கிறார். விமானம் 13,000 அடிகளில் இருக்கும் [illegible] இரண்டாவது முறையாகக் கடலை [illegible] சுடுகிறார். விமானம் தொடர்ந்து 7000 அடிகளை நோக்கிப் பயணிக்கிறது.



இரண்டாவது தோட்டாவை செலுத்தி விட்டு 2.7 மைல்களை விமானம் கடந்த நொடிக்கு விமானத்தின் எஞ்சின் பகுதியில் தீப்பிடிக்க,விமானம் கீழ் நோக்கிப் பாய்கிறது. விமானி சில காயங்களுடன் மீட்பு ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்படுகிறார். உடனடியாக விபத்திற்கான காரணம் கண்டறிய விசாரணை ஆணையம் அமைக்கப்படுகிறது. ஏனெனில் 200 F-11 டைகர் விமானங்களை விமானப்படை பயன்பாட்டிற்கு வைத்திருக்கிறது.


விசாரணை அறிக்கை தனது முடிவுகளைத் தெரிவிக்கிறது. அறிவியல் 20,000 அடியில் பயணிக்கும் பொழுது செலுத்தப்பட்ட முதல் தோட்டா நொடிக்கு 1500 அடிகளைக் கடக்கிறது. வானிலை மற்றும் காற்றின் வேகத்தால் தோட்டாவின் வேகம் குறைகிறது. அதே நேரம் விமானம் அதன் பாதையில் கீழ் நோக்கி 880 MPH வேகத்தில் பயணிக்கிறது. 2.7 மைல் தூரத்தை கடக்கும் பொழுது விமானமும் தோட்டாவும் ஒரே முனையில் சந்திக்கின்றன. விமானத்தின் எஞ்சின் பகுதியை தோட்டா தாக்கியிருக்கிறது. விபத்திற்கு தோட்டாவின் வேகமும் விமானத்தின் வேகமும் முக்கிய காரணம் என கண்டறியப்படுகிறது. 1960 ஆண்டு F-11 டைகர் கரியர் ரக விமானங்கள் சேவையில் இருந்து நிரந்தரமாக நிறுத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு... அதிர்ச்சி... பிரமிப்பு கண்ணைக் கவரும் புகைப்படங்கள்

ஒவ்வொரு வருடமும் உலகின் ஒருவர் சிறந்த காட்டுயிர் புகைப்படத்திற்கான விருதைப் பெறுகிறார். விருது பெறுகிற ஒவ்வொரு புகைப்படத்திற்கு பின்னாலும் அது சார்ந்த பயணங்களும் கதைகளும் இருக்கின்றன. காட்டுயிர் புகைப் படங்களைப் பொறுத்தவரை அர்ப்பணிப்பு, பொறுமை, தேடல் அவசியம். காடு களில் புகைப்படங்கள் எடுக்கிறதென்பது ஆபத்தான செயல். உலகில் யாரும் எடுக்க முடியாத விலங்குகளின் சிறந்த தருணத்தைப் புகைப்படமாக சேமிப்பது மிகப்பெரிய சவால். கடந்த சில ஆண்டுகளாக விருது பெற்ற புகைப்படங்கள் மற்றும் புகைப்படக்காரர்கள் பற்றிய ஒரு பார்வை.

## டிம் லமென் - 2016



அமெரிக்கப் புகைப்படக்காரர் டிம், இந்தோனேசியாவிலுள்ள குணங் போலுங் தேசியப் பூங்காவில் பெரிய மரத் திலிருந்து இளம் உராங்குட்டான் குரங்கு ஒன்று இறங்குவதைப் பார்க்கிறார். எப் படியும் உராங்குட்டான் திரும்பி அதே மரத்திற்கு வரும் என்பதால் தன்னிட மிருந்த கோப்ரோ கமராவை அந்த மரத்தின் மேற்பரப்பில் பொருத்தி விடுகிறார். உராங்குட்டான் திரும்பி வரும் என்கிற நம்பிக்கையில் மூன்று நாட் களாக அங்கே காத்திருக்கிறார். உணவு தேடச் சென்ற உராங்குட்டான் திரும்பி வருகிறது. அந்த நிமிடங்களுக்காகக் காத்திருந்து, உராங்குட்டான் மரம் ஏறிக்கொண்டிருக்கும் பொழுது ரிமோட் மூலமாக இந்தப் புகைப்படத்தை எடுத்திருக்கிறார். முதல் பரிசைப் பெற்ற இந்தப் புகைப்படம் உலக வெப்பமயமாவதைத் தடுக்கும் பொருட்டு விழிப்பு ணர்வுக்குப் பயன்படுத்தப்படுகிறது. 2015 ஆம் ஆண்டு போர்னியோ காடுகளில் உராங்குட்டான் வசிக்கிற காடுகளில் 21,000 சதுர கிலோ மீற்றர்கள் காட்டுத் தீயால் அழிந்து போயிருக்கின்றன. இதைத் தடுத்தாக வேண்டும் என்கிறார் டிம்.

## டான் குடோஸ்கி - 2015




டான் அவசர சிகிச்சைப் பிரிவு வைத்திய ராக இருக்கிறார். நேரம் கிடைக்கும் போது கமராவை எடுத்துக் கொண்டு காடுகளுக்குள் சென்று விடுவார். கனடா நாட்டின் வாபுஷ்க் தேசியப் பூங்காவில் எடுக்கப்பட்ட படம்தான் வரு டத்தின் சிறந்த படமாகத் தேர்ந்தெடுக் கப்பட்டது. அன்றைய நாளில், தொலை வில் செந்நரி ஒரு விலங்கை துரத்திக் கொண்டு போவதைப் பார்க்கிறார். நரி யைப் பின் தொடர்ந்துப் போய் பார்த்த போது, துரத்திச் சென்ற விலங்கைச் செந்நரி கொன்று விடுகிறது. வெகு பக்கத்தில் பார்க் கும் போதுதான் தெரிகிறது இரையாகக் கொல்லப்பட்டது ஆர்டிக் நரி. கொல்லப்பட்ட ஆர்டிக் நரியைச் செந்நரி தூக்கிக்கொண்டு போவதைப் புகைப்படமாக எடுக்கிறார். உயர் ந்து வரும் வெப்பநிலை காரணமாக ஆர்டிக் பனி பிரதேசம் உருகி வருகிறது. இதன் விளை வாகச் செந்நரிகள் தங்களின் இருப்பிடத்தை விரிவு செய்கின்றன. அப்படியான நேரங்களில் இதுபோன்ற மோதல்கள் தவிர்க்க முடியாத ஒன்று என்கிறார் டான்.

## மைக்கேல் நிக்கோலஸ் - 2014




அமெரிக்காவைச் சேர்ந்த நிக்கோ லஸ், தான்சானியாவிலுள்ள செரெங்கெ ட்டி தேசியப் பூங்காவில் இந்தப் புகைப்பட த்தை எடுத்திருக்கிறார். அன்றைய தினம் ஐந்து பெண் சிங்கங்கள் அதன் குட்டிகளு டன் படுத்திருக்கிறது. அதைப் புகைப்படம் எடுத்திருக்கிறார். அதற்கு முன்பு அந்தப் பெண் சிங்கங்கள் இரண்டு ஆண் சிங்கங் களுடன் சண்டையிட்டு வந்திருக்கின்றன. அந்தச் சுவடுகள் இல்லாமல் அவை அங்கிருந்த பாறைகளின் மேல் படுத்திருக்கின்றன. நிக்கோலஸ் இந்தப் புகைப்படம் எடுக்கும் முன்பு ஆறு மாதங்களாகச் சிங்கங்களைப் பின்தொடர்ந்து வந்திருக்கிறார். நிகோலஸ் சிங்கங்கள் இருக்கிற பகுதிக்கு வருவதும் போவ துமாக இருந்ததால் அவை பழகிவிட்டன என்கிறார். அன்றைய தினம் அந்தச் சிங்கங்கள் இருக்கிற பகுதிக்கு அருகில் இருந்துதான் இந்தப் புகைப்படத்தை எடுத்திருக்கிறார்.

## கிரேக் டு டோய்ட் 2013



கிரேக் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த காட்டுயிர் புகைப்படக்காரர் போட் வானாவின் வடக்கு டூலி விளையாட்டு ரிசர்வ் பகுதியில் இந்த யானைகள் புகை ப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. கிரேக், யானைகள் பற்றிய தேடுதலில் அதிக ஆர்வம் கொண்டவராக இருக்கிறார். புகைப்படம் எடுக்கப்பட்ட அன்றைய தினம் யானைக்கு மிக அருகில் நின்று இந் தப் படத்தை எடுத்துள்ளார். "பொதுவாக யானைகளை கமராவுக்குள் கொண்டு வருவது என்பது மிகவும் சிரமமான காரியம். கமராவின் லோ[illegible] பயன்படுத்தி எடுக்கும்போது ஒரு மாயத்தோற்றம் என்னைக் கடந்து போனது போல இருந்தது" என்கிறார் கிரேக்.

# வன்முறையில் இருந்து வளர்ச்சிப் படி நிலைக்கு திரும்புமா சோமாலியா?



சோமாலியத் தலைநகர் மொகாடிஷு வில் ஒக்டோபர் 14இல் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 300 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கும் சம்ப வம் மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. வெடி குண்டுகள் நிறைந்த ட்ரக் மூலம் நடத் தப்பட்ட இந்தத் தாக்குதலின்போது, அரு கில் இருந்த எரிபொருள தாங்கி மீது அந்த ட்ரக் மோதி வெடித்துச் சிதறியதால், சேதம் பன்மடங்கு அதிகரித்தது. பலியானோர்



எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேவருகிறது. முந் நூறு பேர் பலியானதுடன் 250 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருக் கிறார்கள்.

மொகாடிஷு நகரில் கடந்த சில ஆண்டு களாகவே ஹோட்டல்கள், இராணுவக் கட்டடங்கள் மீது அல்-கொய்தா ஆதரவு பெற்ற அல்-ஷபாப் பயங்கரவாத அமைப்பு தாக்குதல்களை நடத்திவருகிறது. இது வரையிலான தாக்குதல்களிலேயே மிகக் கொடூரமான தாக்குதல் இது. இந்தத் தாக்குதலுக்கு அல்-ஷபாப் அமைப்பு இது வரை பொறுப்பேற்கவில்லை என்றா லும், அந்த அமைப்புதான் இதற்குக் காரணம் என்று அரசுத் தரப்பு கருதுகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடு களின் உதவியுடன் அல்-ஷபாப் அமைப் பைப் பலவீனப்படுத்திவிட்டதாகவே சோமா லிய அரசு சமீப காலமாகக் கூறி வந்தது. ஆனால், கெரில்ல பாணித் தாக்குதல்கள் மூலம் அந்த அமைப்பு மீண்டும் பலம் பெற்று வருகிறது. ஏற்க னவே மோசமான நிலை யில் இருந்து வரும் சோமாலியாவில் பயங் கரவாதத் தாக்குதல்கள் மூலம் இழப்பு களை ஏற்படுத்திவரும் அல்-ஷபாப் அமைப் பையும் அதன் ஆதரவாளர்களையும் தனி மைப்படுத்த வேண்டியது அவசியம். இத ற்கு [illegible] சமூகத்தில் பெரும் செல்வா க்கு கொண்ட இனக்குழுத் தலைமைகளிடம் ஒற்றுமையை ஏற்படுத்துவது அவசியம்.

சோமாலியாவில் ஆபிரிக்க ஒன்றியத் திட்டத்தின் படைகளும் சோமாலிய அரசின் படைகளும் இணைந்து நடத்திய பலமான எதிர்த் தாக்குதல்களைத் தொடர் ந்து 2011 ஓகஸ்ட் மாதத்தில் மொகாடிஷு நகரிலிருந்து அல்-ஷபாப் அமைப்பினர் தப்பியோடினர். அமெரிக்காவின் ஆதரவு - குறிப்பாக ட்ரம்ப் ஜனாதிபதியான பின்னர் சோமாலியாவுக்கு அதிகமாகவே கிடைத் தது. விளைவாக, சோமாலியாவின் பல் வேறு பகுதிகளில், முன்பு ஆயுதக் குழுக் கள் வசமிருந்த அதிகாரம் தற்போது ஜனாதிபதி தலைமையிலான அரசின் வசம் திரும்பி வந்தது. 1990-களில் தொடங்கிய வன்முறைச் சம்பவங்களிலி ருந்தும் பதற்ற நிலையிலும் இருந்தும் நாடு மெல்ல மீண்டுவருகிறது என்றே எல்லோரும் நம்பிவந்தனர். ஆனால், இனக்குழுக்கள் ஆதிக்கம் செலுத்தும் சோமாலியாவில் சமூகத்துக்குள் நிலவும் பிளவுகளைப் பயன்படுத்தி மீண்டும் பலம் பெற்றுவருகிறது அல்-ஷபாப். இப்போது ஒட்டுமொத்த பார்வையும் ஜனாதிபதி நோக்கித் திரும்பியிருக்கிறது.

2017 இன் தொடக்கத்தில், நேரடியாக அல்லாமல், சோமாலிய சமூகத்தின் மூத்த தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தேர்வுக் குழுவால், அந்நாட்டின் ஜனாதி பதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் முகமது அப்துல்லாஹி முகமது. மக்களின் ஆதர வையும் இடைப்பட்ட காலத்தில் பெற்றிருக் கும் அவர் வன்முறைக் கலாசாரத்துக்கு எதி ராகக் கடுமையான நடவடிக்கைகளை எடு க்க வேண்டும் என்ற குரல்கள் எங்கும் ஒலிக் கின்றன. வன்முறை நிலவும் நாட்டில் வள ர்ச்சியை எப்படி வளர்த்தெடுக்க முடியும்? வறுமையை எப்படி ஒழிக்க முடியும்?

ஆசிரியர் தலையங்கம்: த ஹிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயக்கநிலையில் இருந்த ஜெயலலிதா எப்படி கைரேகை வைக்க முடியும்?

## திரும்பும் திருப்பங்கள்



தினகரன் பக்கம் போன 18 எம்.எல்.ஏ-க்கள் தகுதிநீக்க வழக்கு, எடப்பாடி அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் எதிராக வாக்களித்த பன்னீர்செல்வம் உள்ளிட்ட 12 எம்.எல்.ஏ-க்கள் மீதான வழக்கு ஆகியவற்றோடு இன்னொரு வழக்கும் இப்போது அ.தி.மு.க ஆட்சியை ஆட்டம் காண வைத்திருக்கிறது. அது, திருப்பரங்குன்றம் இடைத்தேர்தல் வழக்கு. அ.தி.மு.க வேட்பாளர் ஏ.கே.போஸ் வேட்பு மனுத் தாக்கல் செய்தபோது, அவருக்குக் கட்சியின் இரட்டை இலைச் சின்னத்தை வழங்கக் கோரும் படிவம் ஏ மற்றும் பி ஆவணங்களில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜெயலலிதா வைத்ததாக சொல்லப்பட்ட கைரேகை குறித்து சர்ச்சை எழுந்தது. கைரேகையில் சந்தேகம் உள்ளதாக தொடரப்பட்ட வழக்கில்தான் இப்போது புதிய திருப்பம்.

பொதுவாக தேர்தல் வழக்குகள் நிதானமாக விசாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்டவர் தன் பதவிக் காலத்தை முடித்தபிறகே தீர்ப்பு வருவதுதான் வழக்கம். ஆனால், ஏ.கே.போஸை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.கவின் டாக்டர் சரவணன், கடந்த ஜனவரியில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த இந்த வழக்கு செல்லும் வேகத்தைப் பார்க்கும்போது, மிக விரைவில் தீர்ப்பு வந்து விடும் எனச் சொல்கிறார்கள்.

இந்த வழக்கில் தேர்தல் ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் வில்ஃப்ரெட், கடந்த 13ஆம் திகதி ஆஜராகி, "இதில் ஜெயலலிதா கைரேகை வைத்ததை நாங்கள் தனிப்பட்ட முறையில் நேரடி ஆய்வு செய்யவில்லை. 'வேட்பு மனுவிலுள்ள ஜெயலலிதாவின் கைரேகையை ஏற்றுக்கொள்ளுங்கள்' என அ.தி.மு.க அவைத்தலைவர் மதுசூதனன் கடிதம் எழுதியதால் ஏற்றுக்கொண்டோம்" என விளக்கம் அளித்தார். இதைப் பதிவு செய்துகொண்ட நீதிபதி வேல்முருகன், 'கைரேகைக்குச் சான்றளித்த டாக்டர் பாலாஜி, வரும் 27ஆம் திகதி ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும்' என உத்தரவிட்டுள்ளார். இதனால் இந்த வழக்கு முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த பாலாஜியை, தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்றத் திட்டத்தின் உறுப்பினர் செயலாளராக நியமனம் செய்ததை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு ஒன்று தனியாக நடைபெற்று வருகிறது. கடந்த ஏப்ரலில், சுகாதார அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் வருமான வரிச் சோதனை நடைபெற்றபோது கிடைத்த ஆவணங்களில், 'டாக்டர் பாலாஜிக்கு ஐந்து இலட்சம் ரூபாய் தரப்பட்டது' எனக் குறிப்பு இருந்தது. "ஜெயலலிதாவுக்குச் சிகிச்சை தர வந்த லண்டன் டாக்டரின் ஹோட்டல் செலவுகளுக்காக இந்தப் பணத்தை வாங்கினேன்" என ஆரம்பத்தில் சொன்ன பாலாஜி, பிறகு "வாங்கவில்லை" எனப் பல்டி அடித்தார். கைரேகை வழக்கில் இப்போது பாலாஜியின் விளக்கமே முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் சரவணனிடம் பேசினோம். "தேர்தல் நடப்பதற்கு முன்பே, ஏ.கே.போஸ் தாக்கல் செய்த வேட்பு மனுவில் படிவம் ஏ மற்றும் பி இல் வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் கைரேகைமீது சந்தேகம் உள்ளதாக திருப்பரங்குன்றம் தேர்தல் அலுவலர் ஜீவாவிடம் புகார் செய்தேன். அதன்பின் மதுரை கலெக்டருக்கும், தலைமைத் தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானிக்கும் புகார் அனுப்பினேன். ஆனால், எந்த நடவடிக்கையுமில்லை. அதனால் தான் நீதிமன்றத்தை நாடினோம்.

அப்பலோவில் செயற்கை சுவாசத்தில் இருந்த ஜெயலலிதா, கைரேகை வைத்திருக்க முடியாது. மயக்க நிலையில் இருப்பவரிடம் கைரேகை வாங்கமுடி யாது. அவருக்கே தெரியாமல் அப்படி வாங்குவதும் குற்றமாகும். நானே ஒரு டாக்டர் என்பதால், இதுபோன்ற நேரங்க ளில் நோயாளிகளிடம் கையெழுத்து, கைரேகை வாங்க எந்த மாதிரியான விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதும் தெரியும். வீடியோ பதிவுசெய்ய வேண்டும், நீதவான் அந்தஸ்திலுள்ள அலுவலர் அருகில் இருக்க வேண்டும். இவற்றில் எதையுமே இங்கு பின்பற்றவில்லை. ஜெயலலிதாவின் கைரேகைக்குச் சான்று வழங்க சென்னை அரசு மருத்துவமனை டாக்டர் பாலாஜியை நியமனம் செய்ததிலும் பல சந்தேகங்கள் உள்ளன. எங்கள் வழக்குக்கு வலுச்சேர்க்கும் வகையில், அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசனே, 'ஜெயலலிதாவை யாரும் பார்க்கவில்லை. பார்த்ததாகப் பொய் சொன்னோம்' எனச் சொல்லியிருக்கிறார். இதன் மூலம், 'ஜெயலலிதா கைரேகை வைக்க முடியாத நிலையில் இருந்திருக்கிறார்' என்பது தெளிவாகிறது. ஜெயலலிதா மரணத்தில் சந்தேகம் இருப்பதால்தான் அரசே விசாரணை கமிஷனை நியமித்துள்ளது. இதுவும் எங்கள் வழக்குக்கு வலு சேர்க்கும்" என்றார்.

திருப்பரங்குன்றம் தேர்தல் அலுவலராகப் பணியாற்றிய ஜீவா, மதுரை கலெக்டர் வீரராகவராவ், ராஜேஷ் லக்கானி ஆகியோர் சாட்சியமளித்துள்ளனர்.

அவர்கள் அனைவரும், "கைரேகையை ஆய்வுக்கு உட்படுத்தவில்லை. தலைமைத் தேர்தல் ஆணையம் உத்தர விட்டதால் ஏற்றுக் கொண்டோம்" எனக் கூறியுள்ளார்கள்.

ஏ.கே.போஸிடம் கேட்டபோது, "நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும்போது அதுபற்றிக் கருத்துச் சொல்வது தவறு" என்றார்.

எடப்பாடி அரசுக்கு எல்லா திசைகளிலிருந்தும் நெருக்கடிகள் சூழ்கின்றன.

# உறுதி செய்...



எனது இலட்சியம் நாட்டைக் கட்டியெழுப்புவது. நாட்டைக் கட்டியெழுப்ப முதலில் கல்வி கற்க வேண்டும். நான் கற்ற கல்வியை நாலுபேருக்கு உதவும்படி செய்வேன். அந்த நாலுபேர் நாற்பதாயிரம் பேரை உருவாக்கச் செய்வேன். அதற்கு நான் முதலில் முறையான கல்வியைக் கற்க வேண்டும். கல்வியைக் கற்பதன்மூலம் நல்லொழுக்கமும் பேணுவேன். கற்ற கல்வியின் பயனாக நான் ஓர் பண்ணை அமைத்து அந்தப் பண்ணையில் கால்நடைகள், விவசாயம், கைத்தொழில், பனை, தென்னை போன்றவற்றிலிருந்து கிடைக்கும் பொருட்களைக் கொண்டு முதலீடு செய்வேன்.

மாட்டுப் பண்ணையிலிருந்து பசுக்கள் தரும் பாலைக் கொண்டு பல நன்மை செய்வேன். அதன் நன்மையால் ஆயிரம் பேருக்கு வேலை கொடுப்பேன். விவசாயப் பண்ணையும் ஒன்று அமைத்து அதில் விதை தானியங்கள் உற்பத்தி செய்வேன். மரங்கள் நட்டு வைப்பேன். நம் நாட்டை சோலையாக்குவேன். விவசாயத்தைப் பெருக்குவேன், உரிமைக்கு குரல் கொடுப்பேன்.

தொழில் இலாபம் கொடுப்பேன். சரியான வரியைக் கட்டி நாட்டைக் கட்டியெழுப்புவேன். நரகமாக இருக்கும் இடங்களை நகரமாக்குவேன். தானியங்களையும் உற்பத்தி செய்வேன். அதிக இலாபம் பெறுவேன். சொந்த மண்ணில் தொழில் இருக்கும் போது அந்நிய நாடு செல்வதை நான் நினைத்துக்கூடப் பார்க்கமாட்டேன். நிச்சயம் வெற்றியுண்டு என்பதை நான் ஆணித்தரமாகக் கூறுவேன். ஆகவே, நாம் அனைவரும் ஒன்றாக இணைவோம், திட்மிடுவோம், திட்டமிட்டபடி செயற்பட்டால் எங்கள் நாடு குறுகிய ஆண்டில் அபிவிருத்தி அடைந்து விடும்.

உலகிலே வீழ்த்தப்பட்ட நாடுகள் எத்தனையோ உள்ளன. இன்று அந்த நாடுகள் பொருளாதாரத்திலும் சரி மக்கள் தொகையிலும் சரி வல்லரசாக நிமிர்ந்து நிற்கிறது. அந்த நாடுகள் வல்லரசாவதற்கு அந்த நாட்டு மக்களின் அயராத உழைப்பும் உற்பத்தியும் தான் அவர்களை வானம் வரை உயர்த்தியது. அவர்களிடமிருந்து நாம் ஒன்றும் சளைத்தவர்களல்ல. உழைத்து உழைத்து மரத்துப் போனவன் தமிழன். வீழ்ந்துவிட்டோம் இனி எப்படி எழுந்திருப்பது என்றெண்ணாது கற்ற கல்வியைத் துணையாகக் கொண்டு நாம் உற்பத்தியைப் பெருக்குவோம்.

நமக்குச் சொந்தமான காணிகளை புதர்களாக வைத்திருக்காமல் புல்பூண்டு பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்து மண்ணை வெட்டிப் பண்படுத்தி அதில் உழுந்து விதைப்போம். அல்லது [illegible] யில் நான் எனது நண்பர் ஒருவரை சந்தித்துப் பேசும் போது என்ன வேலை செய்கிறீர்கள் என்று கேட்டேன். அவர் அதற்கு நான் 20 பரப்புக் காணியில் உழுந்து விதைத்தேன் என்றார். அதை அறுவடை செய்து விற்றதில் அதிக இலாபம் அடைந்தேன். இலாபத்தின் பயனாக ஒரு ட்ரக்டர் (உழவு இயந்திரம்) 7 இலட்சத்திற்கு விலையாக எடுத்தேன் என்றார்.

பார்த்தீர்களா 20 பரப்புக் காணியில் விதைத்த உழுந்து விற்ற பணத்தில் 7 இலட்சம் ரூபாவிற்கு உழவு இயந்திரம் ஒருவர் எடுத்துள்ளார். எனினும் நிறையக் காணி உள்ளவர்கள் இதுபோன்ற உற்பத்தியில் இறங்கவேண்டும். பசுமை உலகை உருவாக்க வேண்டும். அந்நிய நாடுகளில் இருந்து பெறும் பொருட்களை கைவிட்டு விட்டு நாமே அனைத்தையும் உருவாக்குவோம். பால்மாடுகளிலிருந்து கிடைக்கும் பாலைக் கொண்டு நிறைய உணவுப் பொருட்கள் செய்ய முடியும். இன்று பாலில் செய்யப்பட்ட பன்னீர் என்ற உணவு எவ்வளவு முதலிடத்தில் உள்ளது. அதுமட்டுமல்லாது குளிரூட்டப்பட்ட தீன் கழிகளாக ஒவ்வொரு கடைகளிலும் விற்பனையாகின்றது.

மாடு வளர்ப்பதற்கு லோன் தருவதற்கு எத்தனையோ நேர்மையான அரசாங்க முத்திரை பொறிக்கப்பட்ட நிறுவனங்களும் அரச வங்கிகளும் தயாராகவுள்ளன. கடன் வாங்கிய பணத்தை பக்குவமாகப் பயன்படுத்தி மாதம் தவறாமல் கடனை அடைத்து பயன்பெறுவோம். இதை யார் செய்கிறார்களோ இல்லையோ நிச்சயம் நான் செய்வேன். ஏனென்றால் பண்ணை அமைப்பது எனது இலட்சியம். சிறுவயதில் நான் படிக்கும் போது எனக்குள் எழுந்த இலட்சியம். அதை நான் செய்து இந்த நாட்டை வளமாக்குவேன். அது மட்டுமல்ல நம் பண்பாட்டு மரபுகளும் இதில் அடங்கியுள்ளது.

நமது நாட்டில் சோம்பேறிகள் இருப்பதை நாம் அவமானமாக நினைக்கிறோம் என்று சொன்ன மன்னர்களும் உண்டு. சோம்பேறிகளின் தலையை வெட்டி இந்த மண்ணுக்கு இரையாக்குங்கள் என்று ஒரு மன்னன் சொன்னான். எதற்கும் உபயோகமில்லாதவன் இந்த உலகில் வாழ்வதை விடச்சாவதே மேல் என்றான். அனைத்து மக்களையும் உற்பத்தியில் இறக்கினான் மன்னன். பெரும் வளர்ச்சியைக் கண்டது அவன் நாடும் நகரமும். அப்படி நாமும் செய்தால் அந்நிய நாட்டை நாம் ஒருபோதும் கையேந்தத் தேவையில்லை.

நான் எனது இலட்சியத்திலிருந்து பின்வாங்கமாட்டேன். எடுத்த முடிவை கைவிடமாட்டேன். பெரும் பண்ணையொன்று வளர்த்து அதில் வரும் வருமானத்தில் அடுக்குமாடி கட்டி ஆகாயத்தைத் தொடுவேன் என்று நாம் ஒவ்வொருவரும் திடம் பூணுவோமாக.

**ஆர்.மணிமாறன்**
**மயிலங்காடு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கிள்னா என்னா? சிக்ஸர்களால் பேசிய சேவாக்!

299 ஓட்டங்களில் களத்தில் இருக்கிறார் அவர். அதுவரை எந்தவொரு இந்திய வீரரும் செய்திடாத சாதனை. ஒரு ஓட்டம் எடுத்தால், டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முச்சதம் அடித்த முதல் இந்தியன் என்ற சரித்திரம் காத்திருக்கிறது. ரிவியில் பார்த்துக் கொண்டிருந்த கோடிக்கணக்கான இந்தியர்களும் பிரார்த்தனை செய்கிறார்கள்.

நான் - ஸ்ட்ரைக்கர் எண்டில் நிற்பது சச்சின். 99, 199 ஓட்டங்களில் பந்தை எதிர்கொள்வது எவ்வளவு பிரஷர் என்பது அவருக்குத் தெரியும்.

பலமுறை அவர் 90களில் அவுட்டாகி சதத்தைத் தவறவிட்டிருக்கிறார். அவருக்கு எதிரே நின்று ஆடிக்கொண்டிருந்த அந்தக் கண்களில் எந்தவித பயமும் இல்லை. மாறாக, அந்தக் கண்கள் சிக்ஸர் அடிக்க ஏதுவான இடத்தை தேடிக்கொண்டிருந்தன.

அனுபவ சுழற்பந்து வீச்சாளர் சக்லைன் முஸ்தாக்கின் கையில் பந்து. வழக்கமாக சதத்தைத் தடுக்க, "சர்க்கிளு"க்குள் ஃபீல்டர்களை நிரப்புவது கப்டன்கள் வழக்கம். ஆனால், அது பிரயோஜனமற்றது என்று பாகிஸ்தான் கப்டன் இன்ஜமாம் உல் ஹக் அறிந்திருந்தார். ஸ்கொயர்-லெக், டீப் மிட்விக்கெட், லாங் ஆன் என ஒருநாள் போட்டியைப் போல் ஃபீல்டர்களை நிற்க வைத்திருந்தார். அதைப் பார்த்த் ரசிகர்களுக்கு இன்னும் டென்ஷன். சச்சினுக்கும் அதே பதற்றம். "சிக்ஸர் அடிக்க முற்பட்டால் என்னை அடித்து விடுவேன்" - எச்சரித்துவிட்டு வருகிறார் சச்சின்.

"சிக்ஸர் அடிக்க முயன்று எட்ஜ் ஆனால்...?" அத்தனை இந்தியர்களுக்கும் அந்தப் பயம்தான். ஆகுமா என்ன? களத்தில் நிற்பது யார்? உலகையே அலறவிடும் பாகிஸ்தான் பந்துவீச்சை 2 நாள்கள் சொந்த மண்ணிலேயே பொம்மையாக நினைத்து ஆட்டங்காட்டியவர். டெஸ்ட் கிரிக்கெட்டுக்கென புது இலக்கணம் கொடுத்தவர்.

"நீங்கள் எவ்வளவு சிறப்பான, அனுபவமுள்ள பவுலராக இருந்தாலும், அவர் உங்களை ஒன்றும் இல்லாமல் செய்துவிடுவார்" என்று பிரட் லீ எனும் பந்துவீச்சு அரக்கனால் புகழப்பட்டவர். களத்தில் நிற்பது விரேந்திர சேவாக்! சிங்கிளா எடுப்பார் மனிதன்? மிடில் ஸ்டம்ப் லெந்த்தில் வந்த பந்தை இறங்கி வந்து Half Volley-ஆக மிட் விக்கெட் திசையில் அடிக்க, அந்தப் பந்து எல்லையைத்தாண்டி ஸ்டெண்டை அடைந்தபோது முல்தான் நகரமே அவர் தைரியத்தின் முன் மண்டியிட்டது.

ஒரு பந்துவீச்சாளருக்கு நம்பிக்கை கொடுப்பது பிட்ச்சின் தன்மையும், ஆட்டத்தின் போக்கும் மட்டுமல்ல. அவர்களுக்குப் பிரதான நம்பிக்கையே எதிர்கொள்ளும் பட்ஸ்மேனின் "பாடி லேங்குவேஜ்"தான். பட்ஸ்மேனின் கண்கள், அவர் தோள்பட்டை, அவரது கால்கள், இந்த மூன்றுமே, பேட்மேனின் "மைண்ட் செட்டை" பவுலருக்குச் சொல்லிவிடும். பௌலரின் நம்பிக்கையை அது கூட்டிவிடும். ஆனால், இந்த மனிதனின் விஷயத்தில் மட்டும் அது என்றுமே ரிவர்ஸ். "ஓ நீதான் பவுலரா...சரி சரி போடு" என்ற தொனியில் அசால்டாக, கெத்தாக நிற்கும் சேவாக்கைப் பார்த்தால் எப்பேர்ப்பட்ட பவுலரின் பொசிடிவ் ஆடிட்யூடும் அட்ரஸ் இல்லாமல் போய்விடும். பிரெட் லீ, சேவாக்கைப் பற்றிக் கூறிய அந்த ஒற்றை வரி போதும் சேவாக்கின் ஆடிட்யூட் பற்றி அறிய.

டெக்னிக்கில் குறை, ஃபுட்வொர்க்கில் குறை என்று அவரது பேட்டிங்கை குறை சொல்லியவர்களுக்கு, "கிரிக்கெட்டை இப்படியும் ஆடலாம்" என்று பதிலளித்தார் சேவாக். அன்றெல்லாம் சச்சின் அவுட். ஆனால் தொலைக்காட்சிகள் அணைந்துவிடும். ஒரு கட்டத்தில் சேவாக் அவுட் ஆனதும் கூட அவை அணைக்கப்பட்டன. ஆம், டெஸ்ட் போட்டிகளின் தன்மையால் அதை வெறுத்த ரசிகர்களைக்கூட, "சேவாக் ஆடுற வரைக்கும் மட்டும் பார்க்கலாம்" என்று வெள்ளை உடை ஆட்டத்தைப் பார்க்க வைத்தார் வீரு. உலகக்கோப்பைப் போட்டிகளின் ஃபினிஷிங்கைப் பார்க்க, வேலையை விட்டுவிட்டு TV-யின் முன்னாள் அமர்ந்தவர்களை, முதல் பந்தை மட்டும் பார்ப்பதற்காகவே ஏங்க வைத்தவர் வீரு! 36 வயதில், சி.எஸ்.கே அணிக்கெதிராக 58 பந்துகளில் 122 ஓட்டங்கள் எடுத்தபோது, இன்னொரு முறை இந்திய ஜெர்சியை இவர் அணிந்திடமாட்டாரா என்று ஏங்க வைத்தார். மொத்தத்தில் இவர் ரசிகர்களுக்கான கிரிக்கெட்டர்!

சேவாக்கின் அப்பா மிகுந்த கண்டிப்பானவர். எப்போதுமே அப்பாவிடம் சேவாக்குக்கு ஒருவித பயம் கலந்த மரியாதை இருக்கும். கூட்டுக் குடும்ப பின்னணியில் இருந்துவந்தவர். அதனால், மற்றவரை அனுசரித்துப் போவது என்பது அவரிடம் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். எடுத்துக்காட்டாக, அவா? பட்டிங் செய்யும் போது எதிரணியினரின் சீண்டல்களாக இருக்கட்டும், மைதானத்தில் இருக்கும் வேற்று அணி ரசிகர்களின் கேலி கூச்சல்களாக இருக்கட்டும், எதையும் பொருட்படுத் தாமல் அவர் சரவெடியாய் ஓட்டங்கள் குவிப்பைத் தொடர்ந்து கொண்டிருப்பார்.

சிறுவயது முதலே சேவாக்குக்கு கிரிக்கெட்டின் மீது தீராத காதல். வீட்டில் இருக்கும்போது "பிராக்டிஸ்" பண்ணுகிறேன் என்ற பெயரில் வீட்டில் இருக்கும் பொருட்களை உடைத்து, அப்பாவின் கண்களில்படாமல் "கண்ணாம் பூச்சி" ஆட்டம் ஆடுவாராம். தந்தை கிருஷ்ணன் ஒரு தானிய



விற்பனையாளர். மகனின் பயிற்சிக்காக வருமானத்தின் ஒரு பகுதியை தனியாக எடுத்து வைத்து விடுவாராம். அவரின் நம்பிக்கை வீண்போகவில்லை 90களின் மத்தியில் நடைபெற்ற துலிப் டிராபி ஆட்டத்தில் சேவாக்கின் ஆட்டம் தூள் பறந்தது. தேர்வுக் குழுவினரையே "யாருய்யா இந்த "சுருள் முடிப்பையன்" என புருவம் உயர்த்த வைத்தது. ஆம்... சேவாக்குக்கு முடி அப்போது சுருள் சுருளாக நிறைய இருந்தது. அதனால்தான், ஆரம்ப காலத்தில் "சச்சினின் ஜெராக்ஸ்" என்று அழைக்கப்பட்டார். பிறகு, ரஞ்சி டிராபியிலும் அதிரடியைத் தொடர, 19 வயதுக்கு உட்பட்டோருக்கான இந்திய அணியில் இடம்பிடித்தார் வீரு.

இரண்டாயிரத்தின் தொடக்கத்தில் இந்திய தேசிய அணியில் இடம் பிடித்தார். வந்த நேரத்தில் இந்திய அணியில் ஒரு வறட்சி நிலவியது. அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை அணிகள் அந்நேரத்தில் பிரமாண்ட பிம்பமாக உயர்ந்து நின்றன. இலங்கைக்கு எதிரான ஒரு போட்டியில், அந்த அணியின் அனுபவ பந்துவீச்சாளர்களை அவர் பந்தாட, தெறித்து ஓடியது இலங்கை. அதன்பிறகு சேவாக் இந்திய அணியில் ஐக்கியமாகிவிட்டார். ஒரு அதிரடி ஆட்டக்காரர் இல்லாமல் இந்திய அணி தவித்து வந்த நேரத்தில் தன் துடிப்பான ஆட்டத்தின் மூலம் இந்திய அணியை மீட்டெடுத்தார். அவர் தலையில் துணியை கட்டிக்கொண்டு ஆடும் ஆட்டத்தைப் பார்த்து ஒரு கணம் பல்லிளித்தான் ரசிகன். டெஸ்ட் போட்டியிலும் ஓட்டங்கள் வேட்டையைத் தொடர ஆரம்பித்தார். இவர் டெஸ்டில் ஆடினால் எதிரணி கப்டனை கிறுகிறுக்க வைத்து விடுவார். சேவாக்குக்கு ஏதுவாக ஃபீல்டிங் அமைப்பதா, இல்லை டெஸ்ட் போட்டியின் அமைப்புக்கு ஏதுவாக ஃபீல்ட் செட் செய்வதா என எதிரணி கப்டனை மண்டை காய வைப்பார் இந்த ராட்சஷன். எப்படி "சச்சின் - கங்குலி" ஓப்பனிங் ஜோடி இந்தியாவின் கோல்டன் பார்ட்னர்ஷிப்பாக வர்ணிக்கப்பட்டதோ, அதற்கு சற்றும் குறைவில்லாமல் திகழ்ந்தது "சேவாக்-கம்பீர்"கூட்டணி. டெஸ்ட் அரங்கில் இந்தியா முதலிடம் பிடிக்க மிக முக்கிய காரணமாக இருந்தது இந்த இணை.

கம்பீரோடு மட்டுமா? சச்சினுடன் இணைந்து ஒருநாள் போட்டிகளிலும் அட்ராசிட்டி செய்தார் இந்த டில்லிக்காரர். மிடில் ஆர்டரில் இவர் சற்றுத் தடுமாற, தான் ஆடி வந்த ஓபனிங் ஸ்லாட்டில் சேவாக்கை இறக்கினார் அப்போதைய கேப்டன் கங்குலி. மிகப் பெரிய முடிவு. உலகின் உச்சபட்ச பந்து வீச்சாளர்களைப் பதம் பார்த்த வெற்றிக் கூட்டணியை உடைத்து, ஒரு இளைஞனை அந்த இடத்தில் அமர வைக்கிறார். கேள்விகள் எழாமல் இல்லை. அந்தக் கேள்விகளுக்கான பதிலை கங்குலி சொல்லவில்லை. சேவாக்தான் பதிலளித்தார். மைக் பிடித்து அல்ல. பேட் பிடித்து.

2003 உலகக்கோப்பை பைனல். ஆஸி பட்டிங் முடிந்த போதே ஆட்டம் கைவிட்டுப் போயிருந்தது.

இருந்தாலும், இந்திய ரசிகர்களின் மனதில் சச்சின் என்ற நம்பிக்கை நாயகன் குடியிருந்தார்.

4 ஓட்டங்களில் மெக்ராத் தின் கைகளில் அந்த நம்பிக்கையை அவர் காவு கொடுக்க, இடிந்து போனான் இந்திய ரசிகன். ஓவருக்கு 7 ஓட்டங்கள் வேண்டும்.

கப்டன் கங்குலி அவுட் அடுத்து 4 பந்துகளில் கைஃப் அவுட். களம்புகுவது "தி வால". அடித்து ஆடுவது யார்? மெக்ராத், லீ, பிராட் ஹாக், ஆண்டி பிக்கெல் என அனைவரையும் பந்தாடுகிறார். சச்சின் என்ற பெயர் வாடிப்போன ரசிகனின் மனதில் சேவாக் எனும் நம்பிக்கை துளிர்விட்டது. "இன்னைக்கு இவர் நம்மள ஜெயிக்க வைப்பாண்டா" - இது கோடி மனங்களின் நம்பிக்கை. ஒரு துரதிர்ஷ்ட ஆட்டமிழப்பு. மொத்த நம்பிக்கையும், உலகக்கோப்பைக் கனவும் உடைந்துபோனது. ஆனால் 8 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நம்பிக்கையை மீண்டும் எழுப்பினார் சேவாக். வங்க தேசத்தை கிழித்தெறிந்து 175 ஓட்டங்கள் குவித்து, இந்தியாவின் இரண்டாவது உலகக்கோப்பை வெற்றியை "இனிஷியலைஸ்" செய்தார்.

இந்திய கிரிக்கெட்டின் சரித்திர தருணங்களில் இடம்பிடித்தவர். பலரும் நினைத்துப் பார்க்க முடியாத சாதனைகளை அசால்டாகச் செய்தவர். டெஸ்ட் போட்டியில் ஒரே நாளில் 284 ஓட்டங்கள், ஓப்பனராக டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் 7,500-க்கு மேற்பட்ட ஓட்டங்கள் அடித்தவர், நூற்றுக்கும் அதிகமான ஸ்ட்ரைக் ரேட்டில் முச்சதம் அடித்த அசாதரணன், இரண்டு டெஸ்ட் முச்சதம், ஒருநாள் டபுள் செஞ்சுரி என இவர் செய்தவை எல்லாம் வேற லெவல் ரெக்கார்ட்ஸ். இவர் எதிரணி வீரர்களிடம் மல்லுக்கட்டியதில்லை. ஆனால், தன் அதிரடி ஆட்டத்தால் மண்டியிட வைத்துள்ளார்.

"தொடர்ந்து 5 ஓவர்கள் மெய்டனாக ஆடும் பட்ஸ்மேன்களுக் குப் பந்துவீசுவது என்பது சவால் இல்லை. சேவாக் போன்ற பேட்ஸ்மேனுக்கு பந்துவீசுவதே ஒரு பவுலருக்கு உண்மையான சவால்" என்று கபில் தேவ் என்னும் ஜாம்பவனால் புகழப்பட்டவர். அனைத்து பௌலருக்கும் தன் அதிரடியால் ஆட்டம் காட்டியவர், இப்போது டுவிட்டரில் அடித்துத் துவைத்துக்கொண்டிருக்கிறார். "எப்படி இந்த மனுஷன் யோசிக்கிறான்" என்று நினைக்கும் அளவுக்கு அங்கும் தனக்கென்று ஒரு யுனிக் ஸ்டைலை வகுத்துக் கொண்டார் வீரு. அவருக்கு 39-வயது. கிரிக்கெட் மைதானமோ, சமூக வலைத்தளமோ, தான் இருக்கும் தளத்தில் ரவுண்ட் கட்டி அடித்துக்கொண்டே இருப்பார் வீரூ. 39 என்பதெல்லாம் வெறும் நம்பர் தான். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : பாதகாணிக்கை
இசை : விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடல் வரிகள் : கண்ணதாசன்
பாடியவர் : ரி.எம்.பி. சுசீலா



எட்டடுக்கு மாளிகையில்
ஏற்றி வைத்த என் தலைவன்
விட்டு விட்டுச் சென்றானடி - இன்று
வேறுபட்டு நின்றானடி - இன்று
வேறுபட்டு நின்றானடி

தேரோடும் வாழ்வில் என்று
ஓடோடி வந்த என்னை
போராட வைத்தானடி - கண்ணில்
நீரோட விட்டானடி - கண்ணில்
நீரோட விட்டானடி

கையளவு உள்ளம் வைத்து
கடல் போல் ஆசை வைத்து
விளையாடச் சொன்னானடி - என்னை
விளையாடச் சொன்னானடி - அவனே
விளையாடி விட்டானடி

காலங்கள் உள்ளவரை
கன்னியர்கள் யார்க்கும் இந்த
காதல் வர வேண்டாமடி - எந்தன்
கோலம் வர வேண்டாமடி - எந்தன்
கோலம் வர வேண்டாமடி (எட்டடுக்கு)

# உங்கள் மாதப்பலன் எப்படி?

## ஜூலை 21-ஓகஸ்ட் 20 ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான குண பலன்கள்

(கடந்தவார தொடர்ச்சி)

இந்த மாதத்தில் பிறந்தவர்கள் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டுச் சிறந்தவர்களாக வாழ வேண்டும் என்று விரும்புவார்கள். இவர்கள் உயர்ந்த மனிதர்களுடன் மட்டும் தொடர்பு கொள்ள விரும்புவார்கள். இவர்களுடன் தொடர்பு கொண்ட எவராவது குற்றங்கள் புரிந்து விட்டாலும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளும் தன்மையை உடையவர்களாகவே இருப்பார்கள்.

மனிதாபிமானம் படைத்தவர்கள், நல்லிதயம் கொண்டவர்கள் என்று பலரும் சொல்லும்படி இவர்கள் மற்றவர்களிடம் இரக்கம் காட்டி, பொதுவாகக் குற்றங்களைப் பொறுத்துக் கொண்டு உயர்ந்து விளங்குவார்கள்.

நூற்றுக்கணக்கான எதிரிகள் தோன்றினாலும் ஒரு நண்பனைக் கடைசி வரையில் காப்பாற்றும் மன உறுதி படைத்தவர்கள் இவர்கள். ஏமாற்றி விட்டாலோ, கடமை தவறி விட்டாலோ இவர்களால் அதைப் பொறுத்துக் கொள்ளவே முடியாது. அப்போது இவர்கள் இதயமே வெடித்து விடுவதைப் போல் குமுறுவார்கள்.

அதிக வலிமை படைத்தவர்கள்

இவர்களைப் பொறுத்தவரையில் வன்மையானவர்களாகவும் நாணயமானவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் பொதுவாக இவர்கள் மற்றவர்களிடம் ஏமாந்து வாழ்க்கையில் கசப்பை அடைந்து மற்றவர்களைக் குறை கூறிச் சீறி விழுவார்கள்.

பண விடயங்களில் இவர்கள் மிகுந்த வாய்ப்புற்றவர்களாகவே இருப்பார்கள். எண்ணாத இடங்களிலிருந்து இவர்களுக்கு எதிர்பாராமல் பணம் வந்து சேரும். ஆனால் இவர்களுடைய ஆசையெல்லாம் அன்பில் தான்.

மற்றவர்களைத் தூண்டிவிடும் குணம் இவர்களுக்கு உண்டு. நெப்போலியன் இந்த மாதத்தில் பிறந்தவன். நெப்போலிய கார்லோலங், துணிந்த செயல்களில் இவர்கள் இறங்குவார்கள். இவர்கள் மிகவும் பெருமை கொண்டவர்களாக இருப்பார்கள். இதனால் இவர்களுக்கு அடிக்கடி துன்பங்கள் வருவது உண்டு.

(தொடரும்)

# தெய்வீக அழகு

(நிமிடக் கதை)

அன்பான சங்குநாத அன்பர்களே...அனைவருக்கும் இனிய ஞாயிறு வணக்கம். தீபாவளிக் கொண்டாட்டம் முடிஞ்சு கந்தசஷ்டியும் ஆரம்பிச்சிட்டுது. பக்திமயம் கமகமக்குது. வியாழக்கிழமை அம்மன் கோயில்களிலை எல்லாம் அலைமோதின பக்தர்களைப் பார்க்கக் கண்கொள்ளாக் காட்சிதான். ம்... இருபத்தொரு நாட்கள் நோன்பிருந்து காப்புநூல் கட்டும் தெய்வீகக் காட்சி. பெரியவரும் சொன்னவர் பஸ் ஓட்டமும் குறைவாம் எண்டு. சரிசரி...

பெரியவரைச் சந்திக்க ஆரோ மூண்டு பிள்ளையள் வந்து கேற்றடியிலை நிக்கினம். நான் சும்மர் ஒருக்கா எழும்பி நிண்டிட்டுக் குலைக்காமல் என்ரை சாக்கிலை படுத்திருக்கிறன். பாவங்கள் வெருண்டு வெருண்டு வருதுகள். பெரியவர் தலையாட்டிக் கதிரையளைக் காட்டுறார். அவை அறிமுகம் செய்துகொண்டு கும்பிடினம். ம்...ம்... நல்ல பண்பாடான பிள்ளையள் மாதிரித் தெரியுது....

வணக்கம் சேர். வெள்ளிக்கிழமை போனிலை கதைச்சது நான்தான். இவை இரண்டு பேரும் என்னோடைதான் பல்கலைக்கழகத்திலை படிக்கினம்... "பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்" பற்றி நாங்கள் குழுவாச் சேர்ந்து ஒரு ஆய்வுக் கட்டுரை செய்யப் போறம்... அதுதான்... உங்கடை உதவியும் ஆலோசனையும் கேக்க வந்தனாங்கள். இப்ப... உங்களுக்குக் கஷ்டமெண்டால் இன்னொரு வசதியான நேரம் ஒதுக்கித் தாங்கோ சேர்... நாங்கள் திரும்ப வந்து காணுறம்... மெல்லிய குரலிலை பணிவாக் கதைக்குது பிள்ளை ... அடக்க ஒடுக்கமாக் கதிரையிலை இருக்குதுகள். செருப்புகளைக் கூட ஒழுங்கா சோடி சோடியா வெளிப் படியிலை கழட்டி விட்டிருக்குதுகள். உடுப்பும் நல்ல மரியாதையாப் போட்டிருக்குதுகள்.

பெரியவர் சாய்மனைக் கதிரையிலை இருந்து எழும்பி வேறை ஒரு கதிரையிலை இருக்கிறார். ம்...அடக்கம் எண்டால் பொம்பிளையளுக்கு மட்டும் இல்லை. ஆம்பிளையளுக்கும் உரியதுதான் எண்டிறதுபோல சால்வையை இழுத்துப் போர்த்தியபடி பண்பா இருக்கிறார்.

நான்...இப்ப ஒய்வாத்*தான் இருக்கிறன்... நீங்களும் தூரத்திலை இருந்து வந்திருக்கிறியள்...ஆய்வுக் கட்டுரை எண்டிட்டு எப்போதோ யாரோ எழுதிய நூல்களிலை இருந்து அப்பிடியே பிரதி பண்ணி ஒரு தேடலும் இல்லாம கனபேர் தப்புப் பண்ணினம். ஆனால் நீங்கள் உண்மையான அக்கறையோடை வந்திருக்கிறது மனசுக்குச் சந்தோசமா இருக்கு. ஒரு மணித்தியாலம் நான் ஒதுக்கித்தாறன்...ஆனால் அதுக்கு முன்னம் ஒரு ஐந்து நிமிடம் என்னுடைய மனதில் இப்ப சில காலமா ஓடிக்கொண்டிருக்கிற ஒரேயொரு விடயத்தைப்பற்றிச் சொல்ல வேணும். ஏன் தெரியுமோ... நீங்கள் தான் வளர்ந்து வருகிற இளைய தலைமுறையினருக்கு மிகக் காத்திரமான செய்திகளைக் கூறக் கூடியவர்களும் வாழ்ந்து காட்டக் கூடியவர்களும் எண்ட பெருமையும் அங்கீகாரமும் உடைய படித்த பிள்ளைகள் அமைதியாக் கேளுங்கோ...இன்றைய இளைய தலைமுறையினர் பாதிக்கப்படுகின்ற பல பிரச்சினைகளுக்கு அடிப்படையாக இருக்கிற விடயமே அவர்கள் அணியும் உடைகள் தொடர்பானதுதான். நாகரிகம் என்னும் பேரிலை கண்டதே காட்சி கொண்டதே கோலம் எண்டு ஆடை குறைப்பும் பார்ப்பவரைத் தப்பான உணர்வு கொள்ளத் தூண்டும் விதமாகவும் உடைகளை அணியும் வழக்கம் மிகமிக ஆபத்தான பாதைக்கு அடிகோலுது. பார்ப்பவர்கள் கௌரவமாக, கண்ணியமாக ஒருவரை எடை போடுவதற்கு நாம் அணியும் ஆடைதான் காரணம். பெண்மை என்பது போற்றப்பட வேண்டிய புனிதமான படைப்பு. பார்ப்பவரைத் திரும்பத் திரும்பப் பார்க்கத் தூண்டும் விதமாகவோ வயது வேறுபாடின்றி எதிர்ப்பால் வர்க்கத்தினர் மனதில் விரசமான, விகாரமான எண்ணத்தைத் தோற்றுவிப்பதாகவோ அமையக் கூடாது...அது மட்டுமில்லைப் பிள்ளையள் முந்தின காலத்திலை அந்நியர் ஆட்சி நடந்த காலத் திலை...ஒரு சந்தை... "அதுக்கு ரவிக்கைச் சந்தை" எண்டு பெயர். ஒல்லாந்தப் படை வீரர்கள் தொடர்ந்து கூட்டமாக அந்த இடத்தில் நேரத் தைச் செலவிட்டதைப் பார்த்த படைத் தளபதி தானும் மறைமுகமாக அதன் காரண த்தை அவதானித்த போது... அந்தச் சந்தையில் பெண்கள் சட்டை அணியாமல் சேலையால் முடியபடி வியாபாரம் செய்யும் காட்சியைக் கண்டாராம். உடனேயே அவர் பாசறைக்குத் திரும்பி மாளிகையில் இருக்கும் தனது மனைவியின் ஒரு சட்டையைக் கொண்டுபோய் ஒரு கம்பத்தில் நேராகக்கட்டி இனிமேல் இப்படி ஒரு சட்டை அணியாமல் எந்தப் பெண்களுமே உலாவக் கூடாது என்று சட்டமே போட்டு விட்டார். வேற்று நாட்டுக் கலாசாரத்தில் ஊறிய அந்தத் தளபதி இந்த நாட்டுப் பெண்கள் காட்சிப் பொருள் ஆகக் கூடாது என்பதில் எத்தனை தீவிரமாக ஆணை பிறப்பித்திருக்கிறார் பாருங்கோ. ஆனால் எங்கடை பெற்றோர் பிள்ளைகளின் ஆடை வடிவமைப்பில் இப்படிக் கேவலமாக நடக்க அனு மதிக்கிறார்கள் என்றால்... குறை நினைக்காமல் கேளுங்கோ... நீங்கள் என்னுடைய பேரப்பிள்ளைகளுக்குச் சமம். அழகென்பது ஆராதிக்கப்பட வேண்டியதம்மா. முழங்கையைத் தாண்டிக் கையை நீட்டிவிட்டு முதுகுப் புறத்தைக் காற்றுப் புகுவதற்கு ஜன்னலும் கதவும் வட்டமும் சதுரமும்...ம்...ம்...இதைப் பார்ப்பதற்கு ஆண்பிள்ளைகள் வருகிறார்கள் என்று சட்டம் வேறை பேசினம். காட்டப்படுவது பார்க்கப்படுவதற்குத்தானே மகள்! வங்கிக் கடிதங்களில் கூட தங்களுக்கு உரியதும் அந்தரங்கமானதும் எண்டு போட்டிருக்குது. பாரதியாரின் அழகுத் தெய்வம் பாடலைப் பாருங்கோ... தாய்மை தெய்வீகமானது. அதைப் பெண் மைக்கே உரிய அற்புதமாகக் கொள்ளும் மரபம்மா எங்களுடைய மரபு. சரி...சரி...ஆள் பாதி ஆடை பாதி என்று சும்மாவே சொல்கிறார்கள். ஆபாசமாக ஆடை அணியும் பிள்ளையின் பெற்றோரைத் தண்டிக்க வேணும் போல சில வேளை எனக்குக் கோபம் கூட ஏற்படுது. அரையும் குறையுமா அலங்கரித்த பிள்ளையோடு பெருமையோடு வலம் வரும் அம்மாக்கள், அப்பாக்கள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ... ம்...சரியம்மா ...ரீயைக் குடியுங்கோ இனிக் கதைப்பம்..."

பெரியவரின் பிரசங்கம்... முடிஞ்சுது. நானும் சாப்பிடப் போறன்.

பாரதி கணேஷ்
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி



# மெர்சல்

## திரைவிமர்சனம்

தளபதி படம் வருகின்றது என்றாலே திரையரங்கிற்கு திருவிழா தான். அதே நேரத்தில் வெற்றிக் கூட்டணி அட்லீயுடன் வருவது கூடுதல் சரவெடி தான். விஜய் திரைப்பயணத்திலேயே அதிக பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட படம் மெர்சல், ரகுமான் இசை, ஸ்ரீ தேனாண்டாள் நிறுவனத்தின் 100வது படம், வடிவேலு ரீஎண்ட்ரீ என இவை அனைத்தையும் தாண்டி முதன் முறையாக 3 விஜய் நடிக்க, தளபதி தெறியை தொடர்ந்து மெர்சலில் மிரட்டினாரா? பார்ப்போம்.

மருத்துவரான மாறன் சிறந்த மனிதநேய தொண்டாற்றியதற்காக பிரான்ஸில் விருது வாங்க செல்கின்றார். அங்கு அவரை சந்திக்கும் ஒரு தனியார் மருத்துவமனை டாக்டர் எங்களுடன் வா என்று கட்டளையிட, விஜய் வர மறுக்கின்றார்.

அதைத் தொடர்ந்து விஜய்யை விலைபேச நினைக்கும் டாக்டர், பிரான்ஸில் நடக்கும் மேஜிக் ஷோவில் கொல்லப்படுகின்றார். இதையெல்லாம் செய்தது யார் என்று பொலிஸ் அதிகாரி சத்யராஜ் தேடி வர மாறனாக இருக்கும் விஜய் பிடிபடுகின்றார்.

அதே நேரத்தில் எஸ்.ஜே.சூர்யா மாறனை யதார்த்தமாக தொலைக்காட்சியில் பார்க்க, அவருக்கு சில நினைவுகள் வந்து உடனே மாறனை கொல்ல கட்டளையிடுகின்றார்.

உடனே அவரின் அடியாட்கள் மாறனை கத்தி முனையில் வைக்க, அதைத்தொடர்ந்து பல சுவாரசிய முடிச்சுக்கள் ஒவ்வொன்றாக அவிழ்கின்றது. எஸ்.ஜே.சூர்யா ஏன் மாறன் விஜய்யை கொலை செய்ய சொன்னார், எதற்கு பிரான்ஸில் அந்த டாக்டரை விஜய் கொன்றார் என பல காட்சிகளுக்கான விடை இரண்டாம் பாதியில் தெரிகின்றது.

விஜய் வன்மேன் ஷோவாக படம் முழுவதும் காலில் சக்கரம் கட்டி சரவெடியாக வெடிக்கின்றார். ஒரே நேரத்தில் மருத்துவராக இருந்துகொண்டு, அப்படியே மஜிக் செய்யும் காட்சிகள் படத்தில் உண்மையாகவே எத்தனை விஜய் என்று யோசிக்க வைக்கின்றது. இதையெல்லாம் விட தூக்கி சாப்பிடுவது மதுரை தளபதி தான்.

வேஷ்டி, சட்டை என மீசையை முறுக்கி அவர் சண்டைபோடும் காட்சிகள் ரசிகர்களுக்கு செம்ம விருந்து. படத்தின் கதைக்களம் மக்களின் மிக முக்கியமான தேவைகளின் ஒன்று, அதில் விஜய் போல் மாஸ் ஹீரோ நடிப்பது பட்டித் தொட்டியெல்லாம் இந்த பிரச்சினையை கொண்டு சென்று மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

அதே நேரத்தில் படத்தின் பல காட்சிகளில் விஜய்யை அரசியலுக்கு கொண்டு வரும் நோக்கத்திலேயே தான் வசனங்கள் நிறைந்துள்ளன. ஏன் அட்லீ இப்படி? என்று கேட்க வைக்கின்றது, ஆனால், 'இன்று சிசேரியன் குழந்தை என்றால் ஆச்சரியமாக பார்க்கின்றார்கள், இன்னும் 30 வருடம் கழித்து சுகப்பிரசவம் என்றால் ஆச்சரியமாக பார்ப்பார்கள்' என எஸ்.ஜே.சூர்யா பேசும் வசனம் தற்போதுள்ள சூழ்நிலையை கன்னத்தில் அறைந்தது போல் உள்ளது.

எஸ்.ஜே.சூர்யா இரண்டு சீன் வந்தாலும் சரி, மூன்று சீன் வந்தாலும் சரி தனக்கான கதாப்பாத்திரத்தில் கலக்கிவிடுகின்றார். ஆனால், அவ்வப்போது ஸ்பைடர் வாசனை வருகின்றது, கொஞ்சம் ரூட்டை மாற்றுங்கள் சார்.

படத்தின் மிகப்பெரும் பலமே மதுரை போஷன் தான். விஜய்க்கும், நித்யா மேனனுக்கும் உள்ள கெமிஸ்ட்ரி மிகவும் கவர்கின்றது. அதிலும் அவர் நித்யா மேனனிற்கு பிரசவம் நடக்கும் போது தன் மூத்த பையனிடம் கதை சொல்லும் காட்சி செம்ம க்ளாஸ்.

அதே நேரத்தில் படத்தின் நீளம் தான் பெரிய பிரச்சினையாகவே இருக்கின்றது. என்ன தான் காட்சிகள் நன்றாக இருந்தாலும் படத்தின் நீளம் ஒரு கட்டத்தில் பொறுமையை சோதிக்கின்றது. அதிலும் கிளைமக்ஸ் எல்லாம் எம்.ஜி.ஆர் காலத்து பார்முலா.

டெக்னிக்கலாக படம் மிகவும் பலமாக உள்ளது, அதிலும் விஷ்ணுவின் ஒளிப்பதிவு முதல் படம் என்று யார் சொன்னாலும் நம்ப முடியாது. ரகுமானின் பாடல்கள், பின்னணி இசை ரசிக்க வைக்கின்றது, ஆளப்போறான் தமிழன் ரிப்பீட் மோட் தான்.

படத்தின் கதைக்களம் தற்போது நாட்டில் நிலவும் விடயங்களுக்கு மிக ஏற்ற கதை. விஜய் ஒரே ஆளாக படத்தை தாங்கிச் செல்கின்றார். பாடல் காட்சிகளில் எல்லாம் இந்த வயதிலும் நடனத்தில் தூள் கிளப்புகின்றார்.

மதுரை ப்ளாஷ்பேக் காட்சிகள். விஷ்ணுவின் ஒளிப்பதிவு, ரகுமானின் இசை சத்யராஜ், காஜல், சமந்தா இவர்கள் எல்லாம் படத்தில் இருக்கின்றார்கள். ஆனால், ஏன் இருக்கின்றார்கள் என்பதை மக்கள் மட்டுமில்லை இயக்குநரே மறந்துவிட்டார்.

வடிவேலுவின் எந்த ஒரு காமெடி காட்சியும் பெரிதும் க்ளிக் ஆகவில்லை.

படத்தின் நீளம், இன்னும் கொஞ்சம் காட்சிகளை குறைத்திருக்கலாம். மொத்தத்தில் மெர்சலில் விஜய் சொன்னது போல் அவர் மிரட்டிவிட்டார், ஆனால், அட்லீ மிரட்டவில்லையே...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரத்திலாடும் அரசியலமைப்பு!

புதிய அரசியலமைப்புக்கு மகாநாயக்கர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும் ஊடகங்களே தேவையற்ற புரளியைக் கிளப்பிவிட்டுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

ஆனால், புதிய அரசியலமைப்புக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே மகாநாயக்கர்கள் உள்ளனர் என்பதை அஸ்கிரிய பீடத்தின் செயலாளர் மெதகம தம்மானந்த தேரர் உறுதிப்படுத்தியுள்ளார்.

புதிய அரசியலமைப்பு வேண்டாம் என்ற நிலைப்பாட்டுக்கு அஸ்கிரிய , மல்வத்த பீடங்களின் காரக சங்க சபாவின் கூட்டுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்குப் பின்னால் அந்தப் பீடங்களின் பீடாதிபதிகளே உள்ளனர் என்பதையும் அவர்களை மீறி இந்த முடிவு எடுக்கப்பட வாய்ப்பில்லை என்றும் தம்மானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்த பௌத்த பீடங்களை மீறி அரசாங்கத்தால் ஒருபோதும் புதிய அரசியலமைப்பை கொண்டுவர முடியாது. ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும்; தாம் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதற்காக அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை வழங்க முடியும். ஆனால், மத்தியில் அரசியலில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றால் பௌத்த பீடங்களின் அனுமதியை- ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும்.

ஏனெனில் இது சிங்கள பௌத்த நாடு. சிங்களவர்கள் தமிழர்களின் வாக்குகளைப் பெறலாம், சிறுபான்மையினர் சிங்களவர்களின் வாக்குகளைப் பெறலாம். ஆனால், அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதே யதார்த்தம்.

அதேவேளை புதிய அரசியலமைப்புக்கு மகாநாயக்கர்கள் எதிர்ப்பில்லை என்றும்ஊடகங்களே தேவையற்ற புரளியைக் கிளப்பிவிடுவதாகவும் கண்டித்த பிரதமர் ரணில், மகாநாயக்கர்களின் நிலைப்பாட்டை அறியமுற்படாதது ஏன்? என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

மகாநாயக்கர்கள் புதிய அரசியலமைப்பிற்கு எதிர்ப்பில்லை என்றால் அதனை அவர்கள் தான் வெளிப்படுத்த வேண்டும். அப்போது தான் சர்ச்சைகளைத் தவிர்க்க முடியும்.

எதுவாயினும் புதிய அரசியலமைப்பு விவகாரம் மீண்டும் சூடு பிடித்துள்ளது.

தனிநாடு உருவாகிவிடும் என்ற அச்சத்துடன் புதிய அரசியலமைப்பை நோக்கும் ஒரு தரப்பும் சமஷ்டி ஆட்சி முறையைப் புறக்கணித்து ஒற்றையாட்சிக்கு வலுச் சேர்க்கும் அரசியலமைப்பு தான் மீண்டும் கொண்டு வரப்படவுள்ளது என மறுதரப்பும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன.

புதிய அரசியல்மைப்பு உருவ க்க முயற்சி நல்லாட்சி என்று சொல்லப்படும் இந்த அரசிற்கு பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது. நிறைவேற்ற முடியாத பல வாக்குறுதிகளை , வழங்கிவிட்டோமோ என்று ஆட்சியாளர்கள் குழம்பிப்போயுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் உருவான பொது எதிரணியில் போட்டியிட்டு ஜனாதிபதியானார் மைத்திரிபால சிறிசேன. அவர் தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவுள்ளதாலும் அக்கட்சி ஆட்சியில் பங்கேற்றுள்ள்தாலும் பல இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை இல்லாது ஒழிக்கப் படும் என்று வாக்குறுதி வழங்கி தேர்தலில் போட்டியிட்ட மைத்திரியால் ஜனாதிபதியான பின்னர் அதனை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கத் தாயாரில்லை என்பதை அக்கட்சியின் அமைச்சர்கள் திட்டவட்டமாக கூறிவருகின்றனர்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்துக்கட்டுவதில் மைத்திரி முன்னர் காட்டிய முனைப்பு இப்போது இல்லை. மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்காக சில அதிரடி முடிவுகளை அவர் எடுத்த போதும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர் கடந்த இரண்டாண்டுகால ஆட்சியில் அதிரடித் திருப்பங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

சிங்கள மக்களிடத்திலும் சிறுபான்மை மக்களிடத்திலும் இந்த ஆட்சியாளர்கள் குறித்து அதிருப்தியே நிலவுகிறது. ஏன் ஆட்சியில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அமைச்சுப் பொறுப்புக்களிலுள்ள முஸ்லிம்களுக்கும் இதேநிலைதான்.

மகிந்தவை ஆட்சியிலிருந்து அகற்றினால் எல்லாம் சரியாகிவிடும் என்ற மாயைத் தோற்றத்தை ஏற்படுத்தி மக்களின் வாக்குகளை கொள்ளையிட்டவர்கள் கொள்ளையடிப்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

நல்லாட்சி என்று சொல்லப்படும் இந்த ஆட்சியிலும் பல அமைச்சர்கள் மீது குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் மீது நாளுக்கு நாள் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் பெருகி வருகின்றன.

பாரிய மோசடிகளை விசாரணை செய்வதற்காக உருவாக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவில் ஒவ்வொருநாளும் ஒருவர் ஆஜராகி வருகின்றனர்.

இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடி விசாரணையில் சிக்கிய ரவி கருணாநாயக்க அமைச்சர் பதவியை இழந்தார். இந்த மோசடிக்குத் துணைபோன குற்றச்சாட்டின் பேரில் ஐ.தே.கவின் முக்கிய அமைச்சர்களான மலிக் சமரவிக்கிரம , கபீர் ஹாசிம் ஆகியோர் அண்மையில் விசாரணைக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

இதைவிட கடந்த இரண்டாண்டுகால ஆட்சியில் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் பலவற்றை ஐ.தே.க அமைச்சர்கள் எதிர்கொள்ள நேரிட்டது.

மகிந்த காலத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகளை விசாரிக்க மைத்திரி-ரணில் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட ஆணைக் குழுக்களின் விசாரணைகள் ஐ.தே.கவின் அரசியலை இல்லாமல் செய்யும் நோக்குடன் முன்னெடுக்கப்படுகிறதா?

அல்லது மகிந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை விட ஐ.தே.கவினர் ஆட்சிக்கு வந்தவுடனேயே விசாரணை நடத்துமளவிற்கு மோசடிகளில் ஈடுபட்டுவிட்டனரா? என்பதை காலம்தான் உணர்த்தும்.

ஒரு புறம் புதிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சியில் மாட்டிக்கொண்டுள்ள ஐ.தே.க. மறுபுறம் அமைச்சர்களின் ஊழல் மோசடிகளால் திக்குமுக்காடி வருகிறது.

மகிந்தவை ஆட்சியிலிருந்து அகற்ற மைத்திரியை அரவணைத்த ஐ.தே.க. தான் நினைத்தபடி ஆட்சி நடத்த முடியாது அல்லற்படுகிறது.

புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட வேண்டுமானால் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வேண்டும் அல்லது சர்வஜென வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற நிலைமாறி பௌத்த பீடங்களின் அனுமதி வேண்டும் என்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையின மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நிராகரித்த முன்மொழிவுகளை உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பணிகளை முற்றுமுழுதாக கைவிடுமாறு கோரும் பௌத்த பீடங்கள் தமிழ் , முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளும் அரசியலமைப்பை கொண்டுவர விட்டுவிடுமா? அது ஒருபோதும் சாத்தியப் படாது.

தற்போதைய சூழ்நிலையில் புதிய அரசியலமைப்பு அந்தரத்தில் ஆட ஆரம்பித்துவிட்டது . இதனை ஐ.தே.கவால் ஒருபோதும் ஒரு நிலைப்படுத்த முடியாது. அரசியலமைப்பு உருவாக்கத்தைக் காரணம் காட்டி நிரந்தர அரசியல் தீர்வை அரசாங்கம் இழுத்தடிக்கிறது என்பதே உண்மை.

## வாக்குறுதிகளை நிறைவேற்றுமா அரசு?



எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# facebook

# மெல்லிய நூல்

பாபு அவருக்கு மிகவும் பழகிப் போன சகஜபாவனையுடன் இது என் அணுக்கத் தொண்டர். சோகன்ராம் என்றார்.

வயோதிபர் மேலும் கண்களை இடுக்கியவராக "தாங்கள் வைசியர். வைணவர் என்றும் கேள்வி உண்டு. இவரது முக அமைப்பு என்றார்.

சோகன்ராம் எங்கும் பார்க்காத பார்வை பயின்றிருந்தான். அவனை மொத்தப் பிரபஞ்சமும், மொத்த ஜடமும் பார்த்துக் கொண்டிருந்தது. நான் வைணவன். இவர் ஹரியின் மைந்தன் என்றார் பாபு.'

வயோதிபரின் குரல் மூச்சிளைப்புடன் எழுந்தது 'இதற்கு தர்மசாஸ்திர அனுமதி உண்டா?

தேவையில்லை. அனுமதி ராமனிடமிருந்து எனக்குக் கிடைத்தது. இது வெட்டிப்பேச்சு" என்றார் வயோதிபர்.

ராமனிடம் நான் பேசினேன். உங்களால் பேச முடிந்தால் கேட்டு உறுதி செய்துகொள்ளலாம் என்றார் பாபு புன்னகையுடன்.

வயோதிபர் கடும்கோபத்துடன் எழுந்து எதுவும் பேசாமல் நடந்தார். பாபு "ராம் ராம்" என்றபடி ராட்டினத்தைச் சுழற்றினார். சுருண்டு முறுகிய நேர்த்தியான நூல் வெளிவந்து சீராக வட்டையில் சுற்றுவதை சோகன்ராம் பார்த்தான்.

பிசிரற்ற அந்த இயக்கம் பார்க்கப் பார்க்க மனதில் அமைதியைக் கொண்டு வந்தது. எழுந்து வெளியே நடக்கும்போது அறைக்குள் உடல்கள் தளர்வு கொள்வதை அறிய முடிந்தது. அறையை விட்டு வெளியே வந்ததும் அவனும் புதிய காற்றுக்குள் இறங்கியது போல உணர்ந்தான். மனதின் ஆழத்தில் இன்னதென்று தெரியாத ஆதுரம் ஒன்று ஏற்பட்டது. அதைத் தவிர்க்க முயல்கையில் பெருகி உடலைக் கனக்க வைக்கும் ஏக்கமாக அது மாறியது.

அந்த ஏக்கம் எப்போதோ முளைத்து வளர்ந்து வருகிறது.



பர்த்வானில் அவனது கிராமத்திற்குத் திரும்ப வேண்டும் என்ற ஏக்கமா அது? ஆனால், அங்கு என்ன இருக்கிறது அவனுக்கு? பூமிகார்களின் கண்களில்படாது நடமாட வேண்டும்.

அப்படியும் வாரம் ஒருமுறை கல்லடியோ செருப்படியோ கிடைத்துவிடும். இரவு பகல் எந்நேரமும் ஓயாத பசி. வெளிச்சம் இருக்கும் நேரமெல்லாம் கடும் உழைப்பு. முன்பு சகஜமான உரையாடலாகத் தோன்றிய வசைச் சொற்களில் ஒன்றே ஒன்று போதும், இன்று அவனை அந்த இடத்திலேயே உருக்கிச் சாம்பலாக்கி விட. அவனுடைய உறவினர்களும் சுற்றத்தினர்களும் இளம் பருவத் தோழர்களும் அங்கு தானிருப்பார்கள். மலமும் குப்பையும் நாறும் பிய்ந்த குடிசைகளில் தொற்றுநோய்களும் தீரா நோய்களும் நிரம்பிய உடல்களுடன் குடி, துணுக்குறச் செய்யும் கொடும் வன்முறை, மூர்க்கமான அன்புகள், உறவுகள், ஆங்காரமான பரஸ்பர துவேஷங்கள், அறுபடாது நீளும் வம்புகள், பொறாமைகள், கோழைத்தனங்கள், சதிகள், அங்குள்ள காற்றில் ஒரு மூச்சுகூட இனி அவன் விட முடியாது. அவர்களுடைய உணவில் ஒரு கவளம் கூட இனி அவன் உண்ணமுடியாது.

அவர்களிடம் ஒரு சகஜமான புன்னகையைக்கூட இனி பரிமாறிக் கொள்ளமுடியாது. படித்த நூல்களும், சென்ற ஊர்களும், சந்தித்த மனிதர்களும் அவனை வெகுதூரம் இட்டுவந்து சேர்த்தாயிற்று.

நினைவுகள் கூட திரும்பிப் போய் பாதியில் தேய்ந்து மறையும் தூரம். இனி அவனுக்குத் திரும்பிப் போக ஓர் இடமில்லை. மீண்டும் பழைய சோகன்ராமாக மாறினால் திரும்பிவிடலாம். ஆனால் அது சாத்தியமில்லை. இழந்தது எதை, அந்தப் பழைய சோகன்ராமையா?

ஆறுவருடம் முன்பு தன் கிராமத்திற்கு வெளியே சேரிக்குளத்தின் சேற்றில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது புழுதிச் சாலை வழியாக ஒரு சிறு குழு நடந்து வருவதைக் கண்டான். அவர்களை நெருங்கிப் போய் புதர்களில் ஒளிந்தபடி கவனித்தான். தாக்க வருவார்களானால் எதிர்கொள்ளக் கையில் கல் இருந்தது. முகப்பில் வந்த வயதான கரிய மனிதர் சோகன்ராம் அவரது பெரிய காதைப் பார்த்து பன்றிக் காது என்று சொல்லிச் சிரித்துக் கொண்டான் அவனை பார்த்துப் புன்னகை செய்து. "உன் பெயர் என்ன?" என்றார். சோகன்ராம் அவனுக்கு தெரிந்ததிலேயே மிக ஆபாசமான வார்த்தையை ஆக்ரோஷமாகச் சொல்லிவிட்டு. "பன்றிக்காதுப்பயலே!" என்று கூவியபடி ஓடினான்.


சற்று தூரம் ஓடிய பிறகுதான் எவரும் பின்தொடரவில்லை என்பது தெரிந்தது. எனவே திரும்பி வந்தான். மீண்டும் 'பன்றிக்காது' என்று கூவினான். அந்த வயோதிபர் சிரித்தபடி "நான் கேட்டதற்கு நீ பதில் கூறவில்லையே, உன் பெயர் என்ன?" என்று கேட்டார். சோகன்ராம் தனக்குத் தெரிந்த ஆபாச வார்த்தைகளை எல்லாம் படுவேகமாக உதிர்த்தான். ஓடத் தயாராக நின்று காத்திருந்தான். அந்த மனிதர் வாய் திறந்து சிரித்துவிட்டு பேசாமல் நடந்தார்.

சோகன்ராம் கெட்ட வார்த்தைகளைக் கூவியபடி பின்னால் நடந்தான். அவர்கள் அவனைப் பொருட்படுத்தவில்லை.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1226


### கௌசிகன்



### டிலக்ஷன்




### நிலோஜன்




### நிரஞ்சனா




### தர்சிகா




### கஜானி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறை கிளை நூலகம்



யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 106

## உடல் நிறையை குறைப்பதற்கான இலகுவான படிமுறைகள் - 1

சரியான படிமுறைகளை கடைப்பிடிப் போமாயின் உடல்நிறையை குறைத்து உடல் அழகையும் ஆரோக்கியத்தையும் மெருகூட்டுவது இலகுவானதே.

உடல் நிறையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற ஒரு உணர்வு பல்வேறு தரப்பினரிடையேயும் குறிப்பாக இளம் வயதினரிடையே மேலோங்கிவருவது ஒரு நல்ல அறிகுறியாகும். உடல்நிறையை குறைத்துக் கொண்ட பலர் களைப்பு நீங்கி மூட்டு நோ, நாரிநோ என்பன குறைந்து, பல்வேறுபட்ட நோயின் தாக்கங்கள் குறைந்து பாவிக்கும் மருந்துகளையும் குறைத்துக் கொண்டு ஆரோக்கியமாக வாழ்வது மேலும் பலரை நிறைகுறைக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்கு தூண்டுகோலாக இருக்கிறது.

**நிறைகுறைப்பின் முதலாவது படிநிலை எமது சிந்தனை ஓட்டத்தில் சில மாறுதல்களை செய்வதாகும். அதாவது நிறை குறைப்பு சம்பந்தமாக எம்மிடமுள்ள சில பிழையான அபிப்பிராயங்களை தெளிவுபடுத்திக்கொள்ளுதல் ஆகும்.**

உடல் நிறையை குறைப்பது இயலாத காரியம், பட்டினிகிடக்க வேண்டி வரும் நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினம் என்ற ஒரு தப்பபிப்பிராயம் பொதுவாக நிலவி வருகிறது. அத்துடன் மிகவும் சிறிதளவு உணவை உட்கொண்டும் நிறை தானாக கூடிவருகிறது. எவ்வளவு வேலைகளைச் செய்தும் உடற்பயிற்சி செய்தும் நிறைகுறைவதாகத் தெரியவில்லையே! என்று எல்லாம் ஆதங்கம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

**"இது பரம்பரை உடம்பு இதனைக் குறைக்கவே முடியாது. எனது நிறை நெடுகவே இப்படித் தான்"** என்று சொல்லி திருப்திப்பட்டுக்கொள்ளும் மனநிலையும் காணப்படுகிறது.

**"சிறுவர் முதல் பெரியவர்கள் வரை பருத்திருப்பதே பலம் நிறை குறைத்து போனால் உடல் பலவீனப்பட்டு விடும், உடல் அழகு கெட்டு விடும்"** என்று பயப்பட்டுக் கொள்பவர்களும் இருக்கிறார்கள்.

**"உணவை கட்டுப்படுத்தி வாழ் வதும் ஒரு வாழ்க்கையா? உணவை ஒறுத்து வாழ்வதன் அர்த்தம் என்ன?"** என்று எல்லாம் 'உணவை ஒறுத்துத் தான் நிறை குறைக்கலாம் என்ற தப்பபிப்பிராயங்களும் நிலவுகின்றன.

**"உணவை வீணடிக்கக் கூடாது, கடவுளுக்கு ஏற்காது"** என்று எண்ணி மிச்ச சொச்ச உணவுகளை எல்லாம் உண்டு உடல் பருத்து உடம்பு வீணாகிப்போய் நோய்களை தேடிக் கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள்

**"நான் மற்றவர்களுடன் ஒப்பிடும் பொழுது சாப்பிடுவது மிகவும் குறைவு, ஆனால் நிறை தானாக அதிகரித்து வருகிறதே"** என்று வேதனைப்படும் மனங் களும் உண்டு.

**"நல்லாய் சாப்பிடு, நல்லா வேலை செய், நிறை தானாகக் குறையும்"** என்று பலரின் அறிவுரைகளைக் கேட்டு ஏமாந்து போனவர்கள் பலர்.

ஆரோக்கியமாக சுவையாக நிறைவாக உண்டு எமது நிறையை சரியான அளவில் பராமரிக்கும் கலையை கற்றுக்கொள்ளும் மனநிலையை வளர்த்துக்கொள்ள முயல வேண்டும்.

நிறையை குறைத்துக் கொள்வதற்கு பட்டினி கிடக்கவேண்டிய அவசியமில்லை. பட்டினி கிடந்து நிறையை குறைத்துக் கொள்வது உடல் ஆரோக்கியத்திற்கும் நல்லதல்ல. நிறை குறைப்பதற்கு முயற்சி எடுக்கும் காலத்திலே ஆரோக்கியமான உணவு வகைகளை உண்ணுவதை நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை. இந்த காலத்திலே சுவையான உணவுவகைகளை உண்ண முடியாது என்று தப்பபிப்பிராயமும் கொள்ளத் தேவையில்லை.

ஒருவர் அளவான உடல்நிறையை பேணுவது அவர் வாழும் காலத்தை அதிகரிக்கச் செய்வதுடன் அவரின் செயற்றிறனையும் கற்கும் திறனையும் கூட்டும் என்பது பல ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக் கப்பட்டிருக்கிறது.

**நிறையை சரியான அளவில் பேணாதவர்களுக்கு நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், பாரிசவாதம், மூட்டு சம்பந்தமான நோய்கள், நாரி சம்பந்தமான நோய்கள், புற்று நோய்கள், மாரடைப்பு, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், மாதவிடாய் கோளாறுகள், கர்ப்பம் தரிப்பதில் தாமதம், குடும்ப வாழ்வில் ஆரோக்கிய குறைவு போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் ஆகும்.**



பசிகிடந்து, பட்டினி கிடந்து துக்கப்பட்டு, துயரப்பட்டு, கஷ்டப்பட்டு, கவலைப்பட்டு, வெக்கப்பட்டு, வேதனைப்பட்டு செய்யும் நிறைகுறைப்பு ஆரோக்கியத்திற்கு வழிவகுக்காது. மன ஊக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஆரோக்கியமான சுவையான உணவுகளை உண்டு நிறைகுறைப்பது எப்படி என்று அறிய ஆர்வம் பிறக்க வேண்டும்.

உடல்நிறை குறைப்பு நடைமுறைப் படுத்துவதற்கு தடைக்கல்லாக ஒரு விடயம் பொதுவாக நிறைகூடிய அனைவரிலுமே காணப்படும். அந்த தடைக்கல் அடையாளம் காணப்பட்டு அப்புறப்படுத்தப்பட வேண்டும். இந்த தடைக்கல் அகற்றப்பட்டால் மட்டுமே நிறைகுறைப்பை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி அளவான உடல் நிறையை தொடர்ந்து பேணமுடியும்.

### அது என்ன தடைக்கல்?

"நான் உணவு விடயத்திலே கவனமான ஒருவர் உண்ணும் அளவு எவ்வளவோ குறைவு சில வேளைகளில் உண்ணுவதே இல்லை. பல உணவுவகைகளை தவிர்த்து விட்டேன் நிறை ஏன் அதிகரித்து வருகின்றது என்பது ஒரு புரியாத புதிராக இருக்கிறது. என்று எண்ணிக்கொள்ளும் ஒரு ஆழமான மன உணர்வே அந்த தடைக்கல் ஆகும்.

"உணவு விடயத்தில் எங்கோ தவறு நடக்கிறது. இதுவே நிறை அதிகரிப்பிற்கு அடிப்படை அதனை நிவர்த்தி செய்ய வேண்டும்" என்ற விடயத்தை அவர்களது மனது ஏற்றுக்கொள்ள மறுக்கும். நிறை அதிகரிப்பிற்கு வேறு ஒரு விடயம் தான் காரணம் என நிறுவ மனம் எத்தனிக்கும்.

எனவே நிறைகுறைப்பின் முதலாவது படிநிலை உடல் நிறை அதிகரிப்பு சம்பந்தமாக எமது மனதில் இருக்கும் சில தவறான சிந்தனை ஓட்டங்களை மாற்ற முனைவது ஆகும்.

**தொடரும்**

**சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

### நிறைகுறைப்பு ஆய்வில் பங்கெடுங்கள்

நீங்கள் உங்கள் நிறைகுறைப்பை வெற்றிகரமாக செயற்படுத்த முடியாமைக்கான பிரதானமான காரணமாக கருதுவது?

- இது சம்பந்தமாக போதிய அறிவு இல்லை
- நிறை குறைப்பதில் ஆர்வம் இல்லை
- பலமுறை முயற்சித்தும் நிறை குறையவில்லை
- பசி, களைப்பு காரணமாக முயற்சியை தொடர முடியவில்லை
- செயற்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்
- வேறு காரணங்கள்

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் உங்கள் பதிலை தெரிவு செய்து (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்து விடுங்கள். இந்த ஆய்வின் முடிவுகள் அடுத்த இதழில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக்குழு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org